Sangathamil

# சங்கத்தமிழ்

குரல் – 15

சர்வதேச மின் செய்தித்தாள்

15 டிசம்பர் 2021





## தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்

MORTGAGE ALLIANCE
Access Inc.
Independently Owned & Operated | FSCO: 11404
For All Your Mortgage Needs
• Purchase • Refinance
• First | Second Mortgage • Equity Line of Credit
Siva Sethunathan, B.A.
Mortgage Agent
416 725 1732
8130 Sheppard Ave E Suite 209
Toronot, ON M1B 3W3

NISHANTHAN LAW OFFICE
SERVICES
• Purchasing a Residential Property
• Selling a Residential Property
• Residential Mortgage Refinancing
• Wills and Powers of Attorney
NOTARY SERVICES
Umananthini Nishanthan
Barrister, Solicitor & Notary Public
416-289-9229
nishanthanlaw@bellnet.ca
www.nishanthanlaw.com
1200 Markham Rd., Lower Level Unit 5 & 7
Scarborough, On. (Markham / Ellesmere)

RANI TAILORS & FASHIONS
25 வருடம் அனுபவம் மிக்க மற்றும்
Sri Lanka, India, Germany போன்ற
நாடுகளில் தையல் கலையில் பிரபலமான
புஸ்பராணி மணியம் அவர்கள் இப்போது
Canadaவில் சேவையாற்றுகிறார்
Celebrating 25 Years of Service
தொடர்புகளுக்கு:
647.836.0654 Cell
647.945.8351 Home

LONGO LAWYERS
Our Clients aren't just a file, each is a life.
We specialize in handling serious and life-changing personal injury claims resulting from all types of accidents. Our team of experienced trial lawyers is dedicated to providing the highest possible standard of legal services. If English isn't your first language, we have members of our team that are fluent in Tamil.
Shenthuran Subramaniam
B.Sc., M.B.A., J.D.
Personal Injury Lawyer
Cell: 647.992.2417
TP: 416.800.4232 Fax: 416.800.6247
Toll Free: 1.844.800.4232
4950 Yonge St, Suite 401, Toronto ON M2N 6K1

A TAMILAN CARPET CLEANING PROFESSIONAL STEAM
CAR & VAN
உங்கள் வீடு
தேடி வந்து
செய்து கொடுக்கப்படும்
வீடுகள், கொண்டோக்கள், வாடகை
வசிபபிடங்கள், வீட்டின் படிகள், தரை
விரிப்புகள், சோபாகள், மெத்தைகள்
வாகன உட்புறம்...
இந்த விளம்பரத்தாலோ எந்த
வேலைகளும் நிரந்தரமாகாது
416.831.6343
416.265.6825
கார்த்திகேசு செல்வம்
Karthigesu Selvam

Annai's PRAGATI SIDDHA HERBAL CLINIC
A total wellness according to Natures Way!
Treatment based on Ancient Siddha Philosophy of Healing.
MASTER HEALER
PREMILA.S
Hereditary Genetic Siddha Practitioner (Royal Physician Treatment),
Spagyric Alchemist (CAN)
Alchemist (IND),
Natural Medicine Practitioner© (CAN)
Canada, Europe & India
TEL: 1647-278-3100
Email: pragatishc@gmail.com | Web: www.pragatisiddha.com

B.J டெய்லரிங்க & ஜுவலரி
TAILORING & JEWELLARY CLASSES
We provide training in
Jewellery Making & Tailoring
Classes Available
ONLINE CLASSES AVAILABLE
உங்கள் தொடர்புகளுக்கு:
416.720.4472
jegathees2007@gmail.com

SARA TAILORS & FASHION
தையற் கலையில் 38 வருட அனுபவம் மிக்கவரின்
மேற்பார்வையில் தையல் வகுப்புக்கள் நடாத்தப்படுகின்றன
பாடத்திட்டம்: 3 மாதம், 6 மாதம், 2 வருடம்
65 வயதானவர்களுக்கு படிப்பதற்கு
$100 மட்டும்
சாரா தையல் பயிற்சி நிலைய
ஆசிரியர் திருமதி
சரஸ்வதி பாலராசா
Saree Blouse, Wedding, Birthday Garments, Flower Girl's Dresses
Ladies Garments, Maternity Gowns, Churithar, Children's Garments
Coat, Pants Hem, Alterations, Ironing
Sewing Classes (Full time & Part Time) Sewing Machine Repairs Etc.
2699 Eglinton Ave. East, Scarborough, ON. (Brimley & Eglinton)
Tel: 416-265-0025 / 647-270-1949 | Cell: 416-910-5351

K.S PAINTING & HARDWOOD
PROVINTING THE BEST SERVICE
NIRANJAN SELVARAJAH 647.406.7706
www.kspaintingandhardwood.com

Ideal Auto Tech
For all your vehicle repair and Service needs
Ontario
www.idealautotech.com
All Mechanical Services - Muffler & Tire Works
Wheel Alignment - Engine & Transmission Repairs
To Wing Services
We do Vehicle Appraisal & Safety Inspection
T: 416 752 LUBE (5823) C: 647 219 5922 F: 416 752 0457
1815 Lawrence Ave., East, Unit 02, Scarborough
(Pharmacy & Lawrence) ON M1R 2Y3

SCARBOROUGH HOME Renovation INC
...your Home Improvement Specialists
24 HOUR EMERGENCY SERVICE
Theepan
Cell: 647 218 7157
VALUE PACK HOME MAKEOVER:
• All General Home Repairs
• Basement Renovation
• Carpet Installation
• Drywall Installation
• Hardwood Flooring Installation
• Washroom Remodeling
• Kitchen Cabinets
• Kitchen Cabinets Installation
• Painting
• Plumbing
• Tiling
www:shr1.ca e-mail: y2k21@hotmail.com
At Scarborough Home Renovation, We' ve definitely get the Experience and the know-how to make your Dream Renovaiton...a practical Reality!

SELVAM GENERAL PEST CONTROL
Cockroaches, Silverfish, Carpet Beetles, Moths, Fleas
Rodents, Spiders, Wasps/Bees/Hornets & Ants...
எலி, பூச்சி தொல்லையிலிருந்து விடுபட
உடங்களுக்கு உதவிட 24 மணி நேரமும்
7 நாட்களும் இலவச மதிப்பீட்டுடன் 100 வீத
உத்தரவாதத்துடன் சேவையாற்றிட அழையுங்கள்
இந்த விளம்பரத்தாலோ எந்த வேலைகளும் நிரந்தரமாகாது
416.831.6343
416.265.6825
கார்த்திகேசு செல்வம்
Karthigesu Selvam

வீடு வாங்குதல், விற்றல், குறைந்த வட்டி வீதத்தில்
மோட்கேஜ் ஒழுங்குகள் மற்றும் இலவச
ஆலோசனைகளும் வழங்கப்படும்
Nesan Chathanantham
Broker
Dir: 416-827-7343
Email: CCN5@hotmail.com
RE/MAX COMMUNITY Realty Inc., Brokerage
RAISING YOUR VALUE
1265 morningside Ave Suite #203
Toronto, Ontario M1B 3V9
Tel: 416.287.2222 | Fax: 416282.4488

Samraj Insurance Group Inc.
வாகனக் காப்புறுதி, ஆயட் காப்புறுதி,
வீட்டுக் காப்புறுதி, பயணக் காப்புறுதி
உட்பட அனைத்துக் காப்புறுதித்
தேவைகளுக்கு அழையுங்கள்
Siva Ananthamoorthy (Licensed Insurance Agent)
RE/ON வீடு வாங்க - விற்க சிறப்பான சேவை
Dr. Ananthamoorthy
416.823.3686 / 647.857.0086

அழகிய மனை நிறைவான வாழ்வின் தொடக்கம்! வீடு வாங்க விற்க அல்லது
அது தொடர்பான விபரங்கள் அறிய இலவச ஆலோசனைக்கு அழையுங்கள்
Higher Standard Agents... Higher Results!
HomeLife Landmark Realty Inc. Brokerage
Independently Owned and Operated
Parithi Sinnathamby
Sales Representative
416-904-7444
pari.sinnathamby@gmail.com
7240 Woodbine Ave., Suite 103, Markham, ON. L3R 1A4 Tel: 905-305-1600 Fax: 905-305-1609

MT CPA CA
MAYURAN THARMABALAN
PROFESSIONAL CORPORATION
CHARTERED PROFESSIONAL ACCOUNTANT
* AUDIT
* REVIEW ENGAGEMENT
* NOTICE TO READER
* BUSINESS ADVISORY
* CONTROLLERSHIP SERVICES
* CORPORATE TAXES
* PERSONAL TAXES
* FINANCIAL PLANNING
* CRA AUDITS
* PAYROLL
* BOOKKEEPING
Mayuran Tharmabalan, CPA, CA, LPA
647-748-6344 647-989-6298
647-748-6444 www.tharmabalan.ca
Suite 304 - 5200 Finch Ave East, Scarborough, ON M1S 4Z5
A LICENSED PUBLIC ACCOUNTING FIRM

Preparation of Income Taxes
T1 and T2 with E/File
Location:
Unit 9-40 Winges Rd
Woodbridge, ON
L4L 6B2
Pearl Fortune Canada
Head Office
101 Laird Dr., Markham
ON L3S 3N6
Tel: 905.554.5606
Fax: 905-554-3236
Please contact:
Yo K Gamar ( C.M.A)
Cell : 416-917-7263
Accountant since 1993

Residential, Commercial, Refinance
ALL YOUR MORTGAGE NEEDS
Ari Paramalingam
Mortgage Agent
T: 905.781.1356
F: 1.888.653.5161
E: arikaran@hotmail.com
MORTGAGE ALLIANCE
402-2 Country Court Blvd
Brampton, ON L6W 3W8

GRAND OFFER
this Offer Only December 31th to January 31th, 2022.
MAGAZINES
7" x 5" Size, 100 copys
Inside 32 Pages, B&W 20lb
with colour glossy cover
c $ 310.00
+ Graphic Extra....
SIGNS Banners Design Solutions
Large Format Digital Printing
Design Only
c $ 9.99 /Sq. Ft (c$ 34.99 / h.)
1000 Business Cards
with out design c $ 59.99
One Side - 16pt Card Stock
with out design c $ 29.99
One Side, 10pt Card Stock
We print all kind of products
Call Me : Silver Print House - 647 712 1266

## முக்கிய அறிவித்தல்

உங்கள் வணிக விளம்பரங்கள், அறிவித்தல்கள்,
சிறு விளம்பரங்கள்
சங்கத்தமிழ் சர்வதேச மின் செய்தித்தாள் ஊடக
மக்களிடம் சென்றாடைய
இன்றே அழையுங்கள்: 437.345.4203,
sangathamilcanada@gmail.com

# தேசிய தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களின் சிந்தனையிலிருந்து

**நான் பெரிது**
**நீ பெரிது என்று வாழாமல்**
**நாடு பெரிதென்று**
**வாழுங்கள்.**
**நாடு நமக்குப் பெரிதானால்**
**நாம் எல்லோரும்**
**அதற்குச் சிறியவர்களே,**
**எமது**
**நிலையற்ற வாழ்விலும் பார்க்க**
**நாட்டின் வாழ்வு பெரியது.**






சங்கத்தமிழ்

## தொடர்புகளுக்கு

**தொலைபேசி**
437 345 4203
**மின்னஞ்சல்** (Email)
sangathamilcanada@gmail.com
**முகநூல்** (Facebook)
Sangathamil Canada

அனைத்து உரிமைகளும் சங்கத்தமிழ் வெளியீட்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த வெளியீட்டில் துல்லியமான தகவல்களை வழங்க ஒவ்வொரு முயற்சியும் செய்யப்படுகிறது. எந்தவொரு குறைபாடுகளுக்கும் பிழைகளுக்கும் சங்கத்தமிழ் வெளியீடுக்கும் பொறுப்பல்ல. விளம்பரங்களுக்கும் மற்றும் கட்டுரையின் உள்ளடக்கங்களுக்கும், விளம்பராதார் அல்லது எழுத்தாளர்கள் பொறுப்பாவார்கள்.

All the rights reserved to Shangathamil. Every effort is made to provide accurate information in this publication. Shangathamil is not responsible for any omission or errors. Advertiser or writers shall be responsible for the contents of the advertisements and articles.




# லெப். கேணல் அப்பையா

## 16.12.1933 - 24.12.1997




எமது இயக்கத்தின் மூத்த உறுப்பினர்களுள் ஒருவரான லெப். கேணல் அப்பையா அவர்களின் வீரச்சாவுச் செய்தி உறுதி செய்யப்பட்டுள்ளது. 24. 12. 1997 அன்று மல்லாவிப் பகுதியில் காணாமல் போயிருந்த அவருக்கு நேர்ந்த கதியறியாது எமது தேசம் தவித்திருந்தது.

அது ஜெயசிக்குறு நடவடிக்கை மூலம் சிங்களப் படைகள் வன்னியில் அகலக் கால் பதித்திருந்த நேரம். வயதால் முதிர்ந்து நோய்களால் தளர்ந்து போயிருந்த அப்பையா அண்ணனை சிறீலங்காப் படைகளின் கைக்கூலிகள் கடத்திச் சென்றுவிட்டனர். அன்றிலிருந்து அவரைத்தேடி எங்கும் வலைவிரித்திருந்தோம்.

அப்பையா அண்ணா எமது இயக்கத்தின் தொடக்க காலச் செயற்பாடுகளின் சாட்சியாக இருந்தவர். மக்களுடன் மக்களாக தலைமறைவு வாழ்வில் எமது இயக்கம் வாழ்ந்த காலங்களில் எமது போராளிகளுக்குப் பெரும் பலமாக செயற்பட்டவர். அன்றைய காலங்களில் கண்ணிவெடி உட்பட்ட வெடிபொருள் உருவாக்கத்தில் முன்னின்று உழைத்தவர்.

அன்றைய நாட்களில், இளையவர்களாகிய எமது போராளிகளினிடையே வயது முதிர்ந்தவரான அப்பையா அண்ணை, சிங்களப் படைகளின் கண்களில் மண்ணைத் தூவி எமது தலைவர் உட்பட்ட தொடக்க காலப் போராளிகளைக் காத்துவந்தார். தாக்குதல்கள் மற்றும் ஏனைய நடவடிக்கைககளிற்குத் தேவையான ஊர்திகளை மக்களிடமிருந்து ஒழுங்கு செய்வது எவரும் ஐயம் கொள்ளாதவாறு போராளிகளுக்குரிய தங்ககங்களை ஏற்படுத்திக் கொடுப்பதென அன்றைய காலங்களில் முக்கியத்துவமான பணிகளை மூத்த போராளியான அப்பையா அண்ணை ஆற்றினார்.

1982ம் ஆண்டுகாலப் பகுதியில் பொன்னாலைப் பாலத்தில் வைத்து சிங்களப் படையினர் ஊர்தி ஒன்றின்மீது எமது போராளிகளால் கண்ணிவெடித் தாக்குதல் ஒன்று நடாத்தப்பட்டது. ஆனால் தாக்குதலுக்கிலக்கான எதிரி ஊர்தி மயிரிழையில் தப்பித்துவிட்டது. தப்பித்துக்கொண்ட எதிரிகள் எமது போராளிகளைத் துரத்தியபடி அவ்விடத்தைச் சூழவும் சல்லடை போட்டனர். தாக்குதலுக்காகப் பயன்படுத்தப்பட்ட மின் பிறப்பாக்கி எதிரியின் கையில் சிக்கிவிட்டது. அதை வல்வெட்டித்துறையிலுள்ள கடையொன்றில் கொள்வனவு செய்திருந்த இராசையா என்ற அப்பையா அண்ணை அன்றிலிருந்து யாழ்ப்பாணம் எங்கும் பெரிதாயகத் தேடப்பட்ட ஒருவரானார்.

1983ம் ஆண்டு வரலாற்று முதன்மை வாய்ந்த திருநெல்வேலித் தாக்குதலில் பங்குபற்றிய போராளிகளுள்



அப்பையா அண்ணையும் ஒருவர். தமிழர்களின் விடிவிற்கான போரின் படிக்கட்டாக அமைந்த அந்தக் கண்ணிவெடியின் பொறிமுறைகளைச் சரிபார்த்து செல்லக்கிளி அம்மானின் கைகளில் ஒப்படைத்திருந்தவர் அவர்தான்.

அந்த வரலாற்றுத் தாக்குதலின் நினைவுகளை மூத்த தளபதி கேணல் கிட்டு அவர்கள் "களத்தில்" என்ற ஏட்டில் எழுதியிருந்தவற்றை மீட்டிப்பார்பது இங்கு பொருத்தமாக இருக்கும்.

"1983ம் ஆண்டு யூலை மாதம் 23ம் நாள் இரவு 11. 00 மணியளவில் யாழ் திருநெல்வேலியில் வைத்து சிறீலங்காப் படையினர்மீது ஒரு கண்ணிவெடித் தாக்குதலை நடத்தவென குறிப்பிட்ட ஊர்தி ஒன்றில், தேசியத்தலைவர் அவர்களும் அவருடன் செல்லக்கிளி அம்மான், விக்ரர், பொன்னம்மான், சந்தோசம் மாஸ்ரர், புலேந்தியம்மான், கணேஸ், ரஞ்சன், லிங்கம், பசீர்காக்கா, நான் மற்றும் சில தோழர்களும் அடங்கிய எமது தாக்குதல் குழுவில் ஒருவராக சுமார் ஐம்பது வயதை அடைந்துவிட்ட அப்பையா அண்ணரும் அங்கம் வகித்தார். நாம் திட்டமிட்டபடி தாக்குதலுக்கான குறிப்பிட்ட இடத்தை அடைந்ததும் எல்லோரும் ஊர்தியை விட்டு கீழே ,றங்குகிறோம். எனவே அடுத்ததாக அங்குள்ள ஓர் இடத்தில் கண்ணிவெடித் தொகுதியைப் புதைக்கவேண்டும். அப்பையா அண்ணரும், செல்லக்கிளி அம்மானும், விக்ரரும் கண்ணிவெடிகளைப் புதைக்க ஆரம்பிக்கின்றனர்.

கண்ணிவெடியைப் புதைப்பதென்பது ஒரு பெரிய வேலை. அதாவது கரடுமுரடான தார்றோட்டில் பிக்கானால் கிடங்கு வெட்டுவதென்பது மிகவும் கடினமானது. அதிலும் கண்ணிவெடித் தொகுதிக்கான வெடிமருந்துகளை அடைப்பதென்பது அதைவிடப் பெரியவேலை. ஏனெனில் வெடிமருந்துகள் ஆபத்தானவை. எல்லோருக்கும் அந்த வேலை ஒத்துவர மாட்டாது. எனவே வெடிமருந்துடன் நன்கு பழக்கப்பட்ட அப்பையா அண்ணர் அவ்வேலையை திட்டத்திற்கேற்ப மிகவும் வேகமாகவும் அதேவேளை நிதானமாகவும் திறம்படச் செய்துமுடித்தார். இவைக்கப்பால் அப்பையா அண்ணர் எமது இயக்கத்திலேயே மிகவும் வயது முதிர்ந்த மூத்த உறுப்பினர் ஆவார். இருந்தபோதிலும் அவர் மிகவும் சுறுசுறுப்பாகவும் விவேகத்துடனும் சதா இயங்கிக்கொண்டிருப்பார். அத்தோடு எமது உள்ளூர்த் தயாரிப்புகளில் ஓர் முக்கிய வெடிமருந்து நிபுணராகவும் அவர் விளங்கினார்" என மூத்த தளபதி





கேணல் கிட்டு அவர்கள் அதில் குறிப்பிட்டிருந்தார்.

அதன் பின்னான காலங்களில் இந்தியாவிற்குப் பயிற்சிக் காக சென்ற போராளிகளுடன் அப்பையா அண்ணையும் ஒருவராக இணைந்திருந்தார். எப்படியாவது தானுமொரு படையப் பயிற்சிபெற்ற விடுதலை வீரனாக உருவாக வேண்டுமென்று அவர் ஆவல் கொண்டிருந்தார். ஆனால், இவரது வயதைக் கருத்தில் கொண்ட இந்தியப் பயிற்சி அதிகாரிகள் அவரை ஏற்றுக்கொள்ள மறுத்து விட்டனர். இருந்தபோதும் நாடு திரும்பிய அப்பையா அண் ணை போராளியாகவே தொடர்ந்தும் பணியாற்றினார். அவரது விடுதலைப் பணிக்கு படையப் பயிற்சி என்றுமே ஒரு தடையாக இருந்ததில்லை. தொடக்க காலங்களில் எமது தாக்குதல்களில் பங்கெடுத்த கண்ணிவெடிகள் பல அப்பையா அண்ணனின் கரங்கள் தழுவப் பெற்றவை. வன்னிப் பகுதியில் நடந்த பல தாக்குதல்களிலும் அவர் பங்கெடுத்தார்.

அப்பையா அண்ணனின் கண்டுபிடிப்பு முயற்சிகள் இயக் கத்தில் என்றும் பிரபலமாகப் பேசப்படுபவை. அவற்றில் பல களத்தில் பயன்படுத்தப்படாதவையாக இருந்தபோதும் கூட, இளம் போராளிகளிடையே அத்தகைய முயற்சிகளை ஊக்குவித்து இயக்கத்தில் அத்தகைய ஒரு மரபை வளர்த் தெடுக்கும் தலைவர் அவர்களின் எண்ணத்திற்கு அப் பையா அண்ணையின் அத்தகைய முயற்சிகள் வாய்பாக அமைந்தன. அது பின்னைய காலங்களில் இயக்கத்தின் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவியது.

பிற்காலங்களில் அந்த முதிய போராளி நன்றாக இழைத் துப் போயிருந்தார். எந்தப் பணியாற்றவும் அவரால் முடியாதிருந்தது. என்றாலும் எமது வரலாற்றுப் பெருமைக்குரியவராய் அவர் இருந்தார். அவரை இயன்றவரை பேணிப்பாதுகாக்க நாம் முயன்றோம். அதனால்தானோ என்னவோ எதிரியும் அவரது வாழ்வை



முடிக்க விரும்பினான் போலும். இப்போது அப்பையா அண்ணை எங்களுடன் இல்லை. என்றாலும் அவர் எமது புகழ்பூத்த விடுதலை வரலாற்றில் என்றென்றைக் கும் வாழ்வார்.

# சிந்தனை துளிகள்

**“வேங்கையின் கல்லறைமுன் நின்று
வீணாக உன் கண்ணீரை
விரயப்படுத்தாதே
அவன் விட்டுச் சென்றது
என்னவென்று
கண்டுபிடி.”**

**“மரணம் மனிதா
உனைக்கண்டு மண்டியிடலாம்
மனிதன் நீ மரணத்தைக்
கண்டு மௌனித்தால்
நீ மனிதன் என்று
வாழமுடியாது.”**

**“வாழ்க்கை என்பது
வாழத்தான் - அந்த
வாழ்க்கைக்கு ஓர்
வரலாறு இல்லா விட்டால்
வாழ்ந்ததில் - எந்த
அர்த்தமும் இல்லை.”**

**“தாய்மொழியின் தரத்தினைத்
தரணிக்குச் சொல்லத் தெரியா
விட்டாலும்
தாய்மொழியைத் தெரியாது
என்று மட்டும்
சொல்லாதே.”**

**“சுதந்திரக்காற்றை
மட்டும்
சுவாசிக்கப் பழகவேண்டும்
மற்றவையெல்லாம்
சுத்தமில்லாதவை.”**

**“சிறகுகளை
முறித்துவிட்டு
பறக்க விரும்பாதே
விழுந்து விடுவாய்.”**

**“உலகில் உண்மை
கொல்லப்படும் போது
உலகைத்தட்டி
எழுப்புபவன் எவனோ
அவனே உண்மையில்
எழுந்தாணியின்
சொந்தக்காரன்.”**

**தொகுப்பு: ஆ. சாந்தினி. - டென்மார்க்**

# தமிழீழ செய்திகள்




## யாழ். மாதகல் காணி அளவீடு விவகாரம்: வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்திற்கு முன்பாக போராட்டம்




டிசம்பர் 01, 2021

யாழ்ப்பாணம் - மாதகல் பகுதியில் கடற்படையினருக்காக காணி அளவீடு செய்வதற்கு எதிர்ப்புத் தெரிவித்து இன்றையதினம் வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்திற்கு முன்பாக போராட்டம் ஒன்று இடம்பெற்றது.

இன்று மதியம் ஒரு மணியளவில் இடம்பெற்ற இந்த போராட்டத்தில் மாதகல் காணி உரிமையாளர்கள் மற்றும் அரசியல் பிரதிநிதிகளும் கலந்து கொண்டு காணி அளவீட்டுக்கு எதிர்ப்புத் தெரிவித்தனர்.

நிலத்தை பறிப்பதும் எம் உயிரைப் பறிப்பதும் ஒன்றே, எமது நிலம் எமக்கு வேண்டும்,காணிகளை சுவீகரிக்கதே, ஆளுநரே காணி அபகரிப்புக்கு உடந்தையாகாதே போன்ற பல்வேறு கோஷங்கள் போராட்டக்காரர்களால் எழுப்பபட்டது.

போராட்டம் இடம்பெற்ற பகுதியில் பொலிசாரும் இராணுவத்தினரும் புலனாய்வுப் பிரிவினரும் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஒதியமலைப் படுகொலையின் 37 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் உணர்வமைதியுடன் இடம்பெற்றன

டிசம்பர் 02, 2021



முல்லைத்தீவு மாவட்டத்தின் எல்லைக் கிராமங்களில் ஒன்றான ஒதியமலைப் பகுதியில், கடந்த 1984.12.02 அன்று இராணுவத்தினாலும், சிங்கள காடையர்களாலும் அப்பாவித் தமிழ்மக்கள் 32பேர் சுட்டும், வெட்டியும் மிலேச்சத்தனமான முறையில் படுகொலை செய்யப்பட்டனர்.

குறித்த படுகொலை நாளின் நினைவேந்தல் நிகழ்வுகள், ஒவ்வொரு ஆண்டும் டிசெம்பர் மாதம் இரண்டாம் திகதி இடம்பெற்றுவருகின்றன.

அந்த வகையில் குறித்த ஒதியமலைப் படுகொலையின் 37ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் 02.12.2021 இன்றைய தினம், ஒதியமலை சனசமூகவளாகத்தில் படுகொலைசெய்யப்பட்டோரின் நினைவாக அமைக்கப்பட்ட நினைவுத்தூபியில் உணர்வமைதியுடன் இடம்பெற்றது.

அதனைத் தொடர்ந்து ஒதியமலைப் பிள்ளையார் ஆலயத்தில் படுகொலைசெய்யப்பட்டவர்களுக்காக விசேட ஆத்ம சாந்தி வழிபாடுகளும் இடம்பெற்றிருந்தன.

மேலும் இந் நிகழ்வில் முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா-ரவிகரன், முன்னாள் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறீஸ்கந்தராசா, ஒட்டுசுட்டான் பிரதேச சபை உறுப்பினர் இ.சத்தியசீலன், ஒதியமலை கிராம அபிவிருத்தி சங்க தலைவர் இ.கிரிதரன், முன்னாள் கிராம அபிவிருத்திசங்கத் தலைவர் கந்தசாமி, படுகொலை செய்யப்பட்டோரின் உறவினர்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.





## வட தமிழீழத்தின் தீவுப்பகுதியில் மின் உற்பத்தி திட்டங்களை முன்னெடுப்பதை இடைநிறுத்தியது சீன நிறுவனம்

டிசம்பர் 02. 2021

வடக்கில் தீவுப்பகுதியில் மின் உற்பத்தி திட்டங்களை முன்னெடுப்பதை இடைநிறுத்தியது சீன நிறுவனம் இலங்கையின் வடபகுதியில் உள்ள தீவுகளில் முன்னெடுக்கவிருந்த மின் உற்பத்தி திட்டங்களை சீன நிறுவனம் இடைநிறுத்தியுள்ளதாக இலங்கைக்கான சீன தூதரகம் தனது டுவிட்டர் செய்தியில் தெரிவித்துள்ளது.

மூன்றாம் தரப்பொன்று வெளியிட்ட பாதுகாப்பு கரிசனைகள் காரணமாக மின் உற்பத்தி திட்டங்களை சீன நிறுவனம் இடைநிறுத்தியுள்ளதாக சீன தூதரகம் தெரிவித்துள்ளது.

## ஊடகவியலாளர் சுலக்சன் மீதான கொலை அச்சுறுத்தலிற்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கடும் கண்டனம்

டிசம்பர் 02.2021

ஊடகவியலாளர் சுலக்சன் மீதான கொலை அச்சுறுத்தலிற்கு தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி தனது கடும் கண்டனத்தை வெளியிட்டுள்ளது.

தமிழ்தேசிய மக்கள் முன்னணி இது குறித்து தெரிவித்துள்ளதாவது, உதயன் பத்திரிகையின் ஊடகவியலாளர் ஜெயச்சந்திரன் சுலக்ஸன் அவர்களுக்கு பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் வைத்து இன்று துப்பாக்கி முனையில் பொலீசாரால் கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை பொலிஸ் நிலையத்திற்குள் வைத்து, துப்பாக்கியை நீட்டி கொலை அச்சுறுத்தல் விடுத்தமை தொடர்பிலான முறைப்பாட்டை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஏற்க மறுத்துள்ளார். எனினும் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலையீட்டை அடுத்தே முறைப்பாட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

பொலிஸ் நிலையத்திற்குள் பொருத்தப்பட்டுள்ள CCTV பதிவை பரிசோதிக்குமாறும், ஊடகவியலாளரால் மனித உரிமைகள் ஆணைக்கிழுவின் பிராந்திய இணைப்பாளர் வு.கனகராஜ் அவர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

மேற்படி ஊடகவியலாளர் மீதான கொலை அச்சுறுத்தலை வன்மையாக கண்டிக்கின்றோம்





# இலங்கை இராணுவம், தன்னுடைய நாட்டு மக்களையே கொல்லும் அளவிற்கு கொடூரமானது – ரவிகரன்

டிசம்பர் 02, 2021



இலங்கை இராணுவத்தினர் தன்னுடைய நாட்டு மக்களையே கொலை செய்யும் அளவிற்கு கொடூரமானர்கள் என முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

ல்லைத்தீவு - ஒதியமலைப் படுகொலையின் 37ஆவது நினைவேந்தல் நிகழ்வுகள் 02.12.2021நேற்று இடம் பெற்ற நிலையில், அந்த நினைவேந்தல் நிகழ்வுகளில் பங்கேற்று கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ் விடயத்தினைச் சுட்டிக் காட்டியுள்ளார்.

அதேவேளை ஒதியமலையில் படுகொலைசெய்யப்பட்ட 32 அப்பாவித் தமிழர்களுடைய ஆத்மாக்களும் சாந்தி யடைய வேண்டும் எனவும் அவர் பிராத்தித்ததுடன், இப்படியான கொடூரங்கள் இனியும் இந்த நாட்டிலே நடக்காமல், தமிழர்களாகிய நாம் நிம்மதியாக வாழ வழி ஏற்படவேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

அங்கு அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,
கடந்த 1984ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 02ஆம் திகதி இந்த ஒதியமலைப் பகுதியிலே இடம்பெற்ற ஒரு கொடூர மான படுகொலைச் சம்பவத்தில் உயிர் நீத்த உறவு களுக்கு நாம் அஞ்சலிகளை மேற்கொண்டுள்ளோம்.

இந்த ஒதியமலைப்படுகொலை தொடர்பில் நீதிமன்றம் தீர்ப்பளிக்கும்போது, இராணுவ உடை தரித்த இனந் தெரியாதோர் இந்த கொலைகளைச் செய்ததாக தீர்ப்பு வழங்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஒரு நாட்டிலே தன்னுடைய மக்களையே கொலை செய்யும் அளவிற்கு, கொடூரமான இராணுவம் இருந் ததெனில் அது இலங்கையில்தான் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

குறிப்பாக கடந்த 1984.12.02அன்று அதிகாலை இந்தக் கிராமத்தைச் சேர்ந்த அப்பாவித் தமிழ் மக்களை வீடு வீடாகச் சென்று, பொதுநோக்கு மண்டபத்திற்கு அழைத்து வந்து 27பேரை ஈவிரக்கமின்றி படுகொலைசெய்தது மாத்திரமின்றி, மிகுதி ஐந்து பேரை வேறு இடத்திற்கு அழைத்துச்சென்று அவர்களையும் மிக மோசமான முறையில் படுகொலைசெய்துள்ளார்கள்.

இவ்வாறான மிக மோசமான பல செயற்பாடுகள் இடம் பெற்றுக்கொண்டிருக்கும்போது சர்வதேசம் என்ன பார்த் துக்கொண்டிருக்கின்றது என்பதே எனது கேள்வியாகும்.

கடந்த காலங்களிலிருந்தே எமது தமிழ் மக்கள்மீது மிகமோசமான கொடுமைகளையும், சித்திரவதைகளை யும் இந்த நாட்டுபடையினர் மேற்கொண்டுவருகின்றனர் என்பது இதன் ஊடாக வெளிச்சத்திற்கு வருகின்றது.

இந்த படுகொலைச்சம்பவத்தைப் போன்று, பல படு கொலைச் சம்பவங்களையும், பல துன்பியலான சம்பவங் களையும் எமது தமிழ் மக்கள் கண்டிருக்கின்றனர்.

இவ்வாறான துன்பியல் மிக்க சம்பவங்களை முடிவுக்குக் கொண்டுவருமாறுதான் எங்களுடையவர்கள் தொடர்ந் தும் வலியுறுத்திவருகின்றனர். தமிழ் மக்களுக்குரிய தீர்வுகளை வழங்கி, தமிழர்கள் சுதந்திரமாக வாழ்வதற்கு வழிசெய்யுமாறுதான் கேட்கின்றோம்.

மேலும் இவ்வாறு படுகொலைசெய்யப்பட்ட 32பேருடைய ஆத்மாக்களும் சாந்தியடையவேண்டும். இப்படியான கொடூரங்கள் இனியும் இந்த நாட்டிலே நடக்காமல் தமிழர்களாகிய நாம் நிம்மதியாக வாழ வழி ஏற்பட வேண்டும்- என்றார்.

# வடமராட்சியில் நேற்றும் இரு சடலங்கள் கரையொதுங்கின

டிசம்பர் 03, 2021




வடமராட்சி கடற்பரப்பில் நேற்றும் இரு சடலங்கள் கரை யொதுங்கின. கடந்த 6 நாட்களில் யாழ்ப்பாணத்தில் கரையொதுங்கிய ஆறாவது சடலம் இதுவாகும்.

தொடர்ச்சியாக வடமராட்சியில் கரையொதுங்கிய 5ஆவது சடலம் இதுவாகும். இதனால், அந்தப் பகுதி கரையோர மக்களிடையே அச்சமும் பரபரப்பும் ஏற்பட்டுள்ளது.

நேற்று வியாழக்கிழமை பிற்பகல் வேளையில் பருத்தித் துறை சுப்பர்மடம் பகுதியில் ஒரு சடலம் கண்டறியப்பட் டது. இதேபோன்று, வடமராட்சி கிழக்கு - சுண்டிக்குளம்-பூனைத்தொடுவாய் பகுதியில் நேற்று மாலை ஒரு சடலம் கரையொதுங்கியது.

கரையொதுங்கிய இந்தச் சடலங்கள் பல நாட்கள் கடலில் கிடந்தமையால் சற்று உருக்குலைந்துள்ளன. இவற்றை மீட்டுள்ள பொலிஸார் விசாரணைகளைத் தொடர்ந்து வருகின்றனர். இதேவேளை, கடந்த சனிக்கிழமை வட மராட்சி கிழக்கு மணல்காட்டிலும், வல்வெட்டித்துறை யிலுமாக இரு சடலங்கள் மீட்கப்பட்டன. மறுநாள் ஞாயிற் றுக்கிழமை நெடுந்தீவில் சடலம் ஒன்று கரையொதுங் கியது.

இதனைத் தொடர்ந்து கடந்த செவ்வாய்க்கிழமை வட மராட்சி கிழக்கு வெற்றிலைக்கேணியிலும் ஒரு சடலம் கரையொதுங்கியது என்பது குறிப் பிடத்தக்கது.

# உயிர்களைப் பறிக்கும் மனித முகமற்ற கொடிய பயங்கரவாத தடை சட்டம் நீக்கப்பட வேண்டும் – அருட்தந்தை மா.சத்திவேல்

டிசம்பர் 03, 2021



உயிர்களைப் பறிக்கும் மனித முகமற்ற கொடிய பயங்கரவாத தடை சட்டம் நீக்கப்பட வேண்டும் என அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளர் அருட்தந்தை மா.சத்திவேல் தெரிவித்துள்ளார்.

அவரால் இன்று (வெள்ளிக்கிழமை) வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையிலே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, "மதங்களுக்கிடையில் பகைமையை தூண்டியதாக பயங்கர வாத தடை சட்டத்தின் கீழ் கடந்த மார்ச் மாதம் கைது செய்யப் பட்ட முன்னாள் ஆளுநர் அசாத்சாலி அவர்கள் விசாரணை முடி வுற்ற நிலையில் குற்றங்கள் நிரூபிக்கப்படாததன் காரணமாக 8 மாத குறுகிய கால எல்லைக்குள் விடுவிக்கப்பட்டுள்ளார்.

இவ் விடுதலை செயற்பாட்டினை அரசியல் கைதிகளை விடு தலை செய்வதற்கான தேசிய அமைப்பு வரவேற்கின்றது. பயங் கரவாத தடை சட்டத்தின் கீழ் தொடரப்பட்டுள்ள அனைத்து வழக் குகளும் இவ்வாறு நிறைவுற சட்டமா அதிபர் திணைக்களமும், நீதிமன்றமும் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண் டும். நீண்டகாலம் தடுத்து வைக்கப்பட்ட அரசியல் கைதிகளும் விடுதலை செய்யப்பட வேண்டும்.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட மட்டக் களப்பை சேர்ந்த கதிரவேற்பிள்ளை கபிலன் கைது செய்யப்பட்டு 12 வருடங்கள் கடந்த நிலையில் குற்றம் சுமத்தப்படாது இவ் வருடம் அக்டோபர் மாதம் விடுதலை செய்யப்பட்டார். இது பயங் கரவாத தடை சட்டத்தை கொடூரத்தை உலகுக்கு வெளிக் காட்டியது.

இதேபோன்று இதே சட்டத்தால் கைது செய்யப்பட்டு பல ஆண்டு காலம் விசாரணை என இழுத்தடிப்பு செய்து கொண்டிருப்பதால் கைதிகளும், குடும்ப உறவுகளும் அவர்கள் மீது அக்கறை கொண்டோரும் உளவியல் ரீதியில் சித்திரவதையை அனு பவிக்கின்றனர். இதனையும் ஏற்றுக்கொள்ள முடியாது. இவ் வாறு பாதிக்கப்பட்ட அரசியல் கைதிகள் பலர் இறந்தும் உள் ளனர். இதனை இறப்பு என்று கூறுவதைவிட பயங்கரவாத தடைச்சட்டம் மேற்கொண்ட கொலை எனவும் கூறலாம்.

அதுமட்டுமல்ல பயங்கரவாத தடைச்சட்டம் காரணமாக தன் னுடைய பிள்ளைகளை நீண்டகாலம் காண முடியாமலும், அவர்களுடையடைய எதிர்காலம் தெரியாத நிலையிலும் நோய் குட்பட்ட பல பெற்றோர்கள் இறந்துள்ளனர். சிதைவுற்ற குடம் பங்களும் உள்ளனர். இதற்கான முழுப்பொறுப்பையும் பயங் கரவாத தடைச்சட்டத்தை கடந்த 40 வருட காலமாக பாது காத்துவரும் அனைத்து ஆட்சியாளர்கள் மட்டுமல்ல அதற்கு உடந்தையான எதிர்க்கட்சிகளும் ஏற்றாக வேண்டும்.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட அரசியல் கைதிகள் தண்டனை காலத்தை விட விசாரணை என நீண்ட காலம் சிறையில் இருந்துள்ளனர். இவ்விடயம் தொடர்பாக நாடாளுமன்றத்திலும் உரையாடப்பட்டுள்ளது ஆதலால் இவர் களின் விடுதலை துரிதப் படுத்தப்பட வேண்டும். அது மட்டுமல்ல மனித உரிமை பறிக்கும், உயிர்களை பறிக்கும் மனித முகமற்ற கொடிய பயங்கரவாத தடை சட்டம் நீக்கப்பட வேண்டும். அது வரை இச்சட்டம் அரசியல் நோக்கங்களுக்காக பாவிக்கப் படாதிருப்பதை ஆட்சியாளர் உறுதி செய்தலும் வேண்டும்.

அண்மையில் வடக்கிற்கு விஜயம் செய்த ஒரே நாடு ஒரே சட்ட செயலணியின் தலைவர் ஞானசார தேரர் "அரசியல் கைதி களை ஜனாதிபதி விடுதலை செய்வதாக என்னிடம் கூறினார்" அது உண்மையெனில் உடனடியாக அதனையும் செய்ய வேண்டும். அரசியல் நோக்கம் கருதி காலம் தாழ்த்தாது ஜனாதிபதி முடிவெடுக்க வேண்டும் என்பது அனைவரது எதிர்பார்ப்பாகும்." என குறிப்பிடப்பட்டுள்ளது.

# நீங்கள் குற்றம் இழைக்கவில்லை எனில் ஏன் நீதியான விசாரணைக்கு அஞ்சி ஒழிகிறீர்கள். நீங்கள் பிழை அற்றவர்கள் எனில் அதை பயமின்றி உறுதிப்படுத்த சர்வதேச விசாரணைக்கு வாருங்கள்

நாடாளுமன்றத்தில் கஜேந்திரகுமார்

டிசம்பர் 03, 2021



2022 இற்கான வரவு செலவுத்திட்டத்தில் பாதுகாப்பு அமைச்சு மீதான நிதி ஒதுக்கீடு குறித்த விவாதத்தில் தமிழ் தேசிய மக்கள் முன்னணி தலைவர் திரு கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவரகளின் உரையின் ஒரு பகுதி.

- இனப்படுகொலை என்பது வெறுமனே மக்களை கொல்வது மட்டும் அல்ல.

- அந்த மக்களை மக்களின் அடையாளத்தை முழுமையாகவோ பகுதியாகவோ அழிக்கும் நோக்குடன் செய்யப்படுபவையும் இனப்படுகொலையே.

- இறுதி யுத்ததின் போது வன்னியில் ஏறத்தாழ நான்கு லட்சத்யுக்கு அதிகமான மக்கள் இருப்பதாக பதிவுகள் இருந்தபோதும் அரசு, ஆக 70,000 பேருக்கே உணவும் மருந்தும் அனுப்பி மக்களை பட்டினி போட்டு சாகடிக்க முனைந்தது , இதுவும் இனப்படுகொலையே.

- 2009 மே 16 ஆம் திகதி மாலை போர்வலயத்தில் அகப்பட்டிருக்கும் மக்களின் உயிரை பாதுகாப்பதற்காக தம்து ஆயுதங்களை மௌனிக்கிறோம் என விடுதலை புலிகள் பகிரங்கமாக அறிவித்த பிறகும், கண்மூடித்தனமாக காட்டுமிராண்டித்தனமாக மக்கள் மீது கடும் ஆட்டிலறி தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது . இதை கடந்த தடவை சரத் பொன்சேகாவும் ஒத்துக்கொண்டிருந்தார்.

- யுத்தம் புரிகின்ற் மறுதரப்பு யுத்தத்தை நிறுத்தி ஆயுதங்களை மௌனித்த பிறகு நடத்தப்பட்ட இந்த தாக்குதல்கள் அந்த 150,000 மக்களையும் கொல்லும் நோக்குடனேயே (Intention) நடந்தது. இது இனப்படுகொலையே.

இப்படி மக்கள் மீது தாக்குதல் நடப்பது குறித்து விடுதலைப் புலிகள் என்னிடம் அறிவித்தார்கள். அதை நான் அப்போது பேச்சில் ஈடுபட்டிருந்த பஸில் ராஜபக்சவுக்கு அறிவித்து அத்தாக்குதலை நிறுத்துமாறு கேட்டிருந்தேன். அவர் பாதுகாப்பு அமைச்சோடு கதைத்துவிட்டு , அப்படி செய்ய முடியாது என பாதுகாப்பு அமைச்சு சொன்னதாக கூறினார். இதற்கு நான் சாட்சி.

நீங்கள் குற்றம் இழக்கவில்லை எனில் ஏன் நீதியான விசாரணைக்கு அஞ்சி ஒழிகிறீர்கள்.

நீங்கள் பிழை அற்றவர்கள் எனில் அதை பயமின்றி உறுதிப்படுத்த சர்வதேச விசாரணைக்கு வாருங்கள் என்றே கேட்கிறோம்.

- யுத்தம் முடிந்து 13 ஆண்டுகளின் பின்னரும் தமிழர்களின் வாழ்விடங்களில் பெருந்தொகை இராணுவம் குவிக்கப்பட்டு இருக்கிறது .

- வன்னியில் 5:1 எனும் விகிதத்தில் இராணுவம் இருக்கிறது . ஏன் உண்மை வெளிவந்துவிடும் என அண்மைய இராணுவத்தை குவித்து வைத்திருகிறீர்கள்?

- தமிழர்கள் யாருக்க்கும் எதிரிகள் அல்ல, அவர்கள் யாருடனும் போர் புரிய விரும்பவும் இல்லை.

- அவர்கள் கேட்பதெல்லாம் தமக்கு உரித்தான உரிமைகளை மட்டும் தான் .

- இந்த நாடு பல் தேசமுள்ள நாடு என்பதை ஏற்றுகொள்ளுங்கள்.

- அப்போதுதான் நீடித்த சமாதான்ம் கிடைக்கும்

# மட்டக்களப்பில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வினை நடாத்திய 10பேர் பிணையில் விடுதலை!

டிசம்பர் 11, 2021



முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வினை நடாத்தினார்கள் என கடந்த ஆண்டு மட்டக்களப்பு கிரான் பகுதியில் கைதுசெய்யப்பட்ட 10 பேரும் இன்று பிணையில் விடுதலை செய்யப்பட்டனர்.

கடந்த 2021ஆம் ஆண்டு மே மாதம் 18 ம் திகதி முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் செய்வதற்கு எதிராக நீதிமன்ற தடை உத்தரவு பெறப்பட்ட நிலையில், அவர் உட்பட 10 பேர் அன்றைய தினம் நீதிமன்ற தடை உத்தரவை மீறி கல்குடா பொலிஸ் பிரிவிலுள்ள நாகர்வட்டை கடற்கரையில் முள்ளிவாய்க்காலில் உயிரிழந்தவர்களுக்கு தீபச் சுடர் ஏற்றி, கடலில் பூக்களைத் தூவி, அஞ்சலி செலுத்திய அதனை படம் எடுத்து முகநூலில் பதிவு செய்த நிலையில் அவர்களை பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கல்குடா பொலிஸார் கைது செய்தனர்.

இது தொடர்பான வழக்கு வாழைச்சேனை நீதிவான் நீதிமன்றத்தில் நடைபெற்றுவந்தது.

வாழைச்சேனை மாவட்ட நீதிமன்ற நீதிபதி எம்.எச்.எம். பசீல் முன்னிலையில் இவ் வழக்கு இன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

குறித்த வழக்கில் ஆஜராகிய சிரேஸ்ட சட்டத்தரணி க.சுகாஸ் விண்ணப்பித்த பிணை மனுவின் அடிப்படையில் 10 பேரும் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.




# சிவகரனிடம் பயங்கரவாத தடுப்புபிரிவினர் விசாரணை

டிசம்பர் 07, 2021




கொழும்பு பயங்கரவாத குற்றத்தடுப்பு பிரிவின் அறிவுறுத்தலுக்கு அமைவாக வவுனியா பயங்கரவாத குற்றத்தடுப்பு பிரிவினரால் தமிழ் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் வி.எஸ்.சிவகரனிடம் மன்னாரில் உள்ள அவரது அலுவலகத்தில் வைத்து இன்று செவ்வாய்க்கிழமை (7) விசாரணைக்கு உட்படுத்தியுள்ளதாக தெரிய வருகிறது.

கடந்த கால சிவில் சமூக செயற்பாடுகள் , நடாத்தப்பட்ட நிகழ்வுகள் தொடர்பாகவும் குறிப்பாக மாவீரர் தின நிகழ்வுகள் சம்பந்தமாகவும் பல்வேறு கோணத்தில் கேள்விகள் தொடுத்து சுமார் இரண்டரை மணி நேரம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளதாக அவர் தெரிவித்தார்.

குறித்த விசாரணைகள் ஊடாக எம்மை சிவில் சமூக செயற்பாடுகளில் இருந்து எமது சன நாயக குரல் வளையை நசுக்கும் விதமாகவே அவர்களின் கேள்விகள் காணப்பட்டதாக தெரிவித்தார்.

சிவில் அமைப்புக்களை வலுப்படுத்த வேண்டும் என்று சர்வதேச அரங்கில் ஜனாதிபதி கூறுகிறார்.

ஆனால் மறுபுறத்தில் சிவில் அமைப்புக்களை நசுக்க முனைகிறது அரசின் புலனாய்வு அமைப்புகள்.

ஆகவே அரசின் இவ்வாறான நெருக்கடிகளைக் கண்டு நாம் அச்சப்பட போவதில்லை. இவ்விதமான விசாரணைகள் எமக்கு புதியவை அல்ல.
எனவே எமது சமூக பணி தொடர்ந்தும் தொடரும் என்பதுடன் சிவில் சமூக அமைப்புக்களை இலங்கை அரசு தொடர்ந்து நசுக்க முனைவது வேதனைக்குரிய விடயம் என்று அவர் மேலும் தெரிவித்தார்.



# காணாமல்போனோரின் உறவுகள் அச்சம்: யாழில் கரையொதுங்கும் சடலங்கள்

-சுரேஷ் பிரேமச்சந்திரன் -

டிசம்பர் 07, 2021



யாழ்ப்பாணம் மாவட்ட கடற்கரைகளில் சடலங்கள் கரை யோதுங்கும் நிலையில் இதுவரை தகவல்கள் வெளியாகாத நிலையில் காணாமல் போனவர்களின் உறவினர்கள் மத்தியில் அச்சங்கள் தோன்றியுள் என என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

யாழ். ஊடக அமையத்தில் இன்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"யாழ். மாவட்ட கரையோரங்களில் கடந்த வாரம் ஆறு சடலங்கள் கரையொதுங்கியுள்ளன. இது தொடர்பில் எந்தவிதமான தகவல்களும் வெளிவரவில்லை. அதனால் காணாமல்போனவர்கள் பற்றிய தகவல்கள் வெளிவராத நிலையில் இந்த சடலங்கள் கரையொதுங்குகின்றன.

கடற்கரைகளில் சடலங்கள் ஒதுங்கி வருகின்றன எனில் கடலில் விபத்துக்கள் நடைபெற்று இருக்க வேண்டும். ஒன்றில் இலங்கை மீனவர்கள் அல்லது இந்திய மீனவர்களினது மீன்பிடிப் படகுகள் விபத்துக்குள்ளாகி இருக்க வேண்டும். ஆனால், அவ்வாறு விபத்துக்கள் நடைபெற்றதாக தகவல் இல்லை.

இதனால் காணாமல்போனவர்களின் உறவுகள் அச்சத்தில் உள்ளனர். ஆனால், அரசு எந்த விசாரணைகளையும் முன்னெடுக்கவில்லை. மக்களுக்கு விபரங்களை விரைந்து கொடுக்க வேண்டும்.

பொலிஸ், கடற்படை மீது அச்சம் ஏற்பட்டுள்ளது. எனவே, பொலிஸார் மற்றும் கடற்படை ஆகியவை இந்தச் சம்பவங்கள் தொடர்பில் விசாரணைகளை தீவிரப்படுத்தி, அதன் உண்மைத்தன்மைகளை விபரங்களை விரைவாக வெளிப்படுத்த வேண்டும்" - என்றார்.

# கடற்படைக்கு எதிராக போராடியதனால் கஞ்சா குற்றச்சாட்டா ? மாதகல் மக்கள்

டிசம்பர் 07, 2021

கஞ்சா கடத்திய சந்தேகத்தில் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட மாதகல் பகுதியைச் சேர்ந்த இருவருக்கு ஆதரவாக அப்பகுதி மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர் கவனயீர்ப்பில் ஈடுபட்டவர்கள் கருத்து தெரிவிக்கையில், குறித்த இருவரும் கடலுக்கு சென்று திரும்பி வரும் வேளையில் கடற்படையினர் அவர்களை வழிமறித்தனர்.

இதன்போது கடற்படையினரின் கட்டளைக்கு கட்டுப் பட்டவர்கள் அவ்விடத்தில் நின்றனர். இந்நிலையில் கடலில் மிதந்து வந்த, சுமார் 276 கிலோ கஞ்சாவை அவர்கள் கடத்தியதாக தெரிவித்து கைது செய்யப் பட்டுள்ளனர்.



கைதுசெய்யப்பட்டவர்கள் பயணித்த படகு சிறியது. அந்தப்படகில் தொழில் முதல்கள் இருந்தன. இந் நிலையில் 276 கிலோ கஞ்சா அவ்வாறு அந்த படகில் கொண்டு வருவது?

அத்துடன் அவர்கள் பயணித்த படகின் ஜி.பி.எஸ்ஸினை பார்த்தால் அவர்கள் பங்கு சென்றுள்ளார்கள் கஞ்சா கடத்தும் இடத்துக்கு சென்று உள்ளார்களா என தெரியவரும்.

கைது செய்யப்பட்டவர்களை கடற்படையினர், "நீங்கள் காணி சுவீகரிப்பு எதிராக ஆர்ப்பாட்டம் செய்தவர்கள் தானே" எனக்கு ஈவிரக்கமற்ற முறையில் தாக்கியுள் ளனர். நாங்கள் அவர்களைப் பார்க்கச் சென்ற வேளை அவர்கள் எமக்கு விடயத்தை கூறியுள்ளார்கள். எனவே கைது செய்யப்பட்டவர்களை சரியாக விசாரணை செய்து உண்மைத் தகவலை வெளிப்படுத்த வேண்டும் என அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

# நில அபகரிப்பின் தாக்கத்தை பேசிய "நிலம்" குறும்படம் இந்தியாவில் விருதினை வென்றது !

டிசம்பர் 06, 2021




ஈழத்தமிழத் தேசத்தில் "எமது நிலம் எமக்கு வேண்டும்" என நில அபகரிப்புக்கு எதிரான குரல்கள் தொடர்ச்சியாக



ஒலித்து வரும் நிலையில், அபகரிப்புக்குள்ளான சொந்த நிலத்தின் ஏக்கத்தை பேசுபொருளாக கொண்ட "நிலம்" குறும்படம் சிறந்த்துக்கான விருத்தினை வென்றுள்ளது.

தமிழ்நாட்டின் நீலகிரி ஃபிலிம் கிளப் மற்றும் பி.சி டி.வி-நெட்வொர்க் அமைப்புகள் நடாத்துகின்ற ஊட்டி குறும்பட விழாவிலேயே 2021ம் ஆண்டின் சிறந்த குறும்படத்துக் கான விருத்தினை வென்றுள்ளது.

ஆக்கிரமிப்புக்கு உள்ளாகியுள்ள தமிழர் தேசத்தில் இவ் வாறான பேசுபொருளைக் கொண்ட கதையொன்றினை படமாக்குவது என்பது பெரும் சவாலாக இருந்துள்ள தோடு, கிடைக்கக்கூடிய வெளியில் நுட்பமாக படமாக்கப் பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.



மனித உரிமைகளுக்கான திரைப்பிரிவில் Morehouse College Human Rights Film Festival (அமெரிக்கா), International Panoramic Film Festival of India (இந்தியா), Colombo Human Rights Film Fest (இலங்கை) பங்கெடுத் திருந்தது. Jaffna International Cinema Festival விழாவில் பங்கெடுத் திருந்தது. 2022ம் ஆண்டுக்கான திரை விழாவிற்கு Paris International Film Awards இறுதிச் சுற்றுக்கு தேர் வாகியுள்ளது.



இந்நிலையில் 32 நாடுகளைச் சேர்ந்த 100க்கும் மேற்பட்ட குறும்படங்கள் பங்கெடுத்திருந்த ஊட்டி குறம் பட விழாவில் சிறந்த படத்துக்கான விருத்தினை பெற்றுள் ளது.

புலம்பெயர் தமிழர்களிடையே பிரசித்தி பெற்ற "படலைக்கு படலை" தொலைக்காட்சி தொடரின் இயக்குனரும், சமூக-அரசியல் செயற்பாட்டாளருமாகிய ஊடகர் சுதன்ராஜ் அவர்கள் இக்குறும்படத்தினை தயாரித்து எழுதியிருந் தார்.

ஈழத்தமிழர் திரைப்பட சங்கத்தின் (டுஜகுவு சார்பில் குணா ஆறுமுகராசா அவர்கள் ஒருங்கிணைத்திருக்க, கதிர் அவர்கள் இயக்கியிருந்தார்.

ஊட்டி குறும்பட விழாவில் "நிலம்" குறும்பட குழுவினர் சார்பில் விருத்தினை பெற்ற படத்தின் துணை இயக்குன ராகிய ஜெனோசன் "ஈழத்துக்கான திரைத்துறையொன் றினை உருவாக்க வேண்டும் என்பது பெரும் கனவாக உள்ளதாக தெரிவித்திருந்தோடு, அம்முயற்சிகளுக்கு மிகப்பெரும் அங்கீகாரம்" என குறிப்பிட்டிருந்தார்.

நிலம் குறும்படம் பல சர்வதேச திரைவிழாக்களில் பங் கெடுத்து வரும் நிலையில், விரைவில் பொதுத்தளத்தில் பார்வைக்கு வெளியிடப்படும் என வளரி தயாரிப்பு நிறுவனம் தெரிவித்துள்ளது.



# செட்டிகுளத்தில் பயிர்ச்செய்கை காணிகளை அபகரித்த வனவளத் திணைக்களத்தினர்

டிசம்பர் 13, 2021

வவுனியா செட்டிகுளத்தில் தமிழ் மக்கள் பல ஆண்டுகளாக பயிர்ச்செய்கையில் ஈடுபட்டு வந்த காணிகளுக்குள் நேற்று உள்நுழைந்த வனவளத் திணைக்களத்தினர் எல்லைக் கற்களை நட்டு அவற்றைக் கையகப்படுத்தியுள்ளனர்.

100 ஏக்கருக்கும் அதிகமான இடத்தில் உழுந்து பயிர்ச் செய்கை செய்யப்பட்டு ஒன்றரை மாதங்கள் கடந்த நிலையில் அங்கு சென்ற வனவளத் திணைக்களத்தினர் பூத்துக்காய்ப்பதற்கு தயாராக காணப்பட்ட உழுந்துப் பயிர்களுக்குள் தமது உழவு இயந்திரங்களை ஓட்டிச் சென்று பயிர்களுக்கும் சேதம் விளைவித்துள்ளனர்.



இதனால் பலரது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது.



அண்மைக்காலமாக தமிழர்களின் காணிகள் வனவளத் திணைக்களத்தினரால் கபளீகரம் செய்யப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# அம்பாறையில் சங்கமன்கண்டி, கோமாரியில் சிங்கள – பௌத்த பேரினவாதத்தைப் பரப்பும் நோக்கோடு நிறுவப்பட்ட புத்தர் சிலை தமிழ் மக்களின் கடுமையான எதிர்ப்பையடுத்து அகற்றப்பட்டுள்ளது...12.12.2021







# சர்வதேச மனித உரிமைகள் தினத்தில் யாழில் ஆர்ப்பாட்டம்

டிசம்பர் 10, 2021

சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு, வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளை வேண்டி யாழ்ப்பாணம் நாவலர் வீதியிலுள்ள அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர்ஸ்தானிகர் அலுவலகத்திற்கு முன்னால் நேற்றுக் காலை 10 மணியளவில் ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றது.






வலிந்து காணாமல் போனோருக்கு மரணச் சான்றிதழ் வேண்டாம், இழப்பீடு வேண்டாம், காணாமலாக்கப்பட்டோர் அலுவலகம் வேண்டாம், சர்வதேசமே நீதியைத் தா போன்ற பல்வேறு கோஷங்கள் இதன்போது எழுப்பப்பட்டன.

இதன்போது போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போது, அண்மையில் பாகிஸ்தானுக்கு 30 ஆயிரம் கண்கள் தானம் செய்யப்பட்டது தொடர்பாக வெளியான தகவலையும், வடபகுதிக் கரையோரங்களில் மிதக்கும் சடலங்கள் தொடர்பாகவும் கேள்வியெழுப்பினர்.

போராட்டத்துக்கு ஆதரவளிக்கும் வகையில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் இதன்போது பங்கேற்றார்.

போராட்ட நிறைவில் வலிந்து காணாமலாக்கப் பட்டவர்களின் உறவுகளால் ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தானிகர் அலுவலகத்துக்கு மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

போராட்டம் நடைபெற்ற பகுதியில் பொலிஸாரும் புலனாய்வுப்பிரிவினரும் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட

# மாவீரர் நாள் தொடர்பிலான முகநூல் பதிவின் காரணமாக கைதுசெய்யப்பட்ட இளைஞனுக்கு ஒரு வருடத்திற்க்கு பின் பிணை!

டிசம்பர் 14ஈ, 2021

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டிருந்த இளைஞனுக்கு, ஒரு வருடத்திற்குப் பின்னர், திருகோணமலை மேல் நீதிமன்றத்தினால் இன்று பிணை வழங்கியுள்ளது.

மூதூர் - சம்பூர் 2ம் வட்டாரத்தைச் சேர்ந்த பால கிருஸ்ணன் ரதிகரன் என்ற 28 வயது இளைஞனுக்கே ஓராண்டின் பின்னர் பிணை கிடைத்துள்ளது.

குறித்த இளைஞன், மாவீரர் நாளை முன்னிட்டு, கவிதை ஒன்றினை தமது முகநூல் பக்கத்தில் பதிவேற்றியமைக்காக, கடந்த ஆண்டு நவம்பர் மாதம் 27 ஆம் திகதி பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு, திருகோணமலை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில், சம்பவம் தொடர்பான வழக்கு, திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகம் இளஞ்செழியன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது, குறித்த இளைஞனை ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளில் செல்ல அனுமதியளித்து நீதிபதி உத்தரவிட்டார்.






# கனடாவின் மத்திய வங்கி தனது வட்டிவீதத்தை 0.25 வீதமாக தொடரும்...




டிசம்பர் 08, 2021

கனேடிய மத்திய வங்கி அதன் முதன்மை வட்டி வீதத்தைத் தொடர்ந்தும் 0.25 சதவீமாகப் பேணவுள்ளதாக அறிவித்துள்ளது. எதிர்வரும் ஆண்டின் இரண்டாம் அல்லது மூன்றாம் காலாண்டிலேயே வட்டி வீதம் அதிகரிக்க வாய்ப்பு இருப்பதாக அது குறிப்பிட்டுள்ளது.

COVID -19 வைரசின் ஒமிக்றோன் புதிய திரிபு ஏற்படுத்தக்கூடிய பாதிப்பு என்னவெனத் தெரியாத நிலை உள்ளதாகவும், அத்துடன் பிரிட்டிஷ் கொலம்பியாவில் கடந்த மாதம் 18 அம் திகதி ஏற்படுத்திய பெரும் மழை வெள்ளம் பொருளாதாத்தைப் பாதிக்கக்கூடுமெனவும் மத்திய வங்கி குறிப்பிட்டுள்ளது. இதன் அடிப்படையில் மத்திய வங்கி அதன் முதன்மை வட்டி வீதம் குறித்த, இவ் ஆண்டுக்கான இறுதி அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

தற்போது வாங்கிகளுக்கு வழுங்கப்படும் குறிகிய காலக் கடன்களுக்கான வட்டி வீதம் 0.25 சதவீதமாக இருக்கிறது.



ஆனாலும் பொருளாதாரம் பல மடைந்து செல்வதாலும், மற்றும் பணவீக்கம் அதிகரித்துள்ளதாலும் எதிர்வரும் ஆண்டில் வட்டி வீதம் அதிகரிக்கப்படு மென எதிர் பார்க்கப்படுகிறது.

# சீனாவில் நடைபெறவுள்ள 2022 ஆம் ஆண்டு குளிர்கால ஒலிம்பிக் போட்டிகளைக் கனடா புறக்கணிக்கிறது

டிசம்பர் 09, 2021



சீனாவின் பய்ஜிங்கில் 2022 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள குளிர்கால ஒலிம்பிக் போட்டிகளைப் புறக் கணிக்கும் நாடுகள் பட்டியல் வரிசையில் கனடாவும் இணைந்துள்ளது.

ஒட்டாவாவில் நடைபெற்ற ஊடகசந்திப்பில், இது குறித்து கருத்து தெரிவித்த கனடாவின் பிரதமர் ஜஸ்டின்ட் ரூடோ, 'எம் போன்ற நாடுகளின் புறக்கணிப்பு சீனாவுக்கு ஆச்சரியமாக இருக்காது' என்று தெரிவித்துள்ளார்.

இந்த வார தொடக்கத்தில் அமெரிக்கா, அவுஸ்ரேலியா போன்ற நாடுகளும் புறக்கணிப்புத் தொடர்பான கருத்துகளை வெளியிட்டிருந்தன.

கடந்த சில ஆண்டுகளாக சீனாவுக்கும் மேற்குலக நாடுகளுக்கும் ஆஸ்திரேலியாவுக்கும் பல இராஜதந்திரச் சிக்கல்களால் பதற்றங்கள் ஏற்பட்டிருந்தன.




வணிகச்சந்தை, தொற்றுநோய், புலனாய்வுகள் போன்ற பல்வேறு விடயங்களில் இந்நாடுகளுக்கு இடையே பதற்றம் நிலவி வருகின்ற நிலையில் இந்த முடிவை மேற்குறித்த நாடுகள் வெளியிட்டுள் என. ஐரோப்பாவைச் சேர்ந்த வேறு சில நாடுகளும் இவ்வாறான முடிவுகளை வெளியிட வாய்ப்பு உள்ளது.

# ஈழத்தமிழரான திரு. கரி ஆனந்தசங்கரி கனடா நீதியமைச்சின் பாடாளுமன்றச் செயபலாளராகப் பொறுப்பேற்கிறார்

டிசம்பர் 03, 2021

ரூஜ் ரிவர் தொகுயில் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவான கரி ஆனந்தசங்கரி அவர்களுக்கு நாடாளுமன்றத்தில் புதிய பொறுப்பு வழுங்கப்பட்டுள்ளது.

இத்தொகுதியில் இவர் தொடர்ந்து மூன்றாவது முறையாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இரண்டு மாதங்களுக்கு முன்னர் நடந்த பொது தேர்தலில் லிபரல் கட்சி சார்பில் போட்டியிட்ட ஈழத்தமிழரான திரு. கரி ஆனந்சங்கரி பெரும் வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்று நாடாளுமன்ற உறுப்பினரானார்.

இந்த நிலையில் இவருக்கு நாடாளுமன்றத்தில் நீதித் துறை அமைச்சு மற்றும் தலைமை சட்டத்தரணியின் நாடாளுமன்ற செயலாளராக இவர் பொறுப்பேற்றுப் பணியாற்றவுள்ளார்.



# தமிழக செய்திகள்



## ஆளுநர் காலதாமதம் செய்வதை எதிர்த்து, நளினி சென்னை உயர் நீதிமன்றத்தில் புதிய மனு

டிசம்பர் 01. 2021



ஆளுநர் காலதாமதம் செய்வதை எதிர்த்து, நளினி சென்னை உயர் நீதிமன்றத்தில் புதிய மனு செப்டம்பர் 9, 2018 தேதியிட்ட அமைச்சரவை அளித்த பரிந்துரையின் மீது ஆளுநர் நடவடிக்கை எடுக்காமல் காலதாமதம் செய்ததை எதிர்த்து, ராஜீவ் காந்தி படுகொலை வழக்கின் குற்றவாளிகளில் ஒருவரான நளினி, இன்று (புதன் கிழமை) உயர் நீதிமன்றத்தில் புதிய மனு தாக்கல் செய்ய உள்ளார்.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலைவழக்கில் ஆயுள் தண்டனை கைதிகளாக உள்ள நளினி, முருகன், பேரறிவாளன் உள்ளிட்ட 7 பேரையும் முன்கூட்டியே விடுதலைச் செய்ய, கடந்த 2018 செப்டம்பர் 9 தமிழக அமைச்சரவை தீர்மானம் நிறைவேற்றியது. இந்த தீர்மானம் செப்டம்பர் 11 ஆம் தேதி ஆளுநரின் ஒப்புதலுக் காக அனுப்பப்பட்டது.

இந்த தீர்மானத்தின் மீது ஆளுநர் எந்த முடிவும் எடுக்க வில்லை. இதனையடுத்து, அமைச்சரவை தீர்மானம் நிறைவேற்றிய மறுநாள் முதல் தன்னை சட்ட விரோத மாக சிறையில் அடைத்து வைத்திருப்பதாக அறிவிக்க வேண்டும் என்றும், ஆளுநர் ஒப்புதல் இல்லாமல் தன் னை விடுதலை செய்ய வேண்டும் என்றும் நளினி சென் னை உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனுவுக்கு பதிலளித்து தமிழக அரசு சார்பில் தாக்கல் செய்யப்பட்ட பதில்மனுவில், அமைச்சரவை தீர்மானம் தொடர்பாக பேரறிவாளன் உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கில் மத்திய உள்துறை அமைச்சகம் தாக்கல் செய்த பதில்மனுவில், தண்டனை குறைப்பு தொடர்பாக குடியரசு தலைவர் தான் முடிவெடுக்க தகுதியானவர் என கூறி, ஆளுநர் மத்திய அரசுக்கு அனுப்பி வைத்ததாகவும், அதை மத்திய அரசு சட்டப்படி பரிசீலிக்கும் எனக் கூறியிருந் ததும் பதில் மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. மேலும், உச்ச நீதிமன்றம் அளித்த பல்வேறு தீர்ப்புகளின்படி, நளினியின் மனு ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்பதால் தள்ளுபடி செய்ய வேண்டும் எனவும் கோரப்பட்டுள்ளது.

இந்த வழக்கு பொறுப்பு தலைமை நீதிபதி முனிஷ்வர் நாத் பண்டாரி தலைமையிலான அமர்வில் நேற்று (நவம்பர் 30) விசாரணைக்கு வந்தபோது, ஆளுநரின் செயல்பாடு உச்ச நீதிமன்ற அவமதிப்பு செயல் எனவும், ஆளுநர் ஒப்புதல் இல்லாமலும் தண்டனைக் குறைப்பு வழங்கலாம் என உச்ச நீதிமன்றம் தெரிவித்துள்ளதாகவும் நளினி தரப்பில் சுட்டிக்காட்டி வாதிடப்பட்டது.

தமிழக அரசு தரப்பில் ஆஜரான தலைமை வழக்கறிஞர் சண்முகசுந்தரம், இதே வழக்கில் ஆயுள் தண்டனை கைதியாக உள்ள பேரறிவாளன் தாக்கல் செய்த வழக்கு உச்ச நீதிமன்றத்தில் டிசம்பர் 7ஆம் தேதி விசாரணைக்கு வருகிறது" என்றார்.

இதையடுத்து, உச்ச நீதிமன்றத்தில் உள்ள வழக்கு தொடர்பான ஆவணங்களை தாக்கல் செய்ய நளினி தரப்புக்கு அறிவுறுத்திய நீதிபதிகள், கூடுதல் பதில்மனுவை தாக்கல் செய்ய தமிழக அரசுக்கு உத்தரவிட்டு, விசா ரணையை மூன்று வாரங்களுக்கு தள்ளிவைத்ததனர்.

இந்தநிலையில், ஆளுநர் காலதாமதம் செய்வதை எதிர்த்து, நளினி, இன்று (புதன்கிழமை) உயர் நீதிமன் றத்தில் புதிய மனு தாக்கல் செய்ய உள்ளார். நளினியின் வழக்கறிஞர் எம். ராதாகிருஷ்ணன் உயர்நீதிமன்றத்தில் புதிய மனு தாக்கல் செய்ய உள்ளதை உறுதிப்படுத் தியுள்ளார். நளினியின் விடுதலைக்கு ஆளுநரின் ஒப்புதல் முக்கியமானது என்று நவம்பர் 27 அன்று உயர்நீதிமன் றத்தில் அரசு எதிர் பிரமாணப் பத்திரம் தாக்கல் செய்ததை அடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## பேரறிவாளன் வழக்கு – ஆளுநரின் முடிவு என்ன நீதிமன்றம் கேள்வி

டிசம்பர் 07, 2021



பேரறிவாளன் வழக்கு தொடர்பான கோப்புகள் மீது முடிவெடுக்காமல், கவர்னர் காலம் தாழ்த்தியதை எந்த வகையிலும் ஏற்க முடியாது என நீதிபதிகள் தெரிவித்தனர். முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தன் மீதான குற்றம் நிரூபிக்கப்படவில்லை என்பதால் தன்னை வழக்கிலிருந்து விடுவிக்கக்கோரி சுப்ரீம் கோர்ட்டில் பேரறி வாளன் வழக்கு தொடர்ந்தார். இந்த வழக்கு நீதிபதிகள் நாகேஸ்வர ராவ், பி.ஆர்.கவாய், பி.வி.நாகரத்னா ஆகி யோர் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தது.

இவ்வழக்கில், மத்திய அரசின் சார்பில் ஆஜரான சொலி சிட்டர் ஜெனரல் துஷார் மேத்தா வேறு தேதிக்கு வழக்கை ஒத்தி வைக்க வேண்டும் என கோரினார். அப்போது, இது குறித்து கருத்து தெரிவித்த நீதிபதிகள், நெடு நாட்களாக பேரறிவாளன் விவகரத்தில் எந்தவொரு முடிவும் எடுக்கப் படவில்லை எனவும், பேரறிவாளன் வழக்கு தொடர்பான கோப்புகள் மீது முடிவெடுக்காமல், கவர்னர் காலம் தாழ்த்தியதை எந்த வகையிலும் ஏற்க முடியாது எனவும் தெரிவித்தனர். மேலும் மாநில அரசின் தீர்மானத்தின் மீது கவர்னர் முடிவு எடுக்க வேண்டும். மீண்டும் இவ் வழக்கை ஒத்திவைக்க கோரக்கூடாது என நீதிபதிகள் தெரிவித்தனர்.

இந்த விவகாரம் இழுத்தடிக்கப்படுவதால், இறுதி முடிவு வரும் வரை பேரறிவாளனுக்கு ஜாமீன் வழங்க வேண் டும் என அவரது வழக்கறிஞர் கோரினார். இதனை பரிசீலிப்பதாக கூறிய நீதிபதிகள், பேரறிவாளன் விவகாரத் தில் கோப்புகளின் நிலவரம் என்ன என்பது தொடர்பாக காலம் தாழ்த்தாமல் முடிவெடுத்து நீதிமன்றத்தில் தெரி விக்க வேண்டும் என உத்தரவிட்டு வழக்கு மீதான விசாரணையை ஜனவரி மாதத்துக்கு ஒத்திவைத்தனர்.

## வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் சர்வதேச மனித உரிமை நாள் இன்று 10.12.2021 தமிழீழப் பகுதிகளில் கவனயீர்ப்புப் போராட்டம்










# உடனடியாக உரிய நீதி விசாரணை வேண்டும்: கல்லூரி மாணவர் சந்தேக மரணம் சீமான் வலியுறுத்தல்

டிசம்பர் 07, 2021




இராமநாதபுரம் மாவட்டத்தில் கல்லூரி மாணவர் தம்பி மணிகண்டன், காவல்துறையினரின் விசாரணைக்குப் பிறகு சந்தேகத்திற்கிடமான வகையில் உயிரிழந்த விவகாரத்தில் தமிழக அரசு உடனடியாக உரிய நீதி விசாரணை நடத்த வேண்டும் என்று சீமான் வலியுறுத்தியுள்ளார்.

இராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூர் அருகே நீர்க்கோழிந்தல் கிராமத்தைச் சேர்ந்த மணிகண்டன் என்ற மாணவர், கல்லூரியில் இறுதியாண்டு படித்து வந்தார். கடந்த 5 ஆம் தேதியன்று பரமக்குடி - கீழ்த்தூவல் சாலையில் கீழத்தூவல் காவல் நிலைய போலீஸார் வாகன சோதனையில் ஈடுபட்டுக்கொண்டிருந்தபோது, அவ்வழியாக பைக்கில் தன் நண்பருடன் வந்த மணிகண்டனை, போலீஸார் கையசைத்து நிறுத்தச் சொல்லியிருக்கின்றனர்.

ஆனால், மணிகண்டன் தனது பைக்கை நிறுத்தாமல் வேகமாகச் சென்றதாகவும்,பின்னர் போலீஸார் மணிகண்டனைப் பின்தொடர்ந்து சென்று பிடித்து காவல் நிலையத்துக்கு அழைத்துச் சென்றதாகவும் கூறப்படுகிறது.

இதனையடுத்து, மணிகண்டனின் பைக், செல்போன் ஆகியவற்றைப் போலீஸார் பறிமுதல் செய்தனர். மேலும், நடந்த சம்பவம் குறித்து மணிகண்டனின் பெற்றோருக்கும் தகவல் தெரிவித்திருக்கின்றனர். காவல் நிலையத்துக்கு வந்த மாணவரின் பெற்றோர் மணிகண்டனை வீட்டுக்கு அழைத்துச் சென்றனர்.

ஆனால், இரவு வீட்டுக்கு வந்த சிறிது நேரத்தில் மணிகண்டன் 3 முறை ரத்த வாந்தி எடுத்ததாக சொல்லப்படுகிறது. மேலும், அவரது ஆண் உறுப்பில் வீக்கம் இருந்ததாகவும் கூறப்படுகிறது. இதனைத் தொடர்ந்து, அருகில் உள்ள மருத்துவமனைக்கு அழைத்து செல்லப்பட்ட மணிகண்டனை மருத்துவர் பரிசோதனை செய்து விட்டு அவர் ஏற்கெனவே உயிரிழந்துவிட்டதாகக் கூறினார். இதைக் கேட்டு அதிர்ச்சியடைந்த மாணவரின் பெற்றோர், உறவினர்கள் அவர் போலீஸார் தாக்கியதால்தான் உயிரிழந்ததாகச் சொல்லி, முதுகுளத்தூர் - பரமக்குடி சாலையில் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்நிலையில், சந்தேகத்திற்கிடமான வகையில் உயிரிழந்த கல்லூரி மாணவர் மணிகண்டன் மரணத்திற்கு உரிய நீதிவிசாரணை நடத்த வேண்டும் என்று தமிழக அரசுக்கு நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் தனது அறிக்கையில் கூறியிருப்பதாவது:

"இராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூர் அருகே நீர்க்கோழிந்தல் கிராமத்தைச் சேர்ந்த கல்லூரி மாணவர் தம்பி மணிகண்டன் காவல்துறையினரின் விசாரணைக்குப் பிறகு, மர்மமான முறையில் உயிரிழந்த செய்தியறிந்து பெரும் அதிர்ச்சியடைந்தேன். அவரை இழந்து ஆற்ற முடியாதப் பேரிழப்பில் சிக்கித் தவிக்கும் பெற்றோருக்கும், உறவினர்களுக்கும் எனது ஆறுதலைத் தெரிவித்துத் துயரத்தில் பங்கெடுக்கிறேன்.

நல்ல உடல்நலத்தோடு இருந்த மணிகண்டன் திடீரென மரணித்திருப்பது காவல்துறையினர் தாக்குதலால் நிகழ்ந்ததாக இருக்கலாம் என அவரது பெற்றோரும், பொதுமக்களும் தெரிவிக்கும் ஐயப்பாட்டிற்கு உரிய முக்கியத்துவம் அளிக்க வேண்டியது அவசியமாகும்.

காவல்துறையின் விசாரணைக்கு அழைத்துச் செல்லப்படும் இளைஞர்கள் தாக்குதலுக்கு உள்ளாவதும், அவ்வப்போது மரணமடைவதும் தமிழகத்தில் அண்மைக்காலமாக அதிகரித்து வரும் நிலையில் நடந்தேறியிருக்கிற தம்பி மணிகண்டனின் மரணம் கொலையாக இருக்கலாம் எனும் வாதத்தில் அடிப்படையில்லாமலில்லை. ஆகவே, தமிழக அரசு இவ்விவகாரத்தில் உடனடியாகத் தலையிட்டு கல்லூரி மாணவர் தம்பி மணிகண்டனின் மர்ம மரணம் குறித்து உரிய நீதிவிசாரணை நடத்த வேண்டுமென நாம் தமிழர் கட்சி சார்பாக வலியுறுத்துகிறேன்", என்று தெரிவித்துள்ளார்.

# உலகத் தமிழ் வம்சாவளி மாநாட்டில் 10 லட்சம் பெண் தொழில் முனைவோர் உருவாக்க திட்டம்






ஆண்டுதோறும் நடைபெறும் உலகத் தமிழர் திருநாள் விழா, உலகத் தமிழ் வம்சாவளி மாநாடு, உலகத் தமிழ் பாராளுமன்றம்,, இம்முறை எதிர்வரும் ஜனவரி மாதம் 8.9.10 ஆம் தேதிகளில் சென்னை கலைவாணர் அரங்கத்தில் நடைபெற உள்ளது. இந்நிகழ்வில் இந்தியா மற்றும் அயலக தமிழ் அமைப்புகள் கலந்துகொண்டு சிறப்பிக்க உள்ளனர். மேலும் இவ்வாண்டு தமிழ் பெண் தொழிலதிபர்களை உருவாக்கும் விதமாக சிறப்பு திட்டம் அறிவிக்கப்பட்ட உள்ளது. உலக நாடுகளில் பல்வேறு சமூக அமைப்புகள் தமிழ்நாட்டின் பூர்வீகமாக கொண்ட அமெரிக்க துணை அதிபர் கமலா ஹாரிஸ் தலைமையில் 1 பில்லியன் பெண் தொழில் அதிபர்களை 2030 ஆண்டு இறுதிக்குள் செயல்படுத்த உள்ளது. அந்த சமூக அமைப்புகள் உலகத் தமிழ் வம்சாவளி அமைப்புடன் இணைந்து உலகெங்கு முள்ள தமிழ் பெண் களை தொழிலதிபர் களாக உருவாக்க திட்டமிட்டுள்ளோம். இதன் மூலம் மூலம் நம் தமிழ் பெண்கள் சுமார் 10 லட்சம் பேர் தொழிலதிபர்களாக உருவாக்கப்படும். இந்த சிறப்பான ஒரு திட்டத்திற்கு தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு மு க ஸ்டாலின் அவர்களின் உதவியும் பல்வேறு நாடுகளில் தமிழ் நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்களின் உதவியுடனும் உலகத் தமிழ் வம்சாவளி அமைப்பு செயலாற்ற உள்ளது.

மூன்று நாள் நடைபெறும் இச்சிறப்பான நிகழ்வின் முதல் நாள் துவக்க நிகழ்வாக 200 மேற்பட்ட நாதஸ்வர தமிழ் கலைஞர்கள் வரவேற்பு மற்றும் போட்டி நிகழ்வுகளும், தமிழ் காமன்வெல்த் அமைப்பு உருவாக்கமும், அதன் செயல் திட்டமும் பல்வேறு கல்லூரி மாணவ மாணவிகள் கலந்து கொள்ளும் கலை கலாச்சார உடை திருவிழா, பரதநாட்டியம், மயிலாட்டம், ஒயிலாட்டம், கரகாட்டம், பறையாட்டம், மறந்துபோன விளையாட்டு நிகழ்வுகள், பழங்கால இசைக்கருவிகள் பண்டையகால தமிழன் வரலாற்று காட்சியகம், நாட்டியாஞ்சலி, குரலோவியம் போன்ற நிகழ்வுகளும் 'வளரும் தமிழகம்' என்ற பெயரில் அரசின் நலத்திட்டங்கள் காட்சியகம், தமிழரின் பாரம்பரிய உணவு வகைகளை காட்சிப்படுத்தும் உணவு திருவிழாவாகவும், கிராமத்தில் நடைபெறும் பொங்கல் விழாவாகவும் ஜனவரி 8 மற்றும் 9ம் தேதிகளில் சென்னை கலைவாணர் அரங்கத்தில் நடைபெற உள்ளது.

மேலும் உலகெங்குமுள்ள தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேரடியாகவும், இணைய வழியாகவும் ஜனவரி 10ஆம் தேதி கலந்து கொள்ள உள்ளனர் என உலகத் தமிழ் வம்சாவளி அமைப்பின் தலைவர் செல்வகுமார் செய்தியாளரிடம் தெரிவித்தார்.

# சிறீலங்கா சிங்கள கடற்படையால் விரட்டியடிக்கப்பட்ட தமிழக மீனவர்கள்

டிசம்பர் 05, 2021




சிறீலங்கா சிங்கள கடற்படையால் விரட்டியடிக்கப்பட்ட தமிழக மீனவர்கள் அதிர்ஷ்டவசமாக காயமின்றி கரை திரும்பினர்.

இராமேஸ்வரம் மீன்பிடித் துறைமுகத்திலிருந்து 500க்கும் மேற்பட்ட விசைப்படகுகளில் மீனவர்கள் கடலுக்கு மீன்பிடிக்கச் சென்றனர். அப்போது இலங்கை தலைமன்னார் அருகே இந்திய எல்லைக்குள் மீன்பிடித்துக் கொண்டிருந்த தமிழக மீனவர்களின் 10 விசைப்படகுகள் மீது அப்பகுதிக்கு ரோந்து வந்த இலங்கை கடற்படையினர் கற்கள் மற்றும் பாட்டில்கள் கொண்டு எரிந்து தாக்கியதாகக் கூறப்நல்வாய்ப்பாக தாங்கள் யாரும் காயமின்றி கரை திரும்பியதாக தமிழக மீனவர்கள் தெரிவித்தனர். இதனால் மீன்பிடிக்க முடியாமல் ஏமாற்றத்துடன் கரை



திரும்பியதால் ஒரு விசைப்படகிற்கு 50 ஆயிரம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டதாக மீனவர்கள் கவலை தெரிவிக்கின்றனர். தொடர்ச்சியாக இதுபோன்ற தாக்குதல் சம்பவங்கள் நடைபெறுவதால் மத்திய மாநில அரசுகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என மீனவர்கள் வலியுறுத்துகின்றனர்.

# உலக செய்திகள்

## சிறீலங்கா எங்களிற்கு 35,000 கண்களை தானம் செய்தது பாக்கிஸ்தானின் கண் மருத்துவர்

டிசம்பர் 05, 2021

சிறீலங்கா எங்களிற்கு 35000 கண்களை தானம் செய்தது ஆனால் நாங்கள் பார்வையை இழந்துவிட்டோம் என பாக்கிஸ்தானின் தலைசிறந்த கண்மருத்துவர் நியாஜ் புரோகி கவலை வெளியிட்டுள்ளார்.

வெள்ளிக்கிழமை இலங்கை பிரஜை கும்பலொன்றினால் படுகொலை செய்யப்பட்ட தருணம் முதல் நான் நாட்டின் ஏனைய பலரை போல துயரத்தில் சிக்குண்டுள்ளேன் என குறிப்பிட்டுள்ள அவர் அவமானம் தாங்காமல் வெட்கி



தலைகுனிகின்றோம் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

பாக்கிஸ்தானில் உள்ள சிறீலங்கா கண்தான அமைப்பின் முக்கிய உறுப்பினரான அவர் அந்த அமைப்பிற்கு எழுதியுள்ள கடிதத்தில் இத னை தெரிவித்துள்ளார்.

சாமா டிஜிட்டலிற்கு கருத்து தெரிவித் துள்ள அவர் சிறீலங்கா 83,200 விழி வெண்படலங்களை உலகின் பல நாடுகளிற்கு தானம் செய்துள்ளது என குறிப்பிட்டுள்ளார்.

இவற்றில் பெருமளவானவற்றை பாக்கிஸ்தானே பெற்றுக்கொண்டுள்ளது 40 வீதத்தினை பெற்றுக்கொண்டுள்ளது என தெரிவித்துள்ள அவர் 1967 முதல் கண்தான சங்கம் பாக்கிஸ்தானிற்கு 35000 விழிவெண்படலங்களை தானம் செய்துள்ளது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

சிறீலங்கா எங்களிற்கு கண்களை தானம் செய்தது நாங்கள் பார்வையை இழந்துவிட்டோம் என அவர் தெரிவித்துள்ளார்.

## இராணுவ ஹெலிகாப்படர் விபத்துக்கு வானிலை ஒரு காரணியாக இருக்கலாம் ஓய்வுபெற்ற விமானப்படை தளபதி

டிசம்பர் 12. 2021



நீலகிரி மாவட்டம் குன்னூர் அருகே காட்டேரி பகுதியில் சென்றபோது இராணுவ ஹெலிகாப்டர் விபத்துக்குள்ளானதில் அதில் பயணம் செய்த முப்படை தலைமை தளபதி பிபின் ராவத், அவரது மனைவி உள்பட 13 பேர் உயிரிழந்தனர்.

நேற்று புதன்கிழமை நடந்த இந்த கோர சம்பவம் நாட்டையே உலுக்கியுள்ளது. மேலும், ராணுவ உயர் அதிகாரிகள் பயணித்த இந்த ஹெலிகாப்டர் எப்படி விபத்துக்குள்ளனது என்பது குறித்த விசாரணை தற்போது நடைபெற்று வருகிறது. இந்நிலையில், ஹெலிகாப்டர் விபத்துக்கு வானிலை ஒரு காரணியாக இருந்திருக்கலாம் என ஓய்வு பெற்ற இந்திய விமானப்படை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

“நேற்று விபத்துக்குள்ளான இந்த Mi-17V5 ஹெலிகாப்டர் கோயம்புத்தூர் அருகே உள்ள சூலூர் விமான தளத்தில் உள்ள 109-வது ஹெலிகாப்டர் யூனிட்டைச் சேர்ந்தது. இது கடைசியாக சர்வீஸ் செய்யப்பட்ட பிறகு 26 மணி நேரத்திற்கும் மேலாகப் பறந்துள்ளது.

இந்த குறிப்பிட்ட ஹெலிகாப்டரின் கடைசி 2-3 முறைகளில் சிஸ்டம் செயலிழப்பு அல்லது ஸ்னாக் (எதிர்பாராத குறைபாடு) எதுவும் பதிவாகவில்லை என ஆதாரங்கள் கூறுகின்றன. இந்த ஹெலிகாப்டரின் வரலாறு தெளிவாக இருக்கிறது. மேலும் தொழில்நுட்ப கோளாறு எதுவும் இல்லை.

மேலும், இந்த Mi-17V5 ஹெலிகாப்டர் “பாதுகாப்பான” மற்றும் “மிகவும் நவீன” இராணுவ போக்குவரத்து ஹெலிகாப்டர்களில் ஒன்றாக கருதப்படுகிறது என ஓய்வுபெற்ற இந்திய விமானப்படை அதிகாரி ஒருவர் கூறுகிறார்.

தொடர்ந்து பேசிய அவர், “விரிவான விசாரணைக்காக நாம் காத்திருக்க வேண்டும், ஆனால் ஹெலிகாப்டர் மாதிரியின் கடந்தகால பதிவு அது இது போன்ற தொழில்நுட்ப கோளாறு செய்ய முடியாதது மற்றும் 100% நம்பகமானது என்பதைக் காட்டுகிறது.

இந்திய விமானப்படை நெறிமுறையின்படி, எந்தவொரு விஐபி விமானங்களும் மூன்று-நிலை இயந்திர சோதனைக்கு உட்படுகிறது. அதைத் தொடர்ந்து விமானத்திற்கான அணுகல் சீல் வைக்கப்படுகிறது. எனது கருத்துப்படி, இது ஒரு விசித்திரமான விபத்தாக இருக்க வேண்டும். ஏனென்றால் ஒரு ஹெலிகாப்டரின் இரண்டு இயந்திரங்களும் (எஞ்சின்) செயலிழந்தாலும், சரியான சூழ்நிலையில் எங்காவது ஒரு நெல் வயலில் இறங்க முடியும்,” என்று அந்த ஓய்வு பெற்ற அதிகாரி தெரிவிக்கிறார்.

Mi-17 V5 ஹெலிகாப்டர் ஒரு “மன்னிக்கும்” (Forgiving) விமானம். இது மிகவும் உறுதியானது மற்றும் வலுவானது. மேலும் தீவிர தட்பவெட்ப சூழ்நிலைகளில் இந்த ஹெலிகாப்டரால் பறக்க முடியும். “விபத்திற்கு பெரும்பாலும் காரணம் பனிமூட்டமான வானிலையாக இருக்கலாம். இது தெரிவு நிலையை குறைக்கிறது. சிதைவு முறையைப் பார்க்கும்போது, ஹெலிகாப்டர் மரத்தின் தண்டுகளைத் தாக்கியிருக்கலாம் அல்லது அதன் ரோட்டார் மேல்நிலை கேபிள்களில் சிக்கியிருக்கலாம்” என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

மத்திய அரசு கடந்த 2008ம் ஆண்டு 1.3 பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பில் 80 Mi-17V5 ஹெலிகாப்டர்களுக்கான ஒப்பந்தத்தை ரஷ்ய உற்பத்தியாளர்களிடம் வழங்கியது. இவற்றில் முதலாவது 2013ல் இந்தியாவிற்கு வழங்கப்பட்டது, இறுதி தயாரிப்பு 2018ல் வந்தது.

இந்த ஹெலிகாப்டர்கள் பல அம்சங்களை கொண்டுள்ளன. இதில் துருப்புக்களை ஏற்றிச் செல்வதற்கான 36 இருக்கைகள், சரக்கு போக்குவரத்து மற்றும் அவசரகால மிதவை அமைப்புடன் கூடிய பதிப்பு ஆகியவையும் அடங்கும். இது ஒரு விமானி, துணை விமானி மற்றும் விமானப் பொறியாளர் ஆகிய மூன்று பேர் கொண்ட குழுவினரால் இயக்கப்படுகிறது.

சிங்கிள் ரோட்டார் ஹெலிகாப்டர் அதிகபட்சமாக மணிக்கு 250 கி.மீ வேகத்தையும், மணிக்கு 230 கி.மீ வேகத்தில் பயணிக்கும். அதன் முக்கிய எரிபொருள் தொட்டிகளின் வரம்பு 675 கி.மீ ஆகும். இரண்டு துணை எரிபொருள் தொட்டிகளுடன் 1,180 கி.மீ வரை பறக்க முடியும். இது அதிகபட்சமாக 4,000 கிலோ எடையை சுமந்து செல்லும். Mi-17V5 ஹெலிகாப்டர்களை பழுதுபார்க்கும் மற்றும் மாற்றியமைக்கும் வசதி சண்டிகர் விமானப்படை தளத்தில் உள்ளது. கடந்த ஒன்பது ஆண்டுகளில் இந்த வகை ஹெலிகாப்டர் மாறுபாட்டின் ஐந்தாவது விபத்து இது ஆகும்.

## சிறீலங்கா? – என்ன ஒரு அற்புத தேசம்! என்ன ஒரு அற்புத ஆட்சி!

டிசம்பர் 12, 2021

முன்னாள் கடற்படை தளபதி வசந்த கரனாகொட வடமேல்மாகாண ஆளுநராக நியமிக்கப்படவுள்ளார் என வெளியான செய்திகள் குறித்த தனது கரிசனையை நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தனது முகநூலில் பதிவிட்டுள்ளார்.

அவர் அதில் தெரிவித்துள்ளதாவது.

முன்னாள் கடற்படை தளபதி வசந்த கரனாகொட மீது இறுதி யுத்தம் நடந்த 2008 - 2009 காலத்தில் கொழும்பில் வசதி படைத்த தமிழ் குடும்ப இளைஞர்கள் 11 பேரை கப்பம் பெறுவதற்காக வெள்ளை வேன் மூலம் கடத்தி கொலை செய்ததாக குற்றம்சாட்டப்பட்டு வழக்கு நடந்தது.

2008-2009 வேளையில் எனது தலைமையிலான “மக்கள் கண்காணிப்பு குழு” இந்த கொடுமையை பதிவு செய்து உலகிற்கு அறிவித்தது. இதற்காக எனக்கும் அச்சறுத்தல் பரிசாக கிடைத்தது. “வந்து சுட்டு விட்டு போங்கடா” என நான் சொன்னேன்.



கடத்தப்பட்ட இளைஞர்களின் உடல்கள் கூட கிடைக்கவில்லை. காணாமல் போன பிள்ளைகளின் தாய்மார்கள் அழுத அழுகை இன்னமும் என் நெஞ்சில் ஒலிக்கிறது. அன்றைய போராட்டங்கள் மனதில் நிழலாடுகின்றன.

கொழும்பு எம்பியாக மக்கள் கண்காணிப்பு குழு அழைப்பாளராக – நான் மற்றும் ரவிராஜ் சிறிதுங்க விக்கிரமபாகு பிரியாணி ஆகியோர் அச்சறுத்தல்களுக்கு மத்தியில் பலரை காப்பாற்றினோம். பல கடத்தல்களை தடுத்து நிறுத்தினோம். எம்மையும் மீறி பல நடந்தன. வெள்ளை வான் கடத்தல்கள் அரசியல் காரணங்களுக்காக ஆரம்பித்து இது போன்ற கப்பம் பெறவேண்டி நிகழ்ந்தன.

2019ம் வருடத்தில் சட்டபூர்வமாக வசந்த கரனாகொட மீது சாட்டப்பட்ட இந்த குற்றச்சாட்டு மரண தண்டனைக்குரிய குற்றமாகும். இன்று இந்த அரசாங்கம் பதவிக்கு வந்த பின் கடந்த மாதம் அவர் மீதான குற்றச்சாட்டுகளையும் வழக்கையும் சட்டமா அதிபர் வாபஸ் பெற்றார். கரனாகொட சுதந்திர மனிதனாக வெளியே வந்தார்.

இன்று அவரது “சாதனையை” பாராட்டி முன்னாள் கடற்படை தளபதி வசந்த கரனாகொட வடமேல் மாகாண ஆளுநராக நியமிக்கப்பட உள்ளதாக செய்திகள் வெளியாகி உள்ளன.

# MORTGAGE

- நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)
- லைன் ஒப் கிரெடிட்(HELOC)
- ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்
- Private 1st Mortgage (No Income Verification)
- 2வது, 3வது மோட்கேஜ் (Funded within 48hrs)
- பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்
- பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட
- எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா

MORTGAGE IN ANY SITUATION

கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?

MORTGAGE CLINIC

www.mortgagecliniccanada.com

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.

416-613-2788 / 416-816-9011

RIGHT AT HOME REALTY INC.

ஜெ (Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP

Team Leader/Mortgage & Real Estate Broker

Cell : 416-624-4843

எமது முகவரி

1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)



MORTGAGE ALLIANCE

RIGHTBROKER=RIGHTMORTGAGE

Lic # 10530

Brokerage : 112-895 Don Mills Rd, Toronto ON M3C 1W3

Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto ON M2J 5B4

Manaja's

manajaskitchen.ca

# MANAJA'S KITCHEN

A Fusion of Indian & Sri Lankan Cuisine



WE DO CATERING

மணம், சுவை கொண்ட அறுசுவை உணவுகளை நிபுணத்துவத்துடன் தயார் செய்து விநியோகிப்பவர்கள்.

Take Out
Birthy Parties
Picnic / Get Together
or Office Parties
Backyard Dosa Party

Specialized Mutton & Chicken Briyani



சுவையான உடன் தோசை மா கலவை இட்லி மா கலவை பெற்றுக்கொள்ளலாம்

அனைத்து தாயக சைவ மற்றும் அசைவ உணவுகளுக்கு உங்கள் விருப்பப்படி சிறந்த முறையில் தயாரித்த அறுசுவை உணவுகளை செய்து குறிப்பிட்ட நேரத்தில் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள அழையுங்கள்

FREE Delivery for orders over $150 in GTA

75 Williamson Dr., W, Ajax ON L1T 4Y4

905.427.8263

bcpc



BOROS CANADIAN PAPER CONVERTING INC.




Alan Maniam
Director

647 299 2450

235 Nugget Ave., Unit 12, Scarborough ON M1S 3L3

boroscanadianpaper@gmail.com

# அரச ஒடுக்குமுறையும் மக்கள் துயரமும்

– கலாநிதி க. சோமாஸ்கந்தன் –

இரு பத்தியொராம் நூற்றாண்டின் முதன்மை அடையாளமாக இனத்தேசியம் (ETHNIC NATIONALISM) ஏற்றுக்கொள்ளப் படுகின்றது. பெரும்பாலான உள்நாட்டுப் போர்கள் இன விடுதலைக்காகவே நடைபெறுகின்றன. பல்லின நாடுகளில் எண்ணிக்கையில் கூடிய இனம் சிறுபான்மையினரை அடக்கி ஆள விளையும்போது விடுதலைப்போர் வெடிக்கின்றது. சிங்கள இனத்தவர் தம்மை "மகா ஜாதிய" என்றும் தமிழரை "சுளு ஜாதிய" என்றும் அழைக்கின்றனர். இதே துவேச மனப்பான்மை வேறுபல நாடுகளிலும் காணப்படுகிறது. "வெள்ளை நிறவெறி உடற் தோல் அளவு ஆழமானது. சிங்கள இனவெறி உடலை ஊடுருவி ஆன்மாவரை செல்கிறது" என்றார் முன்னாள் கோப்பாய் பாராளுமன்ற உறுப்பினர் சி.கதிரவேற்பிள்ளை.

சிங்கள அரசியல் கட்சிகளுக்கிடையில் தமிழர்களுக்கு எதிரான வன்முறைகளை முன்னெடுக்கும் போட்டாபோட்டி நடக்கிறது. இதைச்சர்வதேச ஆய்வாளர்கள் கவனத்தில் எடுத்துள்ளனர். நியூயோர்க் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த நீல் டெவொற்றா இப்போட்டியைப் பகிரங்க ஏலவிற்பனைக்கு ஒப்பிடுகிறார். சிறீலங்காவின் பிரிவினைக் கோரிக்கைக்கு சிங்களக் கட்சிகள் தம்மிடையே நடத்தும் ஏல விற்பனைக்கு நிகரான சூடான போட்டி தான் காரணம் என்கிறார் நீல் டெவொற்றா. (FROM ETHNIC OUTBIDDING TO ETHNIC CONFLICT: THE INSTITUTIONAL BASIS FOR SRI LANKA'S SEPARATIST WAR BY NEIL DEVOTTA, POLITICAL SCIENCE DEPARTMENT, HARTWICK COLLEGE, NEW YORK, 2005) தமது வன்முறைகள்மூலம் தமிழர்களைப்பிரிந்து செல்லும்படி தூண்டும் சிங்கள ஆட்சியாளர்கள் பிரிவினையைத் தடுப்பதற்காக இராணுவ நடவடிக்கையையும் நடத்துகிறார்கள் என்று அவர் கூறுகின்றார். சுதந்திரம்பெற்ற நாட்தொட்டு இன்றுவரையிலான இத்தீவின் வரலாறாகவும் இது அமைகிறது.





பிரிவினைக்குத் தூபமிடும் நான்கு முக்கிய அம்சங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன – அரசியல் கட்டமைப்பு, தூர நோக்கற்ற அரசியல்வாதிகள், சிறுபான்மையினரின் போர்க்குணம், அவர்கள் வாழும் தனித்துவமான தரைப்பரப்பு ஆட்சியைப் பிடிப்பதற்காக அரசியல்வாதிகள் செய்யும் நிறைவேற்ற முடியாத மேடைப்பேச்சுக்கள் சிறுபான்மையினரை விழிப்படையைச் செய்கின்றன. இதன் காரணமாக அவர்கள் உரிமைப்போர் செய்யத் துணிகின்றனர். நாடு உருக்குலைந்து சீரழிவதற்குத் தமிழர்களின் சம்மதமின்றி உருவாக்கப்பட்டு அவர்கள் மீது திணிக்கப்பட்ட 1972, 1978 ஆம் ஆண்டுகளின் அரசியல் சாசனங்கள் காரணம் என்று உணரப்பட்டுள்ளது. உருப்படியான சீர்திருத்தம் செய்யப்படாத காரணத்தால் பிரிவினைக் கோரிக்கை வலுப்பெறுகின்றது.

ஒரு விடுதலைப்போரில் மிகக் கூடுதலான பாதிப்படைபவர்கள் பொதுமக்களே. எதிரிப் படைகள் பொதுமக்களைக் குறிவைத்துத் தாக்குதல் நடத்துகின்றனர். வெற்றிக்கான வேகமான குறுக்குவழி பொது மக்களை மிரட்டிப்பணியவைப்பதே என்று இராணுவம் நம்புகிறது. போரில் ஈடுபடாத சிவிலியன் மக்கள் என்று ஒருவரையும் ஒதுக்கிவிட முடியாது என்று விடுதலைப்போர் நடத்துவோர் நம்புகின்றனர். பார்வையாளர்களான ஒருவரும் விலகிஇருக்க முடியாது. விடுதலைப்போர் என்று வந்துவிட்டால் விரும்பியொ விரும்பாமலோ ஒவ்வொருவரும் தமது பங்களிப்பைச் செய்தே ஆகவேண்டும். புராதன காலந்தொட்டு போர்க்காலத்தில் பொதுமக்களின் துயரம் உச்சமடைகிறது, நீர் போன்றவற்றை மக்கள் பெறுவதைத் தடுக்கும் நடைமுறை அன்றே தொடங்கிவிட்டன. இன்றைய பொருளாதாரத் தடையும், பயணத்தடையும் அதன் தொடர்ச்சியாக நடைபெறுகின்றன. பொருளாதாரத் தடையால் இராணுவமோ அரசியல் தலைமையோ பாதிப்படைவதில்லை. பெரு விலை கொடுப்பவர்கள் பொதுமக்கள்தான். அமெரிக்காவும், பிரித்தானியாவும் ஐ.நா ஊடாக ஈராக் மீது முன்பு விதித்த பொருளாதாரத்தடை, மருந்து, பால்மா தடை என்பன காரணமாகப் பல்லாயிரம் குழந்தைகளும் சிறுவர்களும் உயிரிழந்தனர். எமது விடுதலைப்போர் தொடங்கிய பின் சிங்கள அரசு ஈழத்தமிழர்கள் மீது பொருளாதாரத் தடையையும் பிரயாணத் தடையையும் இறுக்கியுள்ளது. இன்னும் ஏதோவொரு வகையில் இத்தடைகள் நீடிக்கின்றன.

"அரசியல் வன்முறை" (POLITICAL VIOLENCE) என்ற சொற்தொடர் 1960கள் தொடக்கம் சர்வதேச அரங்கில் பாவிக்கப்படுகிறது. உள்நாட்டில் அரசுக்கும் ஆயுதம் தரித்த விடுதலைப் போராளிகளுக்கும் இடையில் உள்நாட்டுப்போர் நடக்கும்போது நிகழும் வன்முறைகள் இவ்வாறு குறிப்பிடப்படுகின்றன. தொடக்கத்தில் அரசியல் வன்முறை என்ற சொற் தொடர் அரசுக்கு எதிரான போராட்டம், அரசுத் தலைவர்களின் படுகொலை, அரச இயந்திரத்தைச் செயற்படாமல் தடுத்தல் போன்றவற்றைக் குறிப்பிட்டது. பின்பு அரசியல் வன்முறை என்பது அரசின் ஒடுக்குமுறைகள் தனது குடிமக்களுக்கு எதிரான படுகொலைத் தாக்குதல்கள், காணாமற்போகச் செய்தல், மர்மக் குழுக்கள் மூலமான படுகொலைகள் போன்றவற்றையும் உள்ளடக்கியது. இத்தொடரில் "அரச பயங்கரவாதம" (STATE TERRORISM) என்ற சொற்கள் அரசு குடிமக்கள் மீது நடத்தும் எல்லாவகை வன்முறைகளையும் குறிப்பிட உதவுகின்றது. அதே சமயத்தில் விடுதலை இயக்கத்தின் தாக்குதல் நடவடிக்கைகள், தற்காப்பு நடவடிக்கையாக இருப்பினும் "பயங்கரவாதம்" (TERRORISM) எனப்படுகிறது. பயங்கரவாதம் என்றால் என்னவென்று சரிவரவரையறை செய்யப்படாத நிலையில் சில உலக நாடுகள் தமிழீழ விடுதலைப் புலிகளைப் பயங்கரவாத அமைப்பாகப் பிரகடனம் செய்திருப்ப தானது வேதனை அளிப்பதாயுள்ளது.

சிறீலங்கா வெளிவிவகார அமைச்சகத்தின் முன்னாள் ஆலோசகரும் தற்போதைய ஐ.நா பணியாளருமான அம்றித்றோகான் பெரேரா தனது கலாநிதி பட்டத்திற்காக எழுதிய நூலில் (INTERNATIONAL TERRORISM BY AMRITH ROHAN PERERA: VIKAS PUB

**இருபத்தியொராம் நூற்றாண்டின் முதன்மை அடையாளமாக இனத்தேசியம் (ETHNIC NATIONALISM) ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. பெரும்பாலான உள்நாட்டுப்போர்கள் இன விடுதலைக்காகவே நடைபெறுகின்றன. பல்லின நாடுகளில் எண்ணிக்கையில் கூடிய இனம் சிறுபான்மையினரை அடக்கி ஆள விளையும்போது விடுதலைப்போர் வெடிக்கின்றது. சிங்கள இனத்தவர் தம்மை "மகா ஜாதிய" என்றும் தமிழரை "சுளு ஜாதிய" என்றும் அழைக்கின்றனர். இதே துவேச மனப்பான்மை வேறுபல நாடுகளிலும் காணப்படுகிறது. "வெள்ளை நிறவெறி உடற்தோல் அளவு ஆழமானது. சிங்கள இனவெறி உடலை ஊடுருவி ஆன்மாவரை செல்கிறது."**




LISHING HOUSE, NEW DELHI 1997) தமிழீழ விடுதலைப்புலிகளை கடுமையாகச் சாடியுள்ளார். 27, ஜூன் 1997 புரொன்ட் லைன் சஞ்சிகையில் இந்த நூலை ஆய்வு செய்த ஏ.ஜீ.நூராணி பின்வருமாறு கூறுகின்றார். “உலகின் எந்தவொரு நாடாகிலும் பயங்கரவாதம் பற்றிய நிலையான கொள்கையைக் கொண்டிருக்கவில்லை. பயங்கரவாதம், மனித உரிமை பற்றியெல்லாம் பேசும் அமெரிக்கா தானும், தனது கூட்டாளிகளும் செய்யும் அத்து மீறல்களைக் கணக்கில் எடுப்பதில்லை” பயங்கரவாதப் பிரச்சினை நெடிய வரலாற்றைக் கொண்டது எனினும் வசதிக்கேற்ப பயன்படும் சொற் பிரயோக மாகவே அது இன்றுவரை பயன்படுகிறது.

மக்கள் ஆதரவை இழந்த அல்லது ஆதரவைப் பெறாத ஆட்சியாளர்கள் தமது ஆட்சியை இராணுவ பலத்தின் மூலம் நடத்துகின்றனர். வடக்குக் கிழக்கில் நிலைகொண்டுள்ள சிங்கள இராணுவம் கொழும்பின் பிரதிநிதியாகவும் சிங்கள ஆதிக்கத்தின் நீட்சியாகவும் இடம்பெறுகின்றது. பூகோள மேலாதிக்கச் சிந்தனையைக்கொண்ட சக்திகள் ஆயுத தளபாட உதவி, இராணுவப் பயிற்சி, பொருளாதார ஒத்துழைப்பு என்பனவற்றை அதற்கு வழங்குகின்றன. இதனால் ஆக்கிரமிப்பு தொடர வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. ஒரு ஆக்கிரமிப்பு இராணுவம் மக்களைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்கு இராணுவப் புலனாய்வு அமைப்பை நம்பியிருக்கிறது. மக்கள் விரோத நடவடிக்கைகளில் குவத்தமாலா போன்ற நாடுகளில் மிகவும் கொடிய கொலைக்குழுக்களை (DEATH SQUADS) இராணுவம் பயன்படுத்தியதை நாம் நன்கு அறிவோம். இப்படியான குழுக்கள் “கருணா குழு“, “நாசீக் குழு“ என்ற பெயர்களில் இராணுவ ஆதரவோடு தமிழீழத்தில் இயங்குகின்றன. நாசீக் போன்ற பெயர்களைத் தாங்கியபடி இராணுவத்தினரே மறைமுகமாகச் செயற்படும் வாய்ப்பு நிறைய இருக்கிறது. இக்குழுக்களும் சிங்கள இராணுவமும் ஒரு பொதுவேலைத்திட்டத்தை நடைமுறைப் படுத்துகின்றன.

இராணுவப் புலனாய்வு அமைப்பு மக்களைக் கண்காணிப்பது, மக்கள் சம்பந்தமான தகவல்களைச் சேகரிப்பது, தேவைப்படும் போது மக்களை நேரடியாகவோ தமது கொலைக் குழுக்கள் மூலமாகக் கொன்றொழிப்பது போன்ற மூன்று முக்கிய கருமங்களைச் செய்கின்றது. தகவல் சேகரிப்பு அதன் பிரதான இலக்காக இருக்கிறது. அதிலிருந்து மற்றவை விரிவடைகின்றன. ஆட்சிக்கு உறு துணையாக இருக்கும் புலனாய்வு அமைப்பு அதன் கண்ணும், காதுமாகவும், எதிர்ப்பை முறியடிக்கும் சக்தியாகவும் செயற்படுகிறது. தன்னிடமுள்ள வளங்கள் யாவற்றையும் ஒன்று திரட்டி இப்பணியில் அது குழப்பம், எதிர்ப்பு மற்றும் மாற்று அபிப்பிராயம் தோன்றாமல் பார்த்துக்கொள்ளல், ஊடகத்துறையினர் மீது தாக்குதல் நடத்துவது மூலம் செய்தித் தணிக்கை அமுலாக்கம் செய்தல், ஆட்சியாளர் விரும்பும் அபிப்பிராயங்களைக் கட்டியெழுப்புதல் என்பன இராணுவப் புலனாய்வுத் துறையினரின் நடவடிக்கைகளாகும். இவை அனைத்தையும் இராணுவ ஆக்கிரமிப்பிலுள்ள தமிழீழத்தில் இன்று காணலாம்.

வெள்ளை நிறவெறி அரசின் காலத்தில் செயற்பட்ட கொலைக் குழுவின் தலைவன் இயூஜின் திகொக் எழுதிய சுய சரிதையில் கொலைக் குழுக்களின் நடவடிக்கைகள் விவரிக்கப் பட்டுள்ளன. (A LONG NIGHT'S DAMAGE, AUTOBIOGRAPHY: EUGENE DE KOCK. 1998) இவர் தென்னாபிரிக்கப் பொலிஸ் படையில் கேணல் தர அதிகாரியாகப் பணியாற்றியவர். கறுப்பின அரசு நிறுவப்பட்டபின் (1994) இவர் மீது - கலாநிதி க.சோமாஸ்கந்தன் - 107 கொலை, சித்திரவதை மற்றும் கொள்ளைக் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டன. இவர் தலைமைவகித்த கொலைக் குழுவின் பெயரான விளாக்பிளாஸ் (VLAK PLAS) அப்போது வெளிவந்தது. வெள்ளை ஜனாதி பதிகளான பி.டபிள்யூ.போத்தா (P.W. BOTHA)இ தீ கிளேர்க் (DE KLERK) ஆகியோருக்கு விளாக்பிளாசின் நடவடிக்கைகள் பற்றி நன்கு தெரியும் என்று சொக் தனது நூலில் தெரிவித்துள்ளார். தனது அணியினர் லிசொத்தோ, சுவாசிலாந்து ஆகிய பகுதிகளுக்குள் ஊடுருவி அங்கு தலைமறைவாக வாழ்ந்த ஏ.என்.சி தலைவர்களையும் ஆதரவாளர்களையும் கொன்றதையும் நூல் தெரிவிக்கிறது. மண் போன்றவற்றை அள்ளிப் போட உதவும் “சவள்“ தான் (SHOVEL) தன்னுடைய கொலைக்கருவி, உடலில் இருந்து தலையைப் பிரிப்பதற்கு அதைப் பயன்படுத்தியதாக இயூஜீன் தீ கொக்கின் நூல் கூறுகிறது. விசாரணை நடத்திய நீதிமன்றம் இவருக்கு 262வருட சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது.

முதலாம் உலகப்போர் முடிந்தபின் ஜேர்மன் தென்மேற்கு ஆபிரிக்கா, அதாவது நபீபியா தென் ஆபிரிக்க நாட்டின் ஆட்சிப் பொறுப்பில் விடப்பட்டது. தமது சுதந்திரத்திற்காக நபீபிய மக்கள் சாம் நுஜோமா தலைமையில் சுவப்போ (SOUTH WEST AFRICA PEOPLE'S ORGANIZATION - SWAPO) அமைப்பின் கீழ் இருபத்திநான்கு வருடம் போராடினர். 21 மார்ச்சு 1990 இல் நபீபியா சுதந்திர நாடாக அங்கீகரிக்கப்பட்டது. இந்த மக்கள்மீது தென்னாபிரிக்கப்படைகள் சொல்லொணாத் தாக்குதல்களை மேற்கொண்டனர். இவ்வருடம் (2006) முதல் மாதத்தின் முற்பகுதியில் படுகொலை செய்யப்பட்ட பொது மக்களின் புதைகுழிகள் வட நபீபியாவில் கண்டுபிடிக்கப்பட்டன. ஓரிடத்தில் பல சடலங்கள் படுகொலை செய்யப்பட்டபின் புதைக்கப்பட்ட இடம் “மாஸ்கிறேவ்ஸ்“ (MASS GRAVES) அதாவது கூட்டுப் புதைகுழிகள் என்று அழைக்கப்படுகின்றன. கூட்டுப் புதைகுழிகள் இராணுவ ஆட்சியின் பரிசாகப் பார்க்கப்படுகின்றன. செம்மணிப் புதைகுழி, புன்னாலைக்கட்டுவன் மகாவித்தியாலயப் புதைகுழி, யாழ்.துரையப்பா விளையாட்டரங்குப் புதைகுழி என்பன பிரபலமானவை. தென் தமிழீழத்திலும் எண்ணற்ற புதைகுழிகள் உண்டு. சத்துருக்கொண்டான் பனிச்சையடியில் 187 தமிழர்களின் புதைகுழி இருக்கிறது. படைமுகாம்கள் வடகிழக்கில் எங்கிருந்தாலும் அவற்றிற்கு அருகில் புதைகுழிகளும் எலும்புக் கூடுகளும் இருக்கும் என்பதில் ஐயமில்லை.

அரசுகள் தமது குடிமக்களுக்கு எதிராகச் செய்கின்ற கொடூரங்கள், அநீதிகள் என்பனவற்றிற்கு எதிராக அனைத்துலக அபய ஸ்தாபனம் 1998இல் வெளியிட்ட அறிக்கையில் சிறீலங்கா இடம்பெறுகிறது. இந்த அறிக்கையில் பட்டியலிடப்பட்ட குற்றங்கள் இன்றும் நீடிக்கின்றன. சிறுபான்மைத் தமிழர்களுக்கு எதிரான அராஜகம், சட்டத்திற்குப் புறம்பான கைதுகள், விசாரணையின்றிய படுகொலைகள், இராணுவத்தினரின் பாலியல் வல்லுறவுகள் போன்றவை பட்டியலில் அடங்குகின்றன. சித்திரவதைகள், படு கொலைகள் கைதுசெய்தபின் காணாமற் போதல் போன்ற மனித உரிமை மீறல்களில் ஈடுபடும் 141 நாடுகளில் சிறீலங்காவும் ஒன்று என அந்த அறிக்கை தெரிவிக்கிறது. 1998 இல் வெளிவந்த மேற்கூறிய அறிக்கை 2006 ஆம் ஆண்டிற்கும் பொருத்தமாகவுள்ளது. ஈழத் தமிழர்களின் துன்ப வரலாறு தொடர்ந்த வண்ணம் உள்ளது.

ஜேர்மனியில் அடொல்ப் ஹிற்லரின் சர்வாதிகார ஆட்சி நிலவிய காலத்தில் நடுநிசிக் கைதுகளும் படுகொலைகளும் “வீட்டுக் கதவைத் தட்டுதல்“ (KNOCK ON THE DOOR) என்று பூடகமாக அழைக்கப்பட்டன. இந்த நான்கு ஆங்கிலச் சொற்களும் இன்று அரச பயங்கரவாதத்தின் குறியீடாகக் கருதப்படுகின்றன. இராணுவமும் அவர்களோடு சேர்ந்து இயங்கும் ஒட்டுக்குழுக்களும் பொது மக்களின் வீட்டுக்கதவை தட்டித் திறக்கச் செய்தபின் உள்நுழைவார்கள். அடுத்ததாக வீட்டில் இருப்பவர்கள் கொண்டு செல்லப்படுவார்கள் அல்லது அங்கேயே கொல்லப்படுவார்கள். இது இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் வழமையாகிவிட்டது. அதேபோல் தெருக்களில் செல்வோர் பட்டப்பகலில்




“இலக்கத் தகடற்ற வெள்ளை வானில்“ (WHITE MOTOR – VANS WITHOUT NUMBER PLATES) கடத்திச் செல்லப் படுகிறார்கள். அதன்பின் கடத்தப்பட்டவர்கள் காணாமற் போனவர்களாகி விடுகிறார்கள். தமிழர்கள் மத்தியில் “வெள்ளை வான்“ என்ற சொற்களைக் கேட்டதும் பயமும் பீதியும் ஏற்படுவது இயற்கை. ஆட்கடத்தலுக் காக இலக்கத் தகடற்ற வெள்ளை வானைப் பயன்படுத்தும் நடமுறையை 1992-1993 காலப் பகுதியில் மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா மட்டக்களப்பில் பணியாற்றும்போது ஆரம்பித்துவைத்தார். இப்போது இது சிறீலங்கா இராணுவத்தின் பாரம்பரிய நடைமுறையாக மாறிவிட்டது. தமிழர் படுகொலையில் சாதனை படைக்கும் சிங்கள இராணுவத் தளபதிகளுக்கு வெளிநாட்டுத் தூதுவர் பதவி வழங்கும் பாரம் பரியத்தை சிறீலங்கா அரசு கடைப்பிடிக்கிறது. செம்மணிப் படுகொலைகளோடு நேரடித் தொடர்புடைய மூன்று தளபதிகளான ஜானக பெரேரா, சிறிலால் விஜய சூரிய, றொகான் தளுவத்த ஆகியோர் முறையே இந்தோனேசியா, பாகிஸ்தான், பிறேசில் ஆகிய நாடுகளில் சிறீலங்காத் தூதுவர்களாக இப்போது பணியாற்றுகின்றனர்.

சிறீலங்காவின் வரலாறு காணாத தமிழர்களுக்கு எதிரான படுகொலைத் தாக்குதல்கள் ஜே.ஆர்.ஜெயவர்த்தனா அரசினால் திட்டமிட்டு



1983ஆம் ஆண்டில் நடாத்தப்பட்டது. அவை ஜூலை மாதத்தில் நடை பெற்ற காரணத்தால் தமிழர்கள் அந்த மாதத்தை “கறிஜூலை“ (BLACK JULY) என்று குறிப்பிடுவர். தமிழர்களுக்கும் அவர்கள் தம் விடுதலைப்போருக்கும் எதிர்நிலை எடுக்கும் கூல் குடும்பத்தைச் சேர்ந்த இராஜன் கூல் 1983 ஜூலைச் சம்பவங்கள் பற்றியதொரு ஆய்வுநூல் எழுதியுள்ளார். (SRI LANKA, ARROGANCE OF POWER BY RAJANHOOLE) தமிழர்களுக்கு எதிரான படுகொலைத் தாக்குதல்களுக்குத் தலைமை தாங்கிய யூ.என்.பி. பாராளுமன்ற உறுப்பினர்களின் பெயர்ப்பட்டியல் 2001 ஆம் ஆண்டு பிரசுரமான இந்நூலில் தரப்பட்டுள்ளது. பட்டியலில் இப்போதைய எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்காவின் பெயர் இடம் பிடித்துள்ளது. மனித உரிமை அமைப்பான மார்கா அமைப்பின் (MARGA INSTITUTE) தலைவர் கொட்பிறே குணத்திலக்கா பற்றியும் இதில் குறிப்புக்கள் காணப்படுகின்றன. “அரசு சார்பாக இயங்குவதிலும் சம்பவங்களுக்கு “வெள்ளை வர்ணம்“ பூசுவதிலும் மார்காத் தலைவா ஈடுபடுபவர்” என்பது நூலாசிரியரின் தீர்ப்பு. பிந்தினுவேவாவில் தடுப்புக்காவலில் வைக்கப்பட்ட 2 தமிழ் இளைஞர்கள் சிங்கள ஆயுததாரிகளால் பொலிஸ்வடையின் உதவியோடு ஒக்ரோபர் 25, 2000ஆம் நாள் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தை கொட் பிறே குணத்திலக்கா மூடிமறைக்க உதவினார் என்பதை நூலாசிரியர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அமெரிக்க ஆதரவோடு இராணுவ ஆட்சி நடைபெற்ற தென் அமெரிக்காவின் குவத்தமாலாவில் 1954 தொடக்கம் கொந்தளிப்பு நிலை காணப்படுகிறது. 11 மில்லியன் மக்கள் தொகையில் 60 வீதமானோர் சுதேசிகளான மாயா இந்தியர்கள் அமெரிக்காவின் வாழைப் பழத்தோட்டம் என்றும் வர்ணிக்கப்பட்ட இந்த நாட்டில் சுதேசிகளின் உரிமை அடியோடு மறுக்கப்பட்டது. இராணுவ ஜெனரல்கள் அமெரிக்காவின் பாரிய பெருந்தோட்ட நிறுவனங்களோடு இணைந்து ஆட்சியைத் தமது கைகளில் வைத்திருந்தனர்.

சிலகாலம் சிவில் நிர்வாகம் நடைபெற்றபோது திரைமறைவில் இராணுவம் செயற்பட்டது. 1960தொடக்கம் 1996வரையிலான 36 வருட காலம் உள்நாட்டுப் போர் நடைபெற்றபோது பெருமளவு நிதி மற்றும் இராணுவ உதவிகளை அமெரிக்கா குவத்தமாலா ஆட்சியாளர்களுக்கு வழங்கியது. தென் அமெரிக்காவின் மிக நீண்டகாலம் நீடித்த இந்த உள்நாட்டுப் போரில் 150,000 சிவிலியன் கள் கொல்லப்



பட்டனர். ஒரு மில்லியனுக்கும் மேற்பட்டோர் ஏதிலிகளாகினர். கிளர்ச்சியாளர்களுக்கும் அரசுக்கும் இடையில் அமைதிப் பேச்சுக்களை 1994இல் ஐ.நா தொடங்கியது. ஆனால் போர் தொடர்ந்தது. டிசெம்பர் 29, 1996இல் ஒரு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டாலும் இன்றுவரை உண்மையான அமைதி ஏற்படவேயில்லை. தென் அமெரிக்க விவகாரங்களில் கொலைக்குழுக்களை முதன் முறையாகப் பயன்படுத்திய வரலாறு குவத்தமாலா ஆட்சியாளருக்கு உண்டு. இதை கிளர்ச்சிக்கு எதிரான நடவடிக்கை (COUNTER - INSURGENCY) என்று ஆய்வாளர்கள் கூறுவர். (THE BATTLE FOR GUATEMALA: REBELS, DEATH SQUADS AND U.S.POWER BY SUSANNE JONAS. BOULDER, COLO, USA 1991)

பேச்சுவார்த்தையில் ஈடுபடும் அரசு அதை இரகசியமாகக் குழப்பும் தந்திரோபாயத்திற்கு உதாரணமாகத் தென் ஆபிரிக்காவில் நடந்தவற்றைக் குறிப்பிடலாம். பெப்பிரவரி 1990 இல் நெல்சன் மண்டேலா விடுதலை செய்யப்பட்டபின் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் (AFRICAN NATIONAL CONGRESS) மீதான 40 வருட தடையும் நீக்கப்பட்டது. அதன் பின் தீ கிளேர்க் (DE KLERK) தலைமையிலான வெள்ளை அரசுக்கும் கறுப்பினத் தலைவர்களுக்கும் இடையில் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகின. ஜனாதிபதி தீ கிளேர்க் இழுத் தடிப்பு உபாயத்தைக் கடைப்பிடித்ததோடு ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் ஆதரவாளர்கள் மீதான படுகொலைத் தாக்குதல்களுக்கும் மறைமுக அனுமதி வழங்கினார். இன்காதா சுதந்திரக் கட்சியினர் (INKATHA FREEDOM PARTY) அவருடைய சூழ்ச்சி வலையில் வீழ்ந்தனர். ஒரு மில்லியன் றான்ற் பணம் இக்கட்சிக்கு அரசினால் வழங்கப்பட்டது. பாரம்பரிய ஆயுதங்களை பகிரங்கமாக எடுத்துச்செல்லும் உரிமையும் அவர்களுக்கு வழங்கப்பட்டது. ஜீலை 1990இல் தாக்குதல் கள் ஆரம்பமாகின. வெள்ளை நிறப் பொலிசார் தாக்குதல் அணிகளுக்குப் பாதுகாப்பு வழங்கினர். இது பற்றி பொலிஸ் ஆணையருக்கு முறைப்பாடு செய்யப்பட்டபோது அவர் யாதொரு நடவடிக்கையையும் எடுக்கவில்லை. நவம்பர் 1990 இல் அதே மாதிரியானதொரு இன்றுமோர் தாக்குதல் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் ஆதரவாளர்களின் குடியிருப்புக்கள் மீது நடத்தப்பட்டது. இம்முறையும் நிராயுத பாணிகளான பல அப்பாவிகளும், பெண்களும் சிறுவர்களும் கொல்லப்பட்டனர்.

பேச்சுவார்த்தைகள் இழுபறிப்பட்டுக் கொண்டிருந்த போது பல நூற்றுக்கணக்கான உயிரிழப்புக்கள் நடைபெற்றன. பேச்சுக்கள் முறியும் கட்டத்தை நெருங்கியது. தாக்குதலின் பின்னணியில் அரசு செயற்படுவதாக நெல்சன் மண்டேலா ஜனாதிபதி தீ கிளேர்க மீது குற்றஞ் சுமத்தினார். அத்தோடு பாதுகாப்பு அமைச்சர், சட்டம் ஒழுங்கிற்குப் பொறுப்பான அமைச்சர் ஆகியோரைப் பதவிநீக்கம் செய்யும் படி அவர் கேட்டார். தாக்குதல்களை வழி நடத்தும் இரகசியக் குழுக்களைக் கலைக்கும் படியும் மண்டேலா கேட்டார். அரசு அசைய வில்லை. ஜீன் 17, 1992இல் மிகப்பெரிய தாக்குதல் ஒன்றை இன்காதாக்கள் அரசின் பாதுகாப்போடு நடத்தினர். ஒரே வாரத்தில் நடத்தப்பட்ட நான்காவது படுகொலைத் தாக்குதலாக அது அமைந்தது. பொலிசார் நடவடிக்கை எடுக்க மறுத்தனர். பேசுவதில் பயனில்லை என்பதை மண்டேலா உணர்ந்தார். “THERE WAS NO POINT IN TALKING“ என்று அவர் தனது சுயசரிதையில் எழுதியுள்ளார். (LONG WALK TO FREEDOM: NELSON MANDELA: LITTLE BROWN & CO NEW YORK, LONDON 1994/1995) பேச்சு வார்த்தைகளில் பங்குபற்றுவதை நிறுத்திக்கொள்வதாக ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் அரசுக்கு உத்தியோக பூர்வமாக அறிவித்தது. ஆகஸ்து 3.4.1992 தென் ஆபிரிக்க வரலாற்றின் மிகப் பெரிய வேலை நிறுத்தம் நடைபெற்றது. 4 மில்லியன் கறுப்பினத்தவர்கள் இதில் பங்கு பற்றினர். அரச இயந்திரம் ஸ்தம்பிதம் அடைந்தது. அதற்குப் பின் படிப்படியாக வெள்ளை நிறவெறி அரசு தனது நாசகார வேலைகளை நிறுத்தியது. ஆபிரிக்க தேசிய காங்கிரசுக்கும் இன்காதா சுதந்திரக்கட்சிக்கும் இடையில் ஒரு உள்நாட்டுப் போரைத் தொடக்கிவிடுவதுமூலம் கறுப்பினத்தவர்களின் உரிமைகளை வழங்கா மல் வெள்ளைநிற அரசைத் தொடரலாம் என்ற திட்டம் நிறைவேறவில்லை. 1994 இல் கறுப்பினத்தவர் ஆட்சி மண்டேலா தலைமையில் உதயமாகியது.

கிட்டத்தட்ட மேற்கூறியவற்றை ஒத்த நிகழ்ச்சிகள் அமைதிப்பேச்சுக்கள் தொடங்கிய 2002 இல் இருந்து சிறீலங்காவில் நடைபெறுகின்றன. நிழல்யுத்தமாக ஆரம்பித்தது இப்போது வெளிச்சத்திற்கு வந்துள்ளது. நவம்பர் 2005 இல் நடந்த ஜனாதிபதித் தேர்தலோடு தமிழ்ப் பொதுமக்கள் உயிரிழப்பு பன்மடங்காகியுள்ளது. ஆட்கடத்தல், காணாமற்போதல், வீடு புகுந்து சுட்டுக்கொல்லுதல் போன்றவையும் பாலியல் வல்லுறவுகளும் இணைந்து தமிழர் வாழ்வை நரகமாக்கியுள்ளது. இராணுவ ஆட்சி மீண்டும் யாழ்.குடாவில் தொடங்கியுள்ளது. இராணுவத்திற்கு ஒத்துழைப்பு வழங்குங்கள் என்று அரச அதிபர் கிராம சேவையாளர்களுக்கு விடுத்த சுற்றுநிருபம் இதற்குச் சாட்சியாகிறது. யாழ்.செயலகம் இராணுவத்தின் கீழ் இயங்குவதை மறுப்பதற்கில்லை. தமிழீழத்தில் நிலைகொண்டுள்ள சிங்கள இராணுவத்தினரும் அவர்களுடன் இணைந்து செயற்படும் தமிழ் ஒட்டுக்குழுக்களும் இப்போது தமது முகங்களைக் கறுப்புத் துணியால் சுற்றிக் கட்டி மறைத்துள்ளனர். ஆகஸ்து 30,1999இல் கிழக்குதிமோரில் நடந்த கருத்துக்கணிப்பு வாக்கெடுப்பில் 78.5 வீதத்தினர் சுதந்திரத்திற்காக வாக்களித்தனர். அதன்பின் இந்தோனேசியப் படைகள் ஏவிய கொலைக்குழுக்கள் கிழக்குத் தீமோரில் வெறியாட்டம் ஆடிப்பெரும் உயிரிழப்புக்களையும் சொத்தழிவுகளையும் ஏற்படுத்தினர். இக்குழுக்களைச் சேர்ந்த அனைவரும் தமது முகத்தைக கறுப்புத் துணியால் கட்டியிருந்தனர். உலகில் இன்று முனைப்புப் பெற்றுள்ள தேசிய இனங்களின் பிரச்சினையில் சிறீலங்கா விவகாரம் முதலிடம் பிடிக்கிறது. சிறீலங்கா அரசின் நிலைப்பாடு இராணுவத் தீர்வாக இருக்கிறது. ஆனால் அரசியல்தீர்வை நாடும் போக்கை இது வெளிக்காட்டுகிறது. சர்வதேச சமுதாயம் இராணுவத்தீர்வை ஏற்க மாட்டாது என்பதே இப்போக்கின் காரணம். கூர்ந்து நோக்கும்போது அரசின் உள்நோக்கம் தெளிவாகத் தெரிகிறது. எதுவரினும் பாதிப்புக்களைச் சுமப்பவர்கள் அப்பாவிப் பொதுமக்கள் மாத்திரமே.

மார்கழி, 2005 – தை, 2006 – விடுதலைப்புலிகள்

# எமது வரலாற்றைப் பதிவு செய்து ஆவணப்படுத்தாமை பெருங்குறையாகும்

## இளங்குரமரன் தெரிவிப்பு (1995)

தமிழர்கள் தமது வரலாற்றினையும், சாதனைகளையும் பதிவு செய்து ஆவணப்படுத்தாமை எமக்குள்ள மிகப்பெரிய குறைபாடாகும் என தமிழீழக் கல்விக் கபழகப் பொறுப்பாளர் வெ. இளங்குமரன் அவர்கள் 1995 ஆம் ஆண்டு வல்வெட்டித்துறையில் நூல் வெளியீட்டு விழாவில் உரையாற்றும் போது தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் பேசுகையில், இந்த மண் செய்த அரிய சாதனைகளும், சம்பவங்களும் வரலாற்றில் பதிவு செய்யப்பட்டு ஆணவப்படுத்தப்படவில்லை. இதைப்போலவே தமிழர்கள் தமது மொழியையும், இனத்தையும் பற்றிய பதிவுகளைப் வேணவில்லை. மிகவும் தொன்மையான பல இலக்கியங்கள் தமிழல் இருந்தும் அவைபற்றிய முழு விபரங்களும் பதிவு செய்யப்படவில்லை. இவ்வாறான நிலையில் எமது மொழிக்கு, இனத்துக்குப் பின்னர் தோன்றிய மொழிகள், இனங்கள் எல்லாம் மிகவும் சிறப்புற்று வளங்குவதைக் காணலாம். எனவே இந்நூல் போன்ற ஆவணப்படுத்தக்கூடிய பதிவேடுகள் வெளியாவதன் மூலம் எமது காதனைப் பதிவுகளை நிலைநிறுத்திக் கொள்ளலாம் என கூறினார்.

**1995ம் ஆண்டு வெளிவந்த விடுதலை சார்ந்த ஏட்டிலிருந்து தேசக்காற்று.**



# உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, ஐரோப்பிய ஒன்றியம் தமிழ் தேசத்தின் இருப்பை அழிக்க உதவுகின்றனவா?

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன்

டிசம்பர் 11, 2021

தமிழர்களின் இனப்பரம்பலை மாற்றியமைத்து தமிழ் தேசத்தின் இருப்பை இல்லாமல் அழிப்பதற்கான வேலைத் திட்டங்களுக்காகவா உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, ஐரோப்பிய ஒன்றியம் உள்ளிட்ட அமைப்புகள் சிறீலங்காவுக்கு உதவிகளை வழங்குகின்றனவென தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் எம்.பி.யான செல்வராசா




கஜேந்திரன் கேள்வி எழுப்பினார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை சுற்றாடல் அமைச்சு, வன ஜீவராசிகள் மற்றும் வனப்பாதுகாப்பு அமைச்சு மற்றும் வன ஜீவராசிகள் பாதுகாப்பு யானை வேலி மற்றும் அகழிகளை நிர்மாணித்தல் உள்ளிட்ட பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் மீள் காடாக்கம், வன வள அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு ஆகியவற்றின் மீதான கருத்தை முன்வைக்கையிலேயே இவ்வாறு கேள்வி எழுப்பிய அவர் மேலும் கூறுகையில், வவுனியா வடக்கின் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள வெடிவைத்த குளம் பகுதியில் 1984ஆம் ஆண்டு காலப்பகுதியில் இராணுவம், ஊர்காவல் படைகளின் அச்சுறுத்தல் காரணமாக அங்கிருந்து மக்கள் வெளியேறி இருந்தார்கள். அந்த மக்கள் மீளவும் அங்கு மீளக் குடியமர அனுமதிக்கப்படாத நிலையில் அந்தப் பகுதியில் பெரியகட்டிக் குளம் ஒதுக்கக் காடு என அறிவிக்கப் பட்டிருந்ததுடன் அதன் எல்லைகள் விரிவாக்கம் செய்யப்பட்டன.

யுத்தம் 2009 ஆம் ஆண்டு முடிவடைந்த பின்னரும் அங்கு மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்படாத நிலையில் அப் பகுதியில் கச்சல்சமளங்குளம் என்று சொல்லப்படுகின்ற கிராமத்தின் பெயர் 'சப்புமல் தென்ன' மாற்றம் செய்யப்பட்டு




அங்கு பெரியதொரு "சப்புமல்கஸ்கட" என்ற விகாரையும் அமைக்கப்பட்டுள்ளது.

அதுமட்டுமல்லாது இந்த பெரியகட்டிக்குளத்தையும் அதற்குப் பக்கத்திலிருந்த இன்னொரு சிறிய குளத்தையும் இணைத்து காடழிக்கப்பட்டு ஒரு பாரிய குளம் அமைக்கப்பட்டு தமிழர்கள் விவசாயம் செய்து வந்த 300 ஏக்கர் வயல் நிலங்கள் உருவாக்கப்பட்டு சிங்கள மக்கள் குடியேற்றப்பட்டுள்ளார்கள். அந்த விகாரைக்குச் செல்வதற்காக இப்போது நெடுஞ்சலைகள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண் டோவின் ஆதரவோடு ஒரு கார்பட் வீதியும் அமைக்கப்பட்டு வருகின்றது.

காடுகள், ஒதுக்கக் காடுகள் என்ற சட்ட திட்டங்களானது வடக்கு, கிழக்கைப் பொறுத்தவரையில் தமிழர்களின் நிலங்களை பறிமுதல் செய்து பெரும்பான்மையினத்தவர்களின் தேவைகளுக்காக கொடுத்து ஓர் இனக்கரைப்பு செய்வதன் மூலம் எமது இனத்தை இல்லாமல் செய்யும் ஒரு வேலைத் திட்டமே இங்கு நடைபெறுகின்றது. இந்த விடயத்தில் அமைச்சர் கவனம் செலுத்த வேண்டும். தமது பகுதிகளில் தமிழர்கள் முழுமையாக மீளக்குடியமர நீங்கள் அனுமதிக்க வேண்டும்.

ஒதுக்கக் காடுகளுக்குள் சிங்களவர்கள் விரும்பியதைச் செய்வதையும் 6 அடிக்கு மேலாக மரங்கள் வளர்ந்துள்ளதால் அவை ஒதுக்கக்காடுகள் என்றும் கூறுவதையும் ஏற்றுக்கொள்ள முடியாது. இது மிக மோசமான திட்டமிட்ட சிங்கள பௌத்தமய செயற்பாடு என்பதை இங்கு பதிவு செய்கிறேன்.

அடுத்ததாக முல்லைத்தீவு மாவட்டத்தில் மாந்தை கிழக்கு துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவுகளில் 23,803 ஏக்கர் ஏனைய காடுகள் என்ற பகுதிக்குள் வரும் காடுகளை ஒதுக்கக்காடுகளாக புதிதாக அறிவிப்ப தற்கான ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. இது உங்களின் சுற்று நிருபங்களுக்கும் தீர்மானங்களுக்கும் முரணானவை. அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் 2021/2ஆம் இலக்க சுற்று நிருபத்தின் பிரகாரம் காணி அமைச்சினால் பிரதேச செயலகங்களுக்கு ஏனைய காடுகள் என்பதை நீங்கள் நிர்வாகம் செய்ய முடியு மென அறிவிக்கப் பட்டுள்ளது.




அந்தச் சுற்று நிருபம் சொல்கிறது புதிதாக ஒதுக்கக் காடுகள் அறிவிக்கப் படுவதாக இருந்தால் அது தொடர்பாக ஒரு வரை படம் தயாரிக்கப்பட்டு அந்த வரை படம் பிரதேச செயலாளரால் அங்கீகரிக்கப்பட்ட பின்னர் தான் ஒதுக்கக் காடுகளை அறி விக்க முடியுமெனக் கூறப்படுகின்றது. ஆனால் அதனை மீறி இந்த நடைமுறைகள் எதுவும் இல்லாமல் வடக்கில் பாரிய அபிவிருத்திகளை தேவைப்படக்கூடிய, மக்கள் குடி யிருப்புகளை தேவைப்படக்கூடிய பகுதிகள் அவசர அவ சரமாக ஒதுக்கக் காடுகளாக அறிவிக்கப்படுவது ஏன்? இதனை எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது.

உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, ஐரோப்பிய ஒன்றியம் உள்ளிட்ட உங்களுக்கு உதவி செய்யும் அமைப்புகளிடம் நான் கேட்க விரும்புவது என்னவென்றால் நீங்கள் சிறீலங்காவுக்கு உதவிகளை வழங்குவது தமிழர்களின் இனப்பரம்பலை மாற்றியமைத்து தமிழ் தேசத்தின் இருப்பை இல்லாமல் அழிப்பதற்கான வேலைத்திட்டங்களுக்காகவா எனக் கேள்வி எழுப்பினார்.

TAX ANALYST
ACCOUNTING | BOOKKEEPING | & MORE
Affordable and Reliable Services
Experienced Accountants
Presonal & Corporate Tax
Tax Planning / Audit Appeal
HST/GST/WSIB
Bookkeeping & Payroll
UBER/LYFT Tax Filling
CRB/CERB HELP

OFFICE
416-898-8879
CALL FOR APPOINTMENT
416-838-2826
105Consumers Drive.
Whitby ON L1N 1C4
115 Mathesan Blvd W.
Mississauga ON L5R 1C6
www.taxanalyst.ca
taxmatters@kannantax.com

Allstate.
You're in good hands.
உங்களுக்கு சேமிக்க உதவும்
தள்ளுபடிகள் பற்றி என்னிடம் கேளுங்கள்
பயணக் காப்புறுதி
கனடாவுக்கு வருபவர்களுக்கான காப்புறுதி
செல்லப் பிராணிக் காப்புறுதி
ஆயுள் காப்புறுதி
முதலீடுகள் மற்றும் நிதித் திட்டமிடல்
தனிப்பட்ட சேவைக்கும் ஆலோசனைக்கும்
என்னைத் தொடர்பு கொள்ளுங்கள்

Raji Linghan
Ajax Agency
15 Westney Road, N
(416) 817 5060
rlinghan@allstate.ca
Trademark owned by Allstate Insurance Company used under licence by Allstate Insurance Company of Canada. ©2020 Allstate Insurance Company of Canada. 01IE | 201316

# வேலை வாய்ப்பு

Whitby, Durham பகுதியில்

**வீட்டு பணிப்பெண் தேவை**

தங்குமிட வசதியுடன் கூடிய
பிள்ளைகளை பராமரிப்புடன்
சமையல் செய்வதற்கு
அனுபவமுள்ள
பணிப்பெண் தேவை.

தொடர்புகளுக்கு:

416.616.6005





**சிவஸ்ரீ சிவ.ஜனா குருக்கள்**

Shiva Sri S.JANARTHANA KURUKKAL

Priest (JANA IYA)

உங்கள் இல்லங்களில் நடைபெறும்
அனைத்து மங்கள வைபவங்களையும்
ஆகம முறைப்படி சிறப்பாக நடத்தி
வைப்பதற்கு அழையுங்கள்

**Tel: 647.449.6542**

aarthanan@hotmail.com
aarthananyathu@gmail.com



## HIGH EFFICIENCY HEATING & COOLING AIR SOLUTIONS

**ALL MAKES & MODEL**

Furnance, Air Conditioner, Hot Water Tank, Tankless Water Heater,
HRV, Fireplace, Attic Insulation, Duct Work, Gas Line For BBQ, Stove, Dryer

24h EMERGENCY SERVICES






**WHY UPGRADE TO TANKLESS?**

KD NAVIEN
The Leader in Condensing Tankless Technology

Endless Supply of Hot Water
No Up-front Equipment Cost
Save Up To 40%
Save Money & Space Design
15 Years Warranty
No More Risk of Flooding or Explos

FREE
ESTIMATE
Sales, Service & Repair

**S.Kumar 416-993-8001**
geansam@yahoo.com

FINANCING WITH $0 DOWN
HOME ENERGY LOAN$15,000




# சுனாமியும் நாமும்

**- கலாநிதி க. சோமாஸ்கந்தன் -**

> **2004. 12. 26 ஆம் திகதி இடம்பெற்ற அனர்த்தம் எமது மக்களைப் பொறுத்தளவில் இரண்டாவது சுனாமியே.**
>
> **–தமிழீழத் தேசியத்தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் –**



**சென்ற நூற்றாண்டின் பிற்பகுதியில் மனிதநேயத் தலையீடு என்ற புதிய சர்வதேச அரசியல் கோட்பாடு தோற்றம் பெற்றுள்ளது. இதன் சாராம்சம் பின்வருமாறு: எந்தவொரு நாட்டில் பாரிய மனித உரிமை மீறல்கள் நடக்கின்றனவோ, அல்லது எந்தவொரு நாட்டில் அரச நிர்வாகம் முற்றாகச் சீர்குலைந்து பாரிய குழப்பமும் மனித அவலமும் நிகழ்கின்றதோ அல்லது இயற்கை அனர்த்தம் காரணமாக உயிரிழப்பும் பாரிய அழிவுகளும் நடைபெறுகின்றனவோ அவை தனியொரு நாட்டின் விவகாரம் அல்ல..**

கடலடி நிலநடுககத்தால் எழும் பேரலைகள ஜப்பான் மொழியில் சுனாமி எனப்படுகின்றன. கடலடி நிலநடுக்கம், கடலடி எரிமலை, புவி மேறபுறத் தகடுகளின் உராய்வு என்ற முக் காரணங்களால் ஆழிப்பேரலைகள் எழுகின் றன. கடலின் மேற்புறத்தில் காணபபடும் வழமையான அலை காற்றின் அழுத்தத் தாலும் சூரிய, சந்திரரின் இழுவையாலும இரவு பகலாகத் தொடர்ந்து நடைபெறுகின் றன. ஆழிப்பேரலை எதிர் பாராத் சடுதி நிகழச்சி. இதன் காரணமாக அழிவுகள் மிகக கூடுதலாக ஏற்படுகின்றன. பசுபிக் மாகடலில் ஜப்பான் தொட்டு கலிபோர்னியா வரையிலான பகுதியில "நெருப்பு வளையம்" (RING OF FIRE) இருப்பதாகச் சொல்லப்படுகினறது. பசுபிக் மாகடலின் இருபுறமுள்ள ஜப்பான் , வட அமெரிக்காவின் கலிபோர்னியா ஆகிய தரைப் பரப்புகளுக்கு அண்மையில் நிலநடுக்க வளையம் காணப்படுகிறது. இதன் காரணமாக பசுபிக் மாகடலில் ஆழிப் பேரலைகள எழுந்த வாறு உள் ளன. கூடுதலாக் ஜப்பான் தீவுகள் பாதிப்படைகின்றன. இவ்வகை அலைகளுக்கு ஜப்பான் நாட்டவர் வைத்த பெயர் இன்று எல்லா மொழிகளுக்கும் பொதுவான சொல்லாக வழங்குகிறது.

அமெரிக்காவின் ஐம்பதாவது மாநிலமான ஹவாய் தீவுத்தொகுதி அமெரிக்காவின் முப்பத்தியொராவது மாநில்மான கலிபோனியாக் கடலோரத்திலிருந்து 2,400 மைல் தூரத்தில் காணப்படுகிறது. இத்தீவுகளில் சுனாமித் தாக்கம் அதிகளவில் உண்டு. இங்குவாழும் மக்கள் கடலின் குண் இயலபுகளை நன்கு உணர்ந்து உயிர் வாழக் கற்றுள்ளனர். கடல் நீர் வெகுதூரம் பின் நோககிச் செல்வதைக் கண்டால் இத்தீவு மக்கள் எதிர்த்திசையில் ஓடி மேட்டுப் பகுதிகளில தஞ்சம் புகுவார்கள் .

பசுபிக் மாகடலின் நடுப்பகுதியில் இருக்கும் தீவுகளில் எரிமலைகள் வெடித்து அனல் கக்கிக் கொணடே இருக்கும் . கடலடியில் தோன்றிய் எரிமலைகள் பல நூற்றாண்டு காலப் பகுதியினபின் ஹவாய்த் தீவுகளாக எழுந்து நிற்கின் றன. சில தீவுகளில் இன்றும் அணையாத எரிமலைகள காட்சி தருகின்றன்.

ஆழிப்பேரலை அனர்த்தங்கள் பசுபிக் மாகடல் பிராந்தியத்தில் கூடுதலாக நடந் தாலும் இந்து மாகடல் , அத்திலாந்திக் மாகடல் போன்றவற்றிலும் அவை காலத்திற்குக்காலம் நடைபெறுவதை புவி வரலாறு உணாத்துகின்றது. நவீன ஐரோப்பிய வரலாற்றில் மிகப்பெரும் சேதத்தை விளைவித்த ஆழிப் பேரலை 250 வருடங்களுக்கு முன்பாக நவம்பர் 01, 1755 ஆம் நாள் போர்த்துக்கல் நாட்டில் நடைபெற்றது. இந்த நாட்டின் அத்திலாந்திக் கடலோரத்தில் நடந்த கடலடிப் புவிநடுக்கம் பிரமாண்டமான அலைகளைக் கிளப்பியது. தலைநகர் லிஸ்பன் (LISBON) மீது மோதிய கடலலைகள் லிஸ்பனில் மாத்திரம் 30,000 வரையிலான மனித உயிர்களைக் காவுகொண்டது. ஐரோப்பாவின் அப்போதைய நான்காவது மிகப்பெரிய நகரமாகவும், ஐரோப்பாவின் அதியுச்ச செல்வந்த நகரங்களில் ஒன்றாகவும் இருந்த லிஸ்பன் தனது பழைய நிலைக்குத் திரும்பாமல் இன்றுவரை நலிவுற்றுக் காணப்படுகிறது.

போர்த்துக்கல் நாட்டின் தென் கரையோரம், தென் மேற்கு ஸ்பெயின், வடஆபிரிக்கா, என்பனவும் இவ்வாழிப் பேரலையால் பாதிப்படைந்தன. பெல்ஜியம். பிரித்தானியா, பிரான்சு, அயர்லாந்து, நெதாலாந்து என்பனவும் போர்த்துக்கல்லுக்குச் சொந்தமான அத்திலாந்திக் கடலின் நடுவிலுள்ள அஸோர்ஸ் தீவுகளும் கரையோர அழிவுகளைச்சந்தித்தன. அன்று பதிவான உயிர் தப்பியோரின் வாக்குமூலங்களின் படி அண்மையில் நடந்ததுபோல் கடல் பினனோக் கிச் சென்ற சிறிது நேரத்தின் பின் முழுமூச்சுடன் முன்னோக்கிவந்து தரைப் பகுதிகுள் புகுந்து அழிவை ஏற்படுத்தியது. பொருளாதார ரீதியாக மிகவும் நலிவுற்ற போாத்துக்கல் நாட்டில் இன்றும் ஆழிப்பேரலை் சம்பந்தமான பீதி தீரவில்லை. தெற்கு ஆசியர் சந்தித்த அனர்த்தத்திற்கு ஒரு வாரத்திற்கு முன்பாக ஒரு சிறியரக நிலநடுக்கம் அங்கு ஏற்பட்டது. இப்போது போர்த்துக்கல் நாட்டு ஊடகங்கள் கேட்கும் முக்கிய கேள்வி இதுதான் நவம்பர் 01, 1755இல் நடந்தது போல் மீண்டும் நடந்தால் அதை எதிர்கொள்ளத் தாயாரா? தயாரில்லை என்று அவர்களே பதில் கூறுகிறார்கள்.

டிசம்பர் 26, 2004 வரை இந்திய - இலங்கை கடற்பகுதியில் ஆழிப் பேரலைகளுக்கு வாய்ப்பில்லை என்ற பரவலான கருத்து நிலவியது. கடற்கோள் என்பது தமிழர்தம் தொன்மை வரலாற்றுடன் நெருங்கிய தொடர்புடைய சொற்றொடர். நிலவியல் நிபுணர்கள் கூற்றுப்படி மடகஸ்கார், இலங்கை, இந்தியா உட்பட டெக்கான் பள்ளத்தாக்கு வரையிலான பிரதேசம் ஒரு நிலத்தொகுதியாக இருந்ததென்றும் அது லெமூரியா கண்டம் என்று அழைக்கப்படுவதாகவும் கூறுகின்றனர். தமிழ் இலங்கியத்தில் இது குமரிக்கண்டம் எனப்படுகின்றது. அமெரிக்காவின் கோர்னெல் பல்கலைக்கழக ஆராய்ச்சிக் குழுவினர் கொன்ட்வானா என்ற பெயரில் இலங்கை நாடு மடகஸ்கார் தொட்டு அவுஸ்திரேலியா வரை பரந்து கிடந்ததாகவும், இப்போதைய இலங்கைத்தீவு அதன் ஒரு சிறு பகுதி என்றும் தெரிவிக்கின்றனர். மாலைதீவு மற்றும் இலட்சதீவுத் தொகுதிகளின் விலங்கியல் மற்றும் புவியியல் (THE FAUNA AND GEOGRAPHY OF MALDIVES AND LACCADIVES ARCHIPELAGO) என்ற நூலை எழுதிய ஜே. எஸ். கார்டினர், "இலங்கை, மடகஸ்கார், மாலைதீவு ஆகியவை முன்னொருகால் இணைந்திருந்தன." என்கிறார். மடகஸ்கார் தீவு கோமார் (KOMAR) என்ற பெயரால் வழங்கப்படுவதும். அங்கு வாழும் மக்கள் கொமறி (KOMRI)என்று அழைக்கப்படுவதும், அங்குள்ள கடல் கொமோறொஸ் (COMOROS) என்றும, சில தீவுகள் கொமேரோ (COMERO ISLANDS) எனப்படுவதும் குமரிக்கண்டம் முதலியவற்றை நினைவுபடுத்துகின்றன. கடலில் மூழ்கிய முதுதமிழ் நிலமான குமரிக்கண்டம் பற்றிய ஆய்வுகள் முழுமை பெறாதிருப்பது கவலைக்குரியது.

ஆழிப்பேரலைகள் பெருமளவு நிலப்பரப்பை விழுங்குகின்றன, புதிய நிலப்பரப்புகளை உருவாக்குகின்றன. கடலடி நிலங்கள் மேலெழுந்து காலப்போக்கில் மனித வாழ்விடங்களாக மாறுகின்றன. மாற்றம் என்பதே மாறாத விதி என்ற நியதிக்கு அமைவாக இது நடைபெறுகின்றது. இலங்கைப் புதைபடிவத் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் நாயகம் டாக்டர் எஸ். யூ. தெரனியகல (Dr. S.U.DERANIYAGALA, FORMER DIRECTOR GENERAL OF ARCHEOLOGY) செய்த ஆய்வுகளின்படி கடற்கரையோரத்தில் காணப்படும் சரளைக் கற்கள் (GRAVEL) இலங்கைத்தீவின் பல பாகங்களில் காணப்படவதாக அறிகிறோம். இலங்கையில் கீழ்ப்புறத்தே புந்தல (BUNDALA) எனும் பகுதியில் கடல் மட்டத்திலிருந்து பதினைந்து மீற்றர் உயரத்தில் இவ்வகைக் கற்கள் அடையாளங் காணப்பட்டுள்ளன. இவை 124, 000 வருடங்கள் பழமை வாய்ந்தவை என்று காலநிர்ண



யம் செய்யப்பட்டுள்ளது. மிகவும் பழைமை வாய்ந்த கடலோரச் சரளைக் கற்கள் மாங்குளத்தில் காணப்படுவதாகவும், அவை கடல் மட்டத்திலிருந்து 60 தொடக்கம் 80 மீற்றர் வரையிலான உயரத்தில் இருப்பதாகவும் தெரியவருகிறது. தான் இப்படிவத்தை காலக் கணிப்புச் செய்யவில்லை என்று டாக்டர் தெரனியகல தெரிவித்துள்ளார்.

ஆதி மனிதர்கள் பயன்படுத்திய புராதனக் கருவிகள் மாங்குளம் உள்ளிட்ட மேற்கூறிய கடலிலிருந்து எழும்பிய பகுதிகளில் கிடைப்பதாகவும் குறிப்பிட்டள்ளார். புவித் தகடுகளின் மோதல் காரணமாக இப்பகுதிகள் மேலெழுப்பியுள்ளன. அது ஒரு மில்லியன் வருடங்களுக்கும் குறைவான காலப்பகுதியில் நடந்திருக்கலாம் என்பது ஆய்வாளர் முடிவு. இதில் கூறப்பட்ட ஆய்வுத் தரவுகள் அமெரிக்க பல்கலைக் கழகங்களான கோர்னெல் (CORNELL) மற்றும் ஹவட் (HARVARD) ஆகியவற்றில் வைப்பிலிடப்பட்டுள்ளன. தகடுகளின் உராய்வுப் பகுதிக்கு அப்பால் மிகவும் பாதுகாப்பான பகுதியில் இன்றைய இலங்கை இருக்கிறது என்று சொல்வது தவறு. இலங்கையின் கரையோரம் வேகமாக மாறிவருகிறது. அதன் உருவமைப்பும் வரைபட விம்பமும் மாற்றம் அடைகின்றன. கரையோரத்தில் குடியிருப்புக்களை அமைப்பது மிகவும் ஆபத்தானது. யால சரணாலயத்திலும் கடல் மட்டத்திலிருந்து 40 மீற்றர் உயரத்தில் கடலோரச் சரளைக் கற்கள் காணப்பட்டுள்ளன. பூமிப்பந்தில் 71 வீதமானது நீராகவும் 29 வீதம் நிலமாகவும் காணப்படுவதால் நிலப்பரப்பு மூழ்குவதற்கு கூடுதல் வாய்ப்புக்கள் இருக்கின்றன. அதே சமயத்தில் புதிய நிலம் தோன்றுவதற்கும், ஏற்கனவே உள்ள நிலம் உருவமைப்பு மாற்றம் அடைவதற்கும் சம அளவு வாய்ப்புக்கள் இருக்கின்றன.

பூமிப்பந்தின் உட்புறத்தே அதன் நடுப்பகுதியில் பூமியை ஒத்த வட்ட வடிவில் ஒரு இரும்பு மற்றும் நிக்கல் உலோக உருண்டை இருக்கிறது. இதுபற்றி ஆய்வுசெய்த அமெரிக்க கொலம்பியா பல்கலைக்கழகத்தின் லமொன்ற் - டொகேர்றி புவி ஆய்வு நிலையம் (LAMONT) DOHERTY EARTH OBSERVATORY) ஜூலை 1996 இல் பல வியப்பூட்டும் தகவல்களை வெளியிட்டுள்ளது. சந்திரனின் பருமனுடைய இந்த உருண்டை பூமியைப் போல் தன்னைத் தான் சுற்றிக்கொண்டிருக்கிறது. பூமி தன்னைத் தான் ஒருமுறை சுற்றுவதற்கு 24 மணிநேரம் எடுக்கிறது. ஆனால் இந்த உட்பகுதி உருண்டை சற்றுக் கூடுதலான வேகத்தில் தன்னைத் தான் சுற்றுகிறது. அதனுடைய சுற்றுவேகம் எப்போதும் ஒரே வேகத்தில் இருப்பின் 400 வருடங்களில் பூமி யிலும் பார்க்க ஒருசுற்றுக் கூடுதலாகச் சுற்றிவிடும் என்று இந்த ஆய்வு நிலையம் கூறுகின்றது. இப் பரபரப்பான ஆய்வுச்செய்தி ஜூலை 29, 1996 ரைம் சஞ்சிகையில் பிரசுரமாகியுள்ளது. பூமியின் நடுவே திடமான உருண்டை இருப்பது விஞ்ஞானிகளுக்கு ஏற்கனவே தெரிந்த உண்மை, அது சுற்றிக் கொண்டிருக்கிற செய்தி 1996 இல் தான் தெரிந்தது.

பூமிப்பந்து உட்புறத்திலிருந்து வெளிப்பகுதி வரையில் மூன்று முக்கிய படலங்களைக் கொண்டது. மேற்கூறிய திடமான உட்புற உருண்டையை விட இன்னும் இரு பாகங்கள் இருக்கின்றன. உருண்டையைச் சுற்றி திரவநிலைப் பாறைகளும் உலோகங்களும் இருக்கின்றன. திரவப் பகுதிக்குமேல் 1,800 மைல் வரையான தடிப்பில் மான்றில் (MANTLE) எனப் பெயரிடப்பட்ட பாறைப் படலம் காணப்படுகின்றது. மான்றிலுக்குமேல் ஒப்பீட்டில் தடிப்புக் குறைந்த புவி மேலோடு இடம்பெறுகிறது. புவி மேலோட்டுப் பகுதியை கிறஸ்ற் (CRUST) என்று அழைப்பார்கள். புவி மேலோட்டின் தடிப்பு தரையில் 30 மைலாகவும் ஆழ்கடலடியில் 03 மைலாகவும் இருக்கலாமெனக் கணிப்பிடப்படுகிறது. புவி ஆய்வாளர் நோக்கில் (01) உட்புற உருண்டையும் அதைச் சுற்றியுள்ள திரவப்பகுதியும் "கோர்" (CORE) என்றும் (02) அதற்கு மேலுள்ள பகுதி "மான்றில்" (MANTLE) என்றும் (03) மேற்புற ஓடு "கிறஸ்ற்" (CRUST) என்றும் அடையாளம் காணப்படுகின்றன. பூமியின் மேற்புறம் "லிதொஸ்பியர்" (LITHOSPHERE) என்றும் அழைக்கப்படுவதுண்டு.

புவி மேலோடு 40 கி.மீ தொடக்கம் 800 கி. மீ வரையிலான தடிப்புள்ள 7 பெரிய மற்றும் 20 சிறிய துண்டுகளாக இடம் (TECTONIC PLATES) எனப்படுகின்றன. தமிழில் கண்டத் தகடுகள் எனலாம். கண்டங்களும், கடல்களும் இத்தகடுகளின் மேற் புறத்தில் இருப்பதால், தகடுகள் நகரம்போது அவையும் சேர்ந்து இடம்பெறுகின்றன. "கண்டப் பெயர்ச்சி" என்ற கோட்பாடு 1910 இல் அல்பிறெட் வேக்கினர் (ALFRED WEGENER) என்ற ஜேர்மன் விஞ்ஞானியால் உருவாக்கப்பட்டது. இவருடைய கூற்றுப்படி 200 மில்லியன் வருடங்களுக்கு முன் ஒரேயோரு கண்டம் மாத்திரம் இருந்ததாகவும் இது பகுதி பகுதியாக காலப்போக்கில் உடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. உடைவுக்கு புவித் தகடுகள் காரணமாகச் சுட்டிக்காட்டப்படுகிறது. 1960கள் வரை வேகினரின் கோட்பாடகள் ஆதரவு செயற்பாடுகளும் இக்காலப்பகுதியில் ஏற்றுக் கொள்ளப்பட்டபின் கண்டப் பெயர்ச்சிக் கோட்பாடு வலுப்பெற்றது.

தகடுகள் அசைவதற்கான காரணம் பூமியின் அசாதாரண உள்வெப்பம் எனப்படுகிறது. பூமியின் உட்புற வெப்பம் 5000 பாகை பரனைற் என்று விஞ்ஞானிகள் மதிப்பிடுகின்றனர். ஒரு பாத்திரத்தில் கொதித்துக்கொண்டிருக்கும் நீரில் கொதிநீர் மேலும் கீழுமாகச் கூற்றுவத போல பூமியின் வெப்ப ஆவியும் சுற்றுகிறது. இது தகடுகளை அசைக்கப் பொதுமானதாக இருக்கிறது. எல்லாக் கண்டங்களும் அசைந்தபடியே இருக்கின்றன. இதற்கு தகடுகள் நகர்வு காரணமாகிறது. இதுதான் கண்டப் பெயர்ச்சியனி வளிக்கம். கடந்த 30 வருடங்களாக தகட்டு நகர்வு விளக்கம் ஆதிக்கம் செலுத்துகிறது. நோர்வேயின் பேர்கன் பல்கலைக்கழகப் பேராசிரியர் கார்ஸ்ரன் ஸ்ரோறெற்வெற் (KARSTEN STORET VEDT) வெளியிட்ட கருத்துப்படி பூமி தன்னைத் தான் கூற்றுவதால் ஏற்படும் நீர், நிலக் குலுக்கல் பூமியின் நடுப்பகுதியில் இருக்கும் உலோகம் செலுத்தும் புவியீர்ப்பு என்பனவற்றையும் தகட்டு அசைவின் கூட்டுக் காரணங்களாகச் சேர்த்துக்கொள்ள வேண்டும். எது எவ்வாறாக இருப்பினும் தகடுகள் நகர்ந்தகொண்டிருக்கின்றன, புவிமாற்றங்கள் தொடர்ச்சியாக நடக்கின்றன என்பன மறுக்க முடியாத உண்மைகளாகும்.

பாரிய அழிவுகளை ஏற்படுத்தும் புவி நடுக்கங்கள் மேற்கூறிய தகடுகள் உராயும் போது அல்லது பலமாக மோதும்போது ஏற்படுகின்றன. புதிய தகடுகள் உருவாகும்போது, புவி நடுக்கம் அதற்குக் காரணமாக அமைகின்றது. அமெரிக்காவின் புவியியல் ஆராய்ச்சிக் கழகம் (US GEOLOGCAL SURVEY) வெளியிட்ட தரவுகளின்படி வருடமொன்றுக்கு மூன்று மில்லியனுக்கும் கூடுதலான புவிநடுக்கங்கள் நடைபெறுகின்றன. அதாவது, நாளொன்றுக்கு 8, 000 புவிநடுக்கங்கள் என்ற விகிதத்தில். ஆனால் சில வருடங்களுக்கு ஒருமுறை நடப்பவைதான் ஊயிரழிவையும் பொருட் சேதத்தையும் ஏற்படுத்தும் வலுவுள்ளவையாக அமைகின்றன. புவிநடுக்கத்தின் வலு அளவீடு றிச்ரர் ஸ்கேல் (RICHTER SCALE) என்று அழைக்கப்படுகிறது. புவிநடுக்க அளவீடை உருவாக்கியவர் சாள்ஸ் றிச்ரர் என்ற அமெரிக்கப் புவியியல் விஞ்ஞானி. அவர் இவ்வளவீடை 1935 இல் உருவாக்கினார். இந்த அளவீடின்படி 1 அல்லது 2 வலுவுள்ள புவிநடுக்கத்தால் யாதொரு ஆபத்தும் இல்லை. அவற்றை உணர்வதும் கடினம். வலுக் கூடியவை 10 வரை செல்கின்றன. அவை பேரழிவை ஏற்படுத்துகின்றன.

டிசம்பர் 26, 2004 ஆம் நாள் சுமாத்திரா தீவின் ஆச்சே மாநிலத்திற்கு அருகாமையிலுள்ள கடலில் மிகப் பிரமாண்ட மான தொரு நிலநடுக்கம் ஏற்பட்டது. இது பூமியின் ஆச்சை உலுக்கியதோடு பூமியில் அதிர்வலைகளையும் ஏற்படுத்தியது. இந்த நிலநடுக்கத்தின் றிச்ரர் அளவீடு 09 என்று கணிப்பிடப்பட்டுள்ளது. 1964 மார்ச்சு 27 ஆம் நாள் அமெரிக்காவின் 49வது மாநிலமான அலாஸ்காவின் மிகப்பெரிய நகரமான அன்கறேஜ் (ANCHORAGE) பகுதியை உலுக்கிய நிலநடுக்கத்திற்கு நிகரானதாக சுமாத்திராவின் 09 அளவீடு இடம்பெறுகிறது. 26 ஆம் நாளுக்குப்பின் தொடர்ச்சியாகச் சில நிலநடுக்கங்கள் இப்பகுதியில் ஏற்பட்டன. அவற்றின் சராசரி அளவீடு 05. பெரும்பாலான நிலநடுக்கங்களும் எரிமலைகளும் புவித்தகடுகளின் முட்டிமோதலால் ஏற்படுகின்றன என்று முன்பு கூறிறோம். அதுதான் இங்கும் நடைபெற்றது. கடலடிப் பூகம்பத்தின் மிக முக்கிய விளைவாக சுனாமி அலைகள் தோன்றுகின்றன. பெரும் பாறைகளும் களிமண் குவியல்களும் கடலின் ஒரு பகுதியிலிருந்து இன்னோர் பகுதியில் விழும்போதும் சுனாமி அலைகள் கிளம்புகின்றன.

சுனாமி என்ற ஜப்பான்மொழிச் சொல் "நாமி" என்றால் அலைகள் "ற்சு" என்றால் துறை முகம் அல்லது ஒடுக்கமான நிலப்பகுதி என்ற இரு சொற்களின் கூட்டாகும். சுனாமி என்றால் புயல் என்றும் அர்த்தம் கூறுவோர் உள்ளனர். பலநூறு கிலோமீற்றர் நீளமானதாகவும் பத்து மிற்றருக்கும் கூடிய உயரமுள்ளதாகவும் பத்து மீற்றருக்கும் கூடிய உயரமுள்ளதாகவும், ஜெற் விமானத்தின் பறப்பு வேகத்திலும் கூடிய வேகமுடையதாகவும் சுனாமி அலைகள் இடம்பெறுகின்றன. டிசம்பர் 26 ஆம் திகதிச் சுனாமி அலை 600 கி.மீ தூரத்ததை 75 நிமிடங்களில் கடந்தது. இது மணிக்கு 480 கி.மீ என்று அளவிடப்படுகிறது. கடலின் ஆழமான பகுதிகளில் சுனாமி அலைகளின் உயரம் அசாதாரணமாக இருப்பதில்லை. அப்படியான கடலில் பயணிக்கும் கப்பல்களின் கீழால் சுனாமி அலைகள் செல்வதை கப்பலில் இருப்போர் அவதானிப்பது கடினம். கரையை நெருங்கும் போது சுனாமி அலைகள் உயரக் கிளம்புகின்றன. 1960 இல் தென் அமெரிக்காவின் சிலிநாட்டு கரையோரத்தில் 8.5 றிச்ரர் வலுவுள்ள நிலநடுக்கம் ஏற்பட்டது. அதிலிருந்து கிளம்பிய சுனாமி அலைகள் பசுபிக் மாகடலை குறுக்கறுத்துப் பாய்ந்து ஜப்பான் பேரழிவைச் சந்தித்தது. பசுபிக் மாகடலின் ஒரு பக்கத்திலிருந்து மறுபக்கத்திற்கு 24 மணி நேரத்தில் சுனாமி அலைகள் முன்னோக்கிச் செல்லமுடியும். இலங்கையின் கிழக்கு, தெற்குப் பகுதிகளைத் தாக்கிய அலைகள் 1400 கி.மீ. தூரத்தைக் கடந்து வந்துள்ளன. இத் தூரத்தைக் கடப்பதற்கு அவை ஒன்றரை மணி நேரம் எடுத்தன. அலை வருவதுப்ற்றி முன்னறிவித்தல் கிடைத்திருந்தால் பல மனித உயிர்களையும் பெறுமதிமிக்க சொத்துக்களையும் நிச்சயமாகக் காப்பற்றியிரக்க முடியும். தவறுகளைச் சாதகமாக்கியபடி நாம் எதிர்வரும் காலத்தில் உயிர்காக்கும் திட்டங்களை வகுத்தல் வேண்டும்.




எங்கும் நடக்கலாம், எப்போதும் நடக்கலாம் என்பது மறுக்கமுடியாத உண்மையாக இருப்பினும் உலகின் மிகக் கூடுதலான சுனாமி அலைகள் பசுபிக் (22 ஆம் பக்கம் தொடரும்)



# ஆழத்துயர் புதைத்து மீளல்

வானககூரையின கீழேயொரு வாழவுசமைதது
வாசலெங்கும் பூவாய் மலர்ந்திருந்தோம்.
காற்றுக்கு கையசைத்து
குயிலுக்கு குரல் வழங்கி
மழையின் பாதங்களுக்கு கொலுசு மாட்டி
சின்ன ஜீவிதமெனினும் சிரித்திருந்தோம்.
சுமையற்றிருந்ததால்
வலியற்றிருந்தது எம் வாழ்வு.
வெளியெ தெரியவரதா வெளிச்சமாய்
அழகெழுத்திடந்தது அன்றாடம்.
இடையில் வந்தனதான்
இத்தனை இடியும் வதையும்.
காலவெள்ளம் கரைக்கக் கரைக்க
வாழ்வின் சுவர்கள் வலிமையிழந்தன.
இடிமேல் இடியிறங்க
குட்டிச்சுவரானது சிதிலமுற்ற சுவரை
பூகம்பப்பேய் பிய்த்தெறிந்தது இன்று.
'சுனாமி'
என்ற பெயர்கொண்டு அழைத்தாலும்
எமக்கிது எமன்.
வாழ்வைக் குதறிய வல்லூறு.
26.12.2004 ஞாயிற்றுக்கிழமை
அன்றும் வழமைபோற்தான் விடிந்தது.
எந்த அசுமாத்தமுமின்றிக் கிடந்தது கடல்.
மடியேறுவோரைச் சுமந்தும்
கரைவாழுவோருடன் மகிழ்ந்தும்
படகோடும் வலையோடும் கலகலத்தபடி
'கனககுதுகலம்' பாடியது கடல்.
உள்ளே மீன்களும்
வெளியே பறவைகளும்
கடலின் பாடலுக்குத் தாளமிட்டன.
எல்லாம் வழமைபோற்தான் வடிவுகாட்டின.
எவரறிவார் இப்படியும் இடிவிழலாமென்று?
வந்தது இடி.
என்ன நடக்குதென எவருக்கும் தெரியாமல்
வந்ததும் போனதுமான சில கணங்களில்
வரைபடமே மாறிவிட்டது.
இழகுமுகம் மாறி அழுகைமுகமானது கரை.
விடிந்தபொழுது இருண்டுபோனது.
கடலள்ளிப்போனது
எங்கள் காவிரிப்பூம்பட்டினங்களை.
கழிக்குள் அள்ளுண்டோரின்
அபயக்குரல்களை உள்ளேயமுக்கி
உயிர்கொண்டுபோனது அலை.
ஊர்கள்
உறவுகள்
வேர்கள்
விழுதுகள்
பூக்கள், பிஞ்சுகள், காய்கள், பழங்களென
பசியாறிப்போனது பாழ்பட்ட கடல்
எதையும் விடவில்லை எமன்.
ஓடிச்சென்று பார்த்தவர் முன்னே
ஒன்றுமிருக்கவில்லை.
முகம் சிதைந்த கரையும்
உயிர்குடித்து வீசிய உடல்களும்
இந்தா எடுத்துப்போ என்பதாய் கிடந்தன.
ஒற்றைக்குருவி தனித்திருந்து தேம்புதல்போல்
ஆயிரமாயிரம் உயிரற்ற சடலங்கள் முன்னே
ஒரு சில உயிருள்ள சடலங்கள் அழுகின்றன.
எல்லோரும் ஊமையராய்
எல்லோரும் வலுவற்றவராய்
எழுந்துலவும் மரங்களெனத் திரிகின்றனர்.
இனி என்ன வந்தென்ன?
இந்திரபுரிகள் இடிந்துவிட்டனவே
நிலவிற்குளிக்கும் சிற்றில்களும்
உள்ளிருக்கும் உயிர்களும் போயினவே.
அழகு போனது
அம்பாப்பாட்டு போனது
கூத்துப் போனது
கும்மாளம் போனது
கட்டுச்சோறு காட்டி கரைவந்து
கையசைக்கும் காதலியர் போயினர்.
மடிநிறைந்து கரைதிரும்ப ஓடிவரும்
உரிஞ்சான்குண்டிச் செல்வங்களில்லையே.
கடல்வற்றி நிலமான விந்தையும்
கறுப்பு நிறமாகி அலைவந்த அதிசயமும்
புரிவதற்கும் அறிவதற்கும் நெடுநாளாகும்.
அறியப்படாமலும் போகலாம்.
விஞ்ஞான சூத்திரங்கள் விடுவிக்கப்படும்போது
விதியா இது சாதியா என்பது விளங்கும்.
என்ன நடந்தாலும்
இனிப் போனவுயிர் வருமா
தொலைநத வாழவு தருமபுமா?
முள்முடி சூடி
முதகிற் பாரச்சிலுவை சுமந்த
பாவப்பட்ட மக்களின் பயணப்பாடு முடிந்தது.
இயேசுவே!
எம்மையேன் இரட்சிக்க மறந்தீர் சுவாமி.
ஆலமுண்ட நீலகண்டனே!
எம்மைச் சாவு தின்றபோது தாங்காதிருந்ததுக்கு
அன்றுமட்டும் உமக்கென்ன அலுவலிருந்தது பிரபு.
அல்லாவே!
பிள்ளைகளைக் கைவிட்டதேனோ?
புத்தபெருமானே!
வெள்ளம் வருகுதென்றாயினும்
சொல்லவேண்டாமோ?
எல்லோரும் ஒதுங்கிக்கொண்டீர்கள்
நாங்கள்தான் தனித்துப்போனோம்.
வேண்டாம் இனியுமுகங்கள் விளையாட்டு.
துயராற்றி நாங்களே நிமிர்ந்தாலன்றி
சோகம் தீராது.
இது பூப்பறிக்கும் தேசமாயின்
பலகாலம் அழுதபடி கிடந்தாலும் பழுதில்லை.
போரிடும் தேசமல்லவா எம்பூமி.
நிச்சயம் நமிர்ந்தாகவேண்டும்
இல்லையேல் நிர்மூலமாகி விடுவோம்.
சேத நிலவரத்தை பார்வையிடுவதுபோல
தேச நிலைமைகளையும் கணக்கிட்டுப்போகலாம்.
நாடிபிடித்தறிய நல்லவேளை எனக் கணித்து
கூடிக்குலவ வரலாம்.
குண்டெங்கே வைக்கலாமேன அறிய
தொண்டரென்று துரோகிகளும் வரலாம்.
நாங்கள் நிமிர்ந்தாக வேண்டும்.
ஆழத்துயரெனினும் அதைப்புதைத்து
மீளவேண்டும் விரைவில்.
தொடரும் சோகங்களை கற்களாக்கி
ஏணிப்படியொன்று இணக்குவோம்.
வேரறுந்தாலும் முளைகொள்ளும்
அறுகம்புல்லின ஜாதி நாம்.
மேலே வேர் கொள்வோம்.
இத்தனை வேகத்தில் சோகம் மீளுவோமென்பது
கோபத்தைக்கூடத் தரலாம்.
எம் பிள்ளைகளின் வாழ்வுக்காக
இனியும் இருக்கிறதல்லவா மீதிப்பயணம்?
எனவே சோகத்தைத் மொழைப்போம்
யாகத்தீ வளர்ப்போம்.

உலைக்களம் - வியாசன்



# சுனாமியும் நாமும்

(20 ஆம் பக்க தொடர்ச்சி...) மாகடலில்




தான்தோன்றுகின்றன. இதற்கு ஆயிரத்

திற்கும் கூடுதலான எரிமலைகள் பசுபிக் கடலடியில் இருப்பது காரணமாக இருக்கிறது. மிகக் கூடுதலாகச் சுனாமியால் பாதிக்கப்படும்

நாடுகளில் ஜப்பான் முதலிடமும், அமெரிக்

காவின் மேற்குக் கரைப் பகுதியும்,

ஹவாய்த் தீவுகளும் அடுத்த இடம் வகிக்கின்றன. இந்த நாடுகள் சுய பாதுகாப்புக் கருதி மிகவும் விரிவான பாது காப்பு

ஏற்பாடுகளைச் செய்துள்ளன. கருத் தூட்டல் மூலம் மக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற் படுத்தப்பட்டுள்ளது. ஜப்பானியப் பல்கலைக் கழகங்களில் இதுபற்றிய ஆய்வு களுக்கு ஒரு கல்விப்பீடம் ஒதுக்கப்பட்டுள்ளது. எல்லாவற் றிற்கும் மேலாக பசுபிக் கடலடியில் நிறுவப்பட்ட முன்னறிவித்தல் சாதனங்கள் மூலம் தரைக் கட்டுப்பாட்டு நிலையங்களுக்கு தகவல் வழங் கும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள் ளன. இந்து மாகடலிலும் இப்படியான ஒழுங் குகள் செய் வது பற்றிய பேச்சுக்கள் அடிபடுகின் றன. டிசம்பர் 26 அனர்த்தங்களை நாம் ஒரு பாட மாக எடுத்துக்கொண்டு தொழில் வசதிக் குத் தன்னும் கடலோரத்தில் வாழ்வதைத் தவிர்க் கவேண்டும். கள்ளப்பாடு போன்ற தாழ்வு நிலங்களில் குடியிருப்புக்களை அமைக்கக் கூடாது. அதேபோல், முல்லைத் தீவு போன்ற கடலுக்குள் நீண்டிருக்கும் தரைப் பரப்பின் ஓரத்தில் வாழாது உயரமான பின் பகுதிகளில் குடிபுகவேண்டும். தடுப்புச் சுவர்களை எழுப் புவது மூலம் அழிப்போரலையின் மூச்சைத் தணிக்கமுடியும். வருமுன் தடுப்பது எமது வருங்காலத் திட்டங்களின் அடிப்படை நோக் காக இருத்தல் வேண்டும்.

சென்ற நூற்றாண்டில் பிற்பகுதியில் மனித நேயத் தலையீடு என்ற புதிய சர்வதேச அரசியல் கோட்பாடு தோற்றம் பெற்றுள்ளது.

இதன் சாராம்சம் பின்வருமாறு: எந்தவொரு நாட்டில் பாரிய மனித உரிமை மீறல்கள் நடக் கின்றனவோ, அல்லது எந்தவொரு நாட்டில் அரச நிர்வாகம் முற்றாகச் சீர்குலைந்து பாரிய குழப்பமும் மனித அவலமும் நிகழ்கின்றதோ அல்லது இயற்கை அனர்த்தம் காரணமாக உயிரிழப்பும் பாரிய அழிவுகளும் நடை பெறு கின்றனவோ அவை தனியொரு நாட்டின் விவகாரம் அல்ல. மூன்றில் எதுவானாலும் அது உலகநாடுகள் யாவற்றின் பொது விவ காரம் என்பதால் பாதிக்கப்பட்ட நாட்டிற்குள் மனிதநேயப் பணியாற்றும் நோக்கில் உட் பிரவேசிக்கும் உரிமை உலகநாடுகளுக்கு உண்டு. இந்த அடிப்படையில் நாடுகளும் தன் னார்வத் தொண்டு நிறுவனங்களும் டிசம்பர் 26 அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட நாடு களுக்குப் படையெடுத்துள்ளன. மனிதநேயப் பணிகளுக்கென வந்துள்ள பிறநாட்டு ஆயுதப் படைகளும் மருத்துவக் குழுக்களும் இக் கோட்பாட்டின் அடிைப்படையிலேயே வந்துள் ளன. உலகநாடுகளும் பிற ஸ்தாபனங்களும் நிவாரணப் பணிகளுக்காக பெருமளவு நிதி யைத் தருவதாக வாக்குறுதி அளித்துள்ளன. 1998 ஆம் ஆண்டு மத்திய அமெரிக்க நாடான ஹொண்டுராஸ் “மிற்ச்” (MITCH) எனப் பெயரிடப்பட்ட பெரும் புயலால் பாதிக்கப்பட்டது. உலகநாடுகள் பெருமளவு நிதியைத் தருவ தாக வாக்குறுதி அளித்தன. பல வாக்குறுதிகள் இன்றுவரை நிறைவேற்றப்படாமல் இருக் கின்றன. வாக்குறுதிகளை மாத்திரம் நம்பி யிராது எமது நாட்டை நாமே கட்டியெழுப்ப வேண்டும். எமது மக்களுக்கு எது தேவை யோ அதை இனங்கண்டு நாமே அவற்றை நிறுவவேண்டும். இரு தசாப்தம் நீடித்த சுனாமியிலும் கொடிய போர் அனர்த்தங் களுக்கு முகங்கொடுத்த நாம் மிக அண்மை யில் எம்மைத் தாக்கிய சுனாமியில் இருந்து மீள நிச்சயம் முடியும்.

**சுனாமி என்ற ஜப்பான் மொழிச் சொல் “நாமி” என்றால் அலைகள் “ற்சு” என்றால் துறைமுகம் அல்லது ஒடுக்கமான நிலப்பகுதி என்ற இர சொற்களின் கூட்டாகும். சுனாமி என்றால் புயல் என்றும் அர்த்தம் கூறுவோர் உள்ளனர். பலநூறு கிலோமீற்றர் நீளமான தாகவும் பத்து மீற்றருக்கும் கூடிய உயரமுள்ளதாகவும், ஜெற் விமானத்தின் பறப்பு வேகத்திலும் கூடிய வேகமுடையாதாகவும் சுனாமி அலைகள் இடம்பெறுகின்றன.**

நன்றி: மார்கழி 2004, தை 2005









# அமேசான் காடுகளை சேதப்படுத்தாமல் 5,000 ஆண்டுகள் வாழ்ந்த மனிதர்கள்

விக்டோரியா கில் (பிபிசி அறிவியல் செய்தியாளர்) - 09 ஜூன் 2021



அமேசான் காடுகள்

அமேசான் மழைக்காடு தொடர்பான வரலாற்றைக் குறித்த ஆய்வில், அங்கு பல ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக வாழ்ந்த மக்கள் அப்பகுதிக்கு எந்த வித சேதங்களையோ, அங்கு வாழ்ந்த உயிரினங்களுக்கு எந்த வித இழப்பையோ ஏற்படுத்தவில்லை என கண்டறியப்பட்டு இருக்கிறது.

பெருவில் பணிபுரியும் விஞ்ஞானிகள் மனித தாக்கத்தின் நுணுக்கமான புதைபடிம ஆதாரங்களுக்காக மண்ணின் அடுக்குகளைத் தேடினர்.

“காடுகள் அழிக்கப்படவில்லை, விவசாயம் மேற்கொள்ளப்படவில்லை, அல்லது வரலாற்றுக்கு முந்தைய காலங்களில் பெரிதாக காடுகள் மாற்றத்துக்கு உள்ளாகவில்லை” என அவர்கள் கண்டறிந்தனர்.

இந்த ஆய்வு ‘பிஎன்ஏஎஸ்’ என்கிற சஞ்சிகையில் வெளியிடப்பட்டுள்ளது.

”இந்த ஆராய்ச்சி நவீன பாதுகாப்பை மேம்படுத்த இந்த சான்றுகள் உதவக்கூடும். அமேசானில் நம்பமுடியாத அளவிற்கு அதிகமாக இருந்த பல்லுயிரியலுக்கு மத்தியில் மக்கள் எவ்வாறு வாழ முடியும் என்பதையும்



இந்த ஆராய்ச்சி வெளிப்படுத்துகிறது” என அந்த ஆராய்ச்சியின் தலைவர் மற்றும் பனாமாவின் பால்போவாவில் உள்ள ஸ்மித்சோனியன் வெப்பமண்டல ஆராய்ச்சி நிறுவனத்தைச் சேர்ந்த முனைவர் டோலோரஸ் பைபர்னோ கூறுகிறார்.

முனைவர் பைபர்னோ

அமேசானின் பரந்த, மாறுபட்ட நிலப்பரப்பை பழங்குடி மக்களால் எவ்வளவு உருவாக்கப்பட்டது என்பதையும் முனைவர் பைபர்னோவின் கண்டுபிடிப்புகள் வெளிப்படுத்துகின்றன.

தென் அமெரிக்காவில் ஐரோப்பியர்கள் வருவதற்கு முன்னர் பூர்வீக மக்களால் இந்த நிலப்பரப்பு தீவிரமாக வடிவமைக்கப்பட்டதாக சில ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன. இப்போது அமேசான் காட்டில் அதிகமாக வளர்ந்து ஆதிக்கம் செலுத்தும் மர இனங்கள், வரலாற்றுக்கு முந்தைய மனித மக்களால் நடப்பட்டவை என்பதை சமீபத்திய ஆய்வுகள் காட்டுகின்றன.

மழைக்காடுகளுக்கு எந்த வித பாதிப்பும் இல்லாத வகையில் நிலையாகவும், கடந்த ஆயிரக்கணக்கான ஆண்டுகளில் எந்த வித உயிரின இழப்புகள் இல்லாமலும் பழங்குடி மக்கள் காடுகளைப் பயன்படுத்தி இருக்கிறார்கள் என்பதற்கு இந்த புதிய கண்டுபிடிப்பு ஆதாரங்களை வழங்குவதாக பிபிசியிடம் கூறியுள்ளார் முனைவர் பைபர்னோ.

இந்த மழைக்காடுகளின் வரலாற்றைக் கட்டமைக்க, மண்ணை அகழ்வாய்ந்து, அதன் படிமங்கள் எந்த காலத்தைச் சேர்ந்தவை என்பதைக் கண்டுபிடிக்கும் காலசோதனைக்கு உட்படுத்தும் ஆராய்ச்சிகளை அவரும், அவரது சகாக்களும் மேற்கொண்டனர். வடகிழக்கு பெருவின் தொலைதூர பகுதியில் உள்ள மூன்று இடங்களில் மண்ணை ஆய்வு செய்தனர்.

இவை மூன்றுமே ”இன்டர்ஃப்ளூவல் சோன்” என்றழைக்கப்படும் நதிப் பாதைகள் மற்றும் வெள்ளப்பெருக்குப் பாதைகளிலிருந்து குறைந்தது ஒரு கிலோமீட்டர் தொலைவில் கண்டுபிடிக்கப்பட்டன.

அமேசானின் ஒட்டுமொத்த நிலப்பரப்பில் இந்த காடுகள் 90% க்கும் அதிகமானவை, எனவே அவை குறித்து ஆராய்வது, பூர்வகுடிகளின் தாக்கத்தைப் புரிந்துகொள்வதற்கு அவசியமாகிறது.

பைடோலித்ஸ்




ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக காட்டில் என்ன மாதிரியான தாவரங்கள் வளர்ந்தன என்பது பற்றிய சிறிய பதிவுகளை பைட்டோலித்ஸ் எனப்படும் நுண்ணிய தாவர புதைபடிவங்கள் கொண்டிருக்கும். அதை ஒவ்வொரு வண்டல் அடுக்கிலும் அவர்கள் தேடினர். ”5,000 ஆண்டுகளில் மனித மாற்றத்திற்கான மிகக் குறைந்த அறிகுறிகளையே நாங்கள் கண்டறிந்தோம்” என முனைவர் பைபர்னோ கூறினார்.

”ஆகவே, நதிக்கு வெளியே உள்ள காடுகளில் குறைந்த அளவிலேயே மனிதர்கள் வாழ்ந்திருக்கிறார்கள், குறைந்த அளவிலேயே மாற்றங்களுக்கு உள்ளாகி இருக்கிறது என்பதற்கு இப்போது எங்களுக்கு நல்ல சான்றுகள் உள்ளன என்று நான் நினைக்கிறேன்.”

பெர்கன் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த முனைவர் சுசெட் ஃப்ளாண்டுவா, ஹியுமன்ஸ் ஆன் பிளானட் எர்த் (ஹோப்) என்கிற திட்டத்தில் ஒரு ஆராய்ச்சியாளராவார். அமேசானின் பல்லுயிர் பெருக்கம் மீதான மனித தாக்கத்தின் வரலாற்றை உருவாக்குவதில் இது ஒரு முக்கியமான ஆய்வென அவர் கூறினார்.

”ஆனால் ஒரு புதிரை அபத்தமாக ஒன்று சேர்ப்பது போன்றது. இதுபோன்ற ஆய்வுகள் மெதுவாக, ஆயிரக்கணக்கான ஆண்டு கால மனித நிர்வாகத்திற்குப் பிறகு இன்றைய அமசோனியா காடுகள் உருவானது என்கிற கோட்பாட்டை ஆதரிக்கிற அல்லது எதிர்க்கிற வகையிலான ஆதாரங்களை மெதுவாக உருவாக்குகின்றன,” என்று அவர் கூறினார். ”எந்த பக்கம் மிகவும் உறுதியான ஆதாரங்கள் இருக்கின்றன என்பதைக் காண அருமையாக இருக்கும்.”

அமேசான் காடுகளில் உள்ள ஒரு டீஸ்பூன் மண்ணில் 400 பூஞ்சைகள் - வியக்க வைக்கும் ஆய்வு முடிவுகள்
புவி வெப்பமயமாதல்: அதிகம் மரம் நடுவதே பூமிக்கு ஆபத்து என்று கூறும் ஓர் ஆய்வு

தங்கள் கண்டுபிடிப்புகள் அமேசானில் உள்ள பல்லுயிரியலைப் பாதுகாக்க உதவுவதில் உள்நாட்டு அறிவின் மதிப்பை சுட்டிக்காட்டுகின்றன, உதாரணத்துக்கு மறு நடவு மற்றும் மறுசீரமைப்பிற்கான சிறந்த உயிரினங்களைத் தேர்ந்தெடுப்பதற்கு வழிகாட்டுவதன் மூலம் சுட்டிக்காட்டுகின்றன என்கிறார்கள் விஞ்ஞானிகள்.

”பழங்குடி மக்களுக்கு அவர்களின் காடு மற்றும் சுற்றுச்சூழல் குறித்த பிரமாதமான ஞானம் இருந்திருக்கிறது” என முனைவர் பைபர்னோ கூறினார், ”அது எங்கள் பாதுகாப்பு திட்டங்களில் சேர்க்கப்பட வேண்டும்”.

முனைவர் ஃபிளான்டுவா அதை ஒப்புக் கொண்டார். ”நாம் எவ்வளவு காத்திருக்கிறோமோ, அவ்வளவுக்கு அவ்வளவு அறிவை இழக்க நேரிடும் வாய்ப்புகள் அதிகம். இப்போது அறிவையும் ஆதாரங்களையும் ஒருங்கிணைத்து, அமேசானியாவிற்கான ஒரு நிலையான மேலாண்மை திட்டத்தை நிறுவுவதற்கான நேரம் வந்து விட்டது. அத்துடன் வரலாற்றுக்கு முந்தைய மனித இருப்பையும் சேர்த்துக் கொள்ள வேண்டும்.” என்கிறார் முனைவர் ஃபிளான்டுவா.

நன்றி: BBC Tamil

# சட்டவிரோத ஆற்றுமணல் அகழ்வு அதிகரித்துள்ளது.

# "ஆற்றுமண் அகழ்வு உயிரிகளின் வாழ்க்கை வட்டத்தையும் பாதிப்புக்குள்ளாக்குகிறது"

## தென்கிழக்குப் பல்கலைக்கழக புவியியல் பீட புவியியல் துறை பேராசிரியர் எம்.ஐ.எம்.கலீல்



05.12.2021

இன்று உலக மண்வள நாள்.

சட்டவிரோத ஆற்றுமணல் அகழ்வு அதிகரித்துள்ளது. ஆற்றுமண் அகழ்வு உயிரிகளின் வாழ்க்கை வட்டத்தையும் பாதிப்புக்குள்ளாக்குகிறது.




ஆற்றுமணல் களுகங்கை, களனி கங்கை, மகா ஓயா நதிகள் உட்பட மட்டக்களப்பு பகுதிகளில் கூடுதலாக அகழப்பட்டு வருகிறது. அதிகரித்த ஆற்றுமண் அகழ்வினால் ஆற்றினுடைய நீர் வற்றி குடிநீருக்கான தட்டுப்பாடுகளும் காலப்போக்கில் ஏற்பட வாய்ப்புள்ளது.

அரசநிறுவனங்கள் மிக இறுக்கமான சட்ட திட்டங்களை கடைப்பிடித்து சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபடும் நபர்களுக்கெதிராக தீவிர நடவடிக்கை முன்னெடுப்பதை கடமையாகக் கொள்ள வேண்டும்.

தென்கிழக்குப் பல்கலைக்கழக புவியியல் துறை பேராசிரியர் எம்.ஐ.எம்.கலீல்.

நேர்காணல் : பாக்கியராஜா மோகனதாஸ்.

ஆற்றுமண் அகழ்வு இயற்கை வள அழிவினுடைய மூல காரணமாகும். ஆற்றுப்பகுதிகளில் இடம்பெறும் மண் அகழ்வு ஆற்றுப்பரப்பினை அதிகளவில் ஆழப்படுத்துவதோடு அங்கு வாழும் உயிரிகளின் வாழ்க்கை வட்டத்தையும் பாதிப்புக்குள்ளாக்குகிறது. மேலும் ஆற்றினுடைய இரு கரைகளும் அகலமாக்கப்படுவதால் வெள்ளநீர் பயிர் நிலங்களை ஊடுருவி பயிர் நிலத்தின் தரத்தையும் பாதிப்புக்குட்படுத்துகிறது. இவ்வாறு ஆற்றுமண் அகழ்வு, அது சார்ந்த வளங்களை மட்டுமன்றி ஏனைய வளங்களையும் பாதிப்புக்குட்படுத்துகிறது என தென்கிழக்குப் பல்கலைக்கழக புவியியல் பீட புவியியல் துறை பேராசிரியர் எம்.ஐ.எம்.கலீல், தினக்குரலுக்கு அளித்த நேர்காணலில் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவருடனான நேர்காணல் வருமாறு.

1) கேள்வி : பசுமைப் பிரதேசங்களை பாலைவனமாக்கும் செயற்பாடுகள் ஆரோக்கியமானவையா?

பதில் : பசுமைப் பிரதேசங்களை பாலைவனமாக்கும் செயற்பாடுகள் ஆரோக்கியமற்றவை. பசுமை முறைமை எனப்படுவது, சூழலில் காணப்படும் தாவரத்தொகுதிகள் மற்றும் அதனைச் சார்ந்த இயற்கை நிலத்தொகுதிகள் சூழலுடன் கொண்டுள்ள இடைத் தொடர்பினை உள்ளடக்கிய தொகுதியை குறித்து நிற்கிறது. எம் நாட்டை பொறுத்தவரையில் மிகப்பெரிய பசுமைத் தொகுதியாக காடுகள் காணப்படுவதோடு புல் நிலங்கள், கடற்கரையோர பசுமைத்தொகுதிகள், ஈர நில பசுமைத்தொகுதிகள், விவசாய பசுமைத் தொகுதிகள், ஏனைய பசுமைத்தொகுதி என பரவிக் காணப்படுகிறது.

பசுமைப் பிரதேசங்கள் சூழல் மாசடைவை தடுத்தல், மழையைப் பெற துணை செய்தல், புயல் சூறாவளிகளின் தாக்கத்தைக் குறைத்தல், உயிர்ப் பல்வகைமையைப் பாதுகாத்தல், மண் வளத்தைப்பாதுகாத்தல், தரைக்கீழ் நீர் வளத்தைப் பேணுதல், வெள்ளப் பெருக்கைக் கட்டுப்படுத்தல், மானிடத் தேவைகளைப் பூர்த்தி செய்தல் என பல்வேறு முக்கியத்துவங்களை கொண்டதாக அமையப்பெறுள்ளது. இன்றைய காலகட்டத்தில் பசுமைப் பிரதேசங்கள் திட்டமிடப்பட்ட முறையில் பாலை நிலங்களாக மாற்றியமைக்கப்படுகின்றன. இவ்வாறு பாலை நிலங்களாக மாற்றமுறுவதினால் புவி வெப்பமடைதல், வரட்சி, விரைவான குடித்தொகை வளர்ச்சி, நகரும் விலங்கு வேளாண்மையில் அதிகம் தங்கியிருத்தல், ஒழுங்கற்ற நிலப்பயன்பாடு போன்ற காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன. இவ்வாறான செயன்முறையை கட்டுப்படுத்துவதற்காக கோம்பனேஜன் (டென்மார்க்), ஆம்ஸ்டர்டாம் (நெதர்லாந்து), ஸ்டொக்ஹோம் (சுவீடன்) போன்ற நகரங்கள் பசுமை முறையைப் பேணியவாறு அமைக்கப்பட்டுள்ளன.

2) கேள்வி : வளங்கள் பயன்படுத்தப்பட வேண்டியவை அதற்காக கண்மூடித்தனமாக சூறையாடப்படுவதை ஏற்றுக்கொள்ள முடியுமா?

பதில் : வளங்கள் கண்மூடித்தனமாக சூறையாடப்படுவதை ஒருநாளும் ஏற்றுக்கொள்ள முடியாது. நம் நாட்டில் மட்டுமன்றி முழு உலகத்திலும் மனித சமுதாயத்தின் விருத்திக்கும் தேவைக்கும் வளங்கள் இன்றியமையாத சொத்துக்களாக காணப்படுகின்றன. கனிப் பொருள் வளம், காட்டு வளம், மண் வளம், நீர் வளம், கடல் வளம், விலங்கு வளம், மனித வளம் என வளங்கள் பாகுபடுத்த முடியும். மனிதன் தன்னுடைய தொழிநுட்ப அறிவைப் பயன்படுத்தி தடைகளை அகற்றி வளங்களின் உச்ச பயனைப் பெற்றுக்கொள்கிறான். இன்றைய உலகில் அதிகரித்துச் செல்லும் சனத்தொகையினால் வளங்களின் பயன்பாடு அதிகரித்ததுடன் வளப்பற்றாக்குறைக்கும் முகங்கொடுக்க வேண்டிய சூழ்நிலையும் உருவாகியுள்ளது. வளமொன்றினை மிகையாகப் பயன்படுத்துவதால் எதிர்பாராத சூழலியல் பிரச்சினைகள், சடுதியான வளப்பற்றாக்குறை போன்ற தாக்கங்கள் ஏற்படுவதோடு சமூக மற்றும் அரசியல் ரீதியான முரண்பாடுகளும் தோற்றுவிக்கப்படுகின்றன. இலங்கையைப் பொறுத்தவரையில் மண்ணகழ்வு, முருகைக் கற்பாறைகள் அழிக்கப்படல், கடல் வாழ் உயிரிகள் அழிக்கப்படல் போன்ற வழிமுறைகளினூடாக வளங்கள் சூறையாடப்படுகின்றன. இவற்றினை தடுப்பதற்கு அரசாங்கம் பல்வேறு வழிமுறைகளை கையாளுகின்ற போதிலும் மக்கள் அவற்றினை கடைப்பிடிக்கின்றனரா ? என்பது சந்தேகத்திற்குரிய விடயம் ஆகும்.

3) கேள்வி : காலநிலை மாற்றங்கள் எவ்வாறான பின்னனியில் ஏற்படுகின்றன?

பதில் : காலநிலை மாற்றம் சூழலின் ஒரு அடிப்படைப் பண்பாகும். புவியின் பனிக்கட்டியாற்றுக் காலத்திலிருந்து இன்றைய நவீன தொலைத்தொடர்பு யுகம் வரை இது நிகழ்ந்து வருகிறது. காலநிலையில் மாற்றத்தை ஏற்படுத்தும் பிரதான காரணிகளாக எரிமலை வெடிப்பு, இயற்கை அனர்த்தங்கள், காடழிப்பு, அதிகளவிலான இரசாயன உரப்பாவனை, விவசாய நடவடிக்கைகள், போக்குவரத்து, உயிர்ச்சுவட்டு எரிபொருள் தகனம் போன்றவை காணப்படுகின்றன. காடழிப்பு, நீரின் மிதமிஞ்சிய பாவனை, நீரை அதிகளவு உறுஞ்சும் பயிர் வகைகள் பயிரிடப்படல், நீரை சேமித்து வைக்காமை, சனத்தொகை அதிகரிப்பு போன்றன வரட்சிக்குரிய பின்னணி காரணிகளாகும்.

4) கேள்வி : காடழிப்பு, கிறவல் மற்றும் ஆற்றுமண் அகழ்வு போன்றவற்றினால் சுற்றுச் சூழல் எவ்வாறான பாதிப்புக்களை எதிர் நோக்கும் என கருதுகின்றீர்கள்?

பதில் : காடழிப்பு, கிறவல் மற்றும் ஆற்று மண் அகழ்வு போன்றவை சுற்றுச்சூழலில் மிக மோசமான பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றது. மனித தலையீட்டினால் இயற்கைக் காடு இயல்பான தன்மையை இழந்து வருகிறது. காடுகள் அழிக்கப்படுவதால் மண்வளம் பாதிப்படைதல், புவி வெப்பமடைதல், உயிர்ப்பல்வகைமை அழிவடைதல், பாலைவனமாதல், இயற்கைச் சமநிலை பாதிப்படைதல் போன்ற சூழலுக்கு பாதக விளைவுகளை ஏற்படுத்துகின்றன. கிறவல் மற்றும் ஆற்றுமண் அகழ்வு நிலத்தை உவர் தன்மையடையச் செய்வதுடன் குடிநீர்த்தட்டுப்பாட்டையும் ஏற்படுத்துகிறது. நிலக்கீழ் நீரினை குறைவடையச் செய்தல், வெள்ளப் பெருக்கை ஏற்படுத்தல், கண்டல் தாவரங்கள் அழிவடைதல், உயிர்ப்பல்வகைமை அழிவடைதல் போன்ற சூழலியல் தாக்கங்களையும் ஏற்படுத்துகிறது.



நன்றி: தினக்குரல்



# மிஞ்சியவர் சொல்கின்ற 'கடலோடு காதை'கள்

யாரும் நம்பமுடியாத காலமொன்று வந்திருக்கிறது. அது உலகையே உலுக்கியுமிருக்கிறது. கொடுஞ்சுழி திரண்டு வந்து ஆசியாவின் கரைகளில் கூத்தாடியுள்ளது. நம்பிய கடல் நாசமாய் வந்து எல்லாவற்றையும் தின்றிருக்கிறது.

ஊருக்குள் கடல் வருமா? வீடுகளுக்குள் அது நுழையுமா? என்றெல்லாம் யாரும் ஒருபோதும் கடலைச் சந்தேகித்ததில்லை. எல்லோரும் கடலை நம்பியிருந்தோம். அதன் கரைநீளம் வேர்பாய்ச்சி வாழ்ந்திருந்தோம்.

ஒரு காலையில், ஒரு ஞாயிற்றில் வஞ்சம் கொண்டதுவாய், கோபமுற்றதுவாய் சீற்றத்தோடெழுந்த கொடுஞ்சுழி பெருந்துயரை எங்கும் விரித்தது.

சாவும் அழிவும் கரைநீளம் படலமாயிற்று.

கடல் எழுந்துவரக் கண்டவர்கள் ஓடினார்கள். ஓடியவர்களைக் கடல் துரத்தியது. வெறிகொண்டு கலைத்தது. உயிரோடு கொடுஞ்சுழி அடித்துச் சென்றது. சிலர் திகைத்து நின்றார்கள். நின்றவர்களைப் பேரலைகள் தூக்கி எறிந்தன.

வீடுகள் தரைமட்டமாகின. மரங்கள் சரிந்தன. படகுகள் கரையேறி, வானுயர்ந்து அங்குமிங்கும் மோதிச் சிதைந்தன. பள்ளிகள் இடிந்து வீழ்ந்தன. கோவில்கள் நொருங்கின. தேவாலயங்கள் பலிபீடத்தோடு பாறி வீழ்ந்தன.

கடல் ஊழிக்கூத்தாடியது. வாழ்வைத் தந்த கடல் வடுவள்ளி வீசியது. நெய்தல் நில மக்கள் நெஞ்சடைத்துப் போனார்கள்.

அலைதிரண்டு படையெனப் பாய்ந்து வருகையில் இந்த அப்பாவிகள் என்ன செய்வார்கள்? அவர்களுக்கு ஒன்றுமே புரியவில்லை.

அவர்கள் அறிந்த கடல் தாயாக இருந்தது. கரைநீளம் அலைக்கரங்களால் கால் தடவியது. மடிநிறைய அள்ளித் தந்தது அது. அவர்களருகில் அழகாயிருந்தது கடல். யாரும் அதைக்கண்டு அஞ்சவில்லை. அலையெறிந்து அலையெறிந்து அழகாகவேயிருந்தது அது. அதனால் அதனோடு அவர்கள் அருகாயிருந்தார்கள்.

தாயின் மீது எவருக்குச் சந்தேகம் வரும்? தாய்க்குப் பசியெடுத்ததா? வெறிபிடித்ததா? ஏனிந்தக் கோபம் வந்தது? அவர்களுக்குப் புரியவில்லை புரியவேயில்லை.

கொடுஞ்சுழி எல்லாவற்றையும் வெறியோடு புரட்டியெறிந்தது.

பிள்ளைகளை இழந்தனர் தாய்மார். மனைவியை இழந்தனர் கணவன்மார். எல்லோரையும் இழந்து தவித்தன பிள்ளைகள். சொந்தங்கள் எல்லாவற்றையும் பறிகொடுத்துவிட்டு மரமொன்றைக் கட்டிப்பிடித்துக் கதறிக்கொண்டிருந்தாள் முல்லைத்தீவில் ஒரு குடும்பப்பெண். பயணத்துக்காக ஏறியிருந்த பஸ்ஸிலிருந்து கடல் வருகுதென்று பயத்தால் குதித்தோடிய குடும்பமொன்று அப்படியே அடித்துச் செல்லப்பட்டுவிட்டது. ஒரேயொருவர் மட்டும் தப்பியுள்ளார். அவர் பஸ்ஸிலிருந்து ஏனோ இறங்காமல் இருந்த படியால் தப்பியதாக நினைவெடுத்துச் சொல்கிறார்.

அலைகள் திரண்டுவந்து அடித்த அடியில், அவற்றின் வேகத்தில் எல்லாமே தூக்கியெறியப்பட்டன. எதிர்பாராத நிகழ்ச்சி அது. கற்பனையே செய்திராத அலைக்கூத்து. யாரையும் யாரும் காப்பாற்ற முடியாதென்ற நிலையின் அந்தரிப்பு.

கடற்கரையோரத்தில் கூடியிருந்த வீடுகளுள்ள இடங்கள் முற்றாக அழிந்துவிட்டன.

அம்பாறையில், கல்முனை, நிந்தவூர், சாய்ந்தமருது, மருதமுனை, மட்டக்களப்பில் நாவலடி, கல்லாறு, காத்தான்குடி, வாகரை என்று ஏராளம் கிராமங்கள் இருந்தும் இல்லாமற் போயுள்ளன. முல்லைத்தீவில், வடமராட்சி கிழக்கில், வடமராட்சியில் என்று கடலோரமெங்கும் ஒரே சிதைவுகளும் அழிவுகளும் சாவுகளும்தான். எங்கும் கடலின் சீற்றம். கொடுத்த வாழ்வைக் கெடுத்த மாதிரி வாழ்வள்ளியெறிந்த கொடுமை.

மின்னல் தாக்கியதுபோல, கணநேர வேகத்தில், சுதாகரித்துக் கொள்ளமுன் அலைகள் அடாத்தாடின.

பிள்ளைகள் தண்ணீரால் அறுத்துச் செல்லப்பட்டு முக்குளிக்கும் போது பெற்றதாய் கண்ணால் பார்த்திருக்கிறாள். ஆனால் காப்பாற்றமுடியாத நிலை. அவளால் ஒன்றுமே செய்யமுடியவில்லை. அவளும் உயிருக்காகப் போராடி ஏதோ ஒரு மரக்கொப்பில் பிடிப்பதைத்தவிர பிள்ளையைத் தூக்க முடியவில்லை. கடல் ஒரு கொடும் விதியாக அவள் முன் நின்றாடியது. எதுவுமே செய்யமுடியாத சிறு தூசாகினாள் அவள்.

'தண்ணீருக்குள் மூழ்கியவாறு ஏறக்குறைய மயங்கும் நிலையில் ஒரு பெண் தத்தளிக்கிறாள். அவளுடைய கண்கள் 'தன்னைக் காப்பாற்றுங்கள்' என்று கெஞ்சுகின்றன. ஆனால், என்னால் அந்தப் பெண்ணைக் காப்பாற்ற முடியாமற் போய்விட்டது' என்கிறார் அலைகளால் அடித்தெறியப்பட்டு காயங்களோடு உயிர்தப்பிய ஒருவர்.

'இன்றும் கெஞ்சிக்கொண்டிருந்த அந்தக் கண்கள் என் நினைவில் தெரிந்துகொண்டேயிருக்கின்றன. அதை மறக்கமுடியவில்லை' என்கிறார் அவர்.

வழிபாட்டுக்காக கூடியிருந்தவர்களை அப்படியே அலைகள் வந்து அமத்திவிட்டன. ஒருவர்கூட மிஞ்ச முடியாத அளவுக்கு கட்டடமே இடிந்துவிட்டது ஓரிடத்தில்.

இன்னோரிடத்தில் தளிர்களாகக் கூடியிருந்த சிறுவர்கள் அனைவரையும் அலைகள் பசியாறின. அத்தனை மழலைகளின் குரல்களையும் காற்றிலிருந்தே பறித்தன அலைகள். பறித்து விழுங்கின அவை.

தன்னுடைய பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் என நாற்பத்தியாறு பேரை பலிகொடுத்துவிட்டு தனிமரமாக நிற்கிறார் வடமராட்சி கிழக்கில் ஒரு முதிய பெண். அழுவதைத் தவிர வேறுவழியில்லை என்றமாதிரி ஒரு வாழ்க்கையை அந்தக் கணங்கள் உருவாக்கிவிட்டன. ஆனால், அழுதுகொண்டேயிருக்க முடியாது என்பது வேறு.

எங்கும் சாவோலங்கள். பிள்ளைகள், குழந்தைகள்தான் அதிகமாக இறந்தவர்கள். கொடுஞ்சுழிக்குத் தாக்குப்பிடிக்க முடியாது உடனே இறந்தவர்கள் அதிகம் அவர்கள்தான்.

ஆழக்கடலோடிய அனுபவமுடையவர்களால்கூட பெருகி வந்த பேரலைக்குத் தாக்குப்பிடிக்க முடியாமற் போய்விட்டது.

கடலம்மா, ஏனெங்களை இப்படிவந்து அள்ளுகிறாய் என்று கேட்கவே முடியாத கணத்தில், நினைவேயெழ முடியாத விதமாய் கடல் கொண்டது கரைகளை கரையின் உயிர்களை நெய்தலின் ஆன்மாவை.

வாழ்வில் இப்படியும் ஒரு நிலையோ என்றுகூட அப்போது யோசிக்கமுடியவில்லை என்றார் அலைகள் அடித்துக் காயப்படுத்தி, உயிருக்குப் போராடி மீண்ட ஒருவர்.

கொத்துக் கொத்தாக குடும்பம் குடும்பமாக கடல் கொண்டுபோன உயிர்கள் கொஞ்சமல்ல. கரையேறிவந்து எல்லாரின் சுவடுகளையும் அழித்துவிட்டு மீண்ட கடல், தான் வந்துபோன அடையாளமாய் விட்ட சுவடுகள் கற்குவியல்கள், இறந்தவர்களின் ஆயிரக்கணக்கான சடலங்கள், கண்ணீரோடும் கதறலோடும் விம்முகின்ற உறவுகள், ஆதரவற்ற குழந்தைகளைத்தான்.

தன் மடியிற் பிறந்தவர்களைத் தானே எடுத்துக்கொள்ளுகிறேன் என்ற உரிமையில்தான் கடல் அப்படிச் செய்ததா?

புயலை தன்மடியிற் சுமந்தவள் கடலன்னை. பெரு மழையையும் வெள்ளத்தையும் தன் வயிற்றில் ஏந்தியவள் அவள். கோடையிலும் வாடையிலும் தன் பிள்ளைகளை வாழவைத்தவள் அவள்.

கடலோடக் கடலோட தன்னை விரித்து தன்னை விரித்துத் தந்தவள் அவள். பாதையாக நின்றவள். வாழ்வாக மலர்ந்தவள். பயணத்தில் தோழியாக நின்றவள். அவள் அழகி. கரைநீளம் அலைமுகம்கொண்டு சிரித்தவள். நீலப்பெண். பேரியற்கையாய் பரந்தவள். மூத்தவள். ஆதியானவள்.

தன்னைப்பற்றி மனதில் எழுதப்பட்டிருந்த அத்தனை படிமங்களையும் அவளுடைய கொடுஞ்சுழிகள் அடித்து நொருக்கிவிட்டனவா?



# மிஞ்சியவர்கள் சொல்கின்ற 'கடலாடு காதை'கள்

இனிக் கடலுக்கு அஞ்சும் காலம்தான் என்றவள் உணர்த்தினாளா?

அப்படியல்ல. அப்படியே அல்ல. அவள் என்ன செய்வாள்? அவள் நல்லவள்.

நிலம் பிளந்து அவள் நிம்மதியைக் குலைத்தது. நிம்மதி கெட்டவள், அமைதி குலைந்தவளின் சீற்றம் எங்கள் வாழ்வின் வயிற்றைக் கலக்கியது. அவளுடைய குமுறல்கள் எங்களில் மோதியிருக்கின்றன. அவை எங்களை வீழ்த்தியிருக்கின்றன.



கடலம்மா! நீ கேள்.

கல்முனையில் நீ விளையாடிய வினையில் வேலியினுள் சிக்கி நாலுபிள்ளைகள் விழி பிதுங்கிக் கிடந்தார்கள். அந்தச்சாவின் அவலம் கண்டு கதறுகிறார்கள் இரண்டு தாய்மார். பிள்ளைகள் எல்லோரையும் பறிகொடுத்து விட்டு மணலில் கைபரப்பி அடித்துக் கதறுகிறார்கள் நிந்தவூரில் இரண்டு பெற்றோர்கள். பிள்ளைகளையும் தன் துணையையும் தொலைய விட்டு தனித்த பறவையாக விம்முகிறார்

நாவலடியில் ஒருவர். நாவலடி என்ற ஓரிடமே இல்லை என்ற மாதிரி, கடலழித்து நிற்கிறது அங்கே. அங்கிருந்த ஒருவட்ட உறவுகள் அத்தனையையும் கடல் தின்றுவிட்டது.

மிஞ்சியவர்கள் சொல்லுகின்ற கதைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு காவியம். அவை ஒவ்வொன்றும் ஒவ்வொன்றும் ஒவ்வொரு 'கடலாடு காதை'கள்.

முதல்நாள் நத்தார்க் கொண்டாட்டங்கள் இரவிரவாக நடந்தது. இரவு பாலன் பிறந்தார். அலைகள் அதைப்பாடின. எல்லோரும் விழித்திருந்தார்கள். அலைகளுக்கு அந்தத் தோத்திரங்கள் கேட்டிருக்கும்.

விடியவும், பாலனையும் அடித்துச்சென்றது கொடுஞ்சுழி. யாராலும் யாரையும் காப்பாற்ற முடியவில்லை வெள்ளமாய் பெருகிநின்றது துயரம். சாவுகள் எண்ணப்பட்டுக் கொண்டேயிருந்தன.

தலைமுறைகள் அறியாத கொடுமையான அனுபவத்தை நாங்கள் அறியும்படியானோம். பேரழிவுகளைத் தெரிந்தவர் நாம். அகதி வாழ்க்கை நமக்குப் புதிதல்லத்தான்.

ஆனால், அலை கொண்டுவந்த பேரழிவு மிகப்பெரிது. அது கொடுமையிலும் கொடுமை.

அலைகளால் வெற்றிபெற்றவர் நாங்கள். ஓயாத அலைகளால் வாழ்வைக் கண்டெடுத்தவர் நாங்கள். அலைமுது கேறிப் படகோடிப் பயணம்போய் திரவியம் தேடிவந்த வரால் வென்றவர் நாம். அலையாடும் கடலோடிப் பகை மோதி வெடித்து வெற்றிபெற்றவர் நாம். கொடுஞ்சுழியாய் வந்த அலைகடலில் என்றால் வென்றிருப்போம் என்கிறான் ஒரு வீரன்.

கடல் கரையேறி வந்தது அபத்தம். அது கட்டுக்கடங்காத திமிர். அதன் திமிரை தென்தமிழீழத்தில் பார்ப்பதே ஆகக் கொடுமையாகவுள்ளது.

சில கிராமங்கள் முற்றாக இல்லை. கடலை அறிந்தவர் களில் பாதிக்கு மேலானவர்களைக் கடல் அள்ளியே விட்டது. இனி கடலை அறியவேண்டும். புதிதாய் வாழக் கடலை நெருங்கவேண்டும்.

வழியற்ற விதியா விதியற்ற வழியா இனியென்று கொடுஞ்சுழி தந்தது என்று எங்கும் மிஞ்சிய உறவுகள் சொல்லி முடியாத வேதனைக் கதைகளோடு அகதிமுகாம்களில் இருக்கிறார்கள்.

வாழ்வை அள்ளிக் குடித்துவிட்டு நெய்தலின் மனிதர்களை அகதி முகாம்களில் தள்ளிவிட்டது கொடுஞ்சுழி.

அகதி முகாம்களில் துயரோடும் வேதனையோடும் கூடியிருக்கிற சனங்களை முட்களின்மேல் படுங்கள் என்ற மாதிரிச் சூழ்ந்திருக்கின்றன அதிரடிப்படைகள்.

பனையால் வீழ்ந்தவனை மாடேறி மிதித்த கதைபோல அலையால் அடித்து அகதியாக்கப்பட்டவர்களை அதிரடிப் படை வளைத்து நிற்கிறது.

பாதிக்கப்பட்ட மக்களின் மனதை ஆற்றுப்படுத்த வேண்டியதற்குப் பதிலாக ஆறாத காயத்தின்மேல் புதுக்காயம் என்பதாக படையினரின் நடவடிக்கைகள் தொடர்கின்றன.

கண்ணீரும் கவலையுமாக இருக்கின்ற மக்களின் கவலைகளைத் துடைத்து அவர்களை ஆற்றுப்படுத்த வேண்டிய காரியங்கள் ஆயிரம் உண்டு. அதற்கு அரவணைக்கக் காத்திருக்கும் கைகளை நீளவிடாமல் தடுக்கப் பார்க்கிறது படை.

உலகம் எல்லாம் இருந்து உதவிகள் வந்து குவிகின்றது. ஏன்? துயரத்தைப்பகிரும் பெரார்வத்தொடும் அவலத்தைத் தீர்க்கின்ற பெரும் கரிசனையோடுமல்லவா. இழப்புகளைச் சுமந்த மக்கள் பேசட்டும். அவர்களின் சொந்தக் கதைகளை. அது அவர்களுக்கு ஒரு விதத்தில் ஆறுதலாக இருக்கும் மனச்சுமை குறைவதற்கு ஏதுவாகும். அவர்கள் தங்களின் உணர்வுகளைச் சொல்வதற்கும் விருப்பங்களை வெளிப்படுத்து வதற்கும் அதைவிட வேறு வழியென்ன. தங்களுக்குத் தேவை யானவற்றை கேட்பதற்கு அவர்களுக்கு உதவும் உறவுகளோடு இணைவதற்கு, கூடி ஆறுதல் பெறுவதற்கு ஏன் இடையில் தடைகள் வேண்டிக்கிடக்கிறது. கொடுஞ்சுழியின் அழிவுத்துயரங்கள் வரலாற்றின் வழி நெடுகவும் பெருகிக் கிடக்கத்தான் வேண்டுமா?

அலையெறிந்த மனிதர்களை அரவணைத்து அவர்கள் சொல்லத்துடிக்கின்ற வார்த்தைகளைச் செவிமடுக்க வழி வேணும்.

கொடுஞ்சுழி வந்தடித்தது. ஒரு நிகழ்வுதான் ஆனால் அது ஆயிரமாயிரம் கதைகளை, பேசித்தீராத ஆச்சரியங்களை உருவாக்கிவிட்டுப் போய்விட்டது.

ஆழிக்கதைகள் சொல்லிக்கொண்டேயிருப்பர் எங்கள் மனிதர். மனதில் படிந்துவிட்ட நினைவுகளில் இருந்து அந்தக் கதையூற்று பெருகியபடியே இருக்கும்.

கடல் அமைதியாக இருக்கிறது இப்போது. அது இப்படி எத்தனை நிகழ்ச்சிகளைத் தன் வாழ்வில் பார்த்திருக்கிறது. அதற்கு எல்லாம் ஒன்றுதான்.

அது பேரியற்கை. நாளை நாங்கள் படகேறும்போது மீண்டும் அலைபாடி வரவேற்கும் மடிநிரைக்கும். வாழ்வளித்தரும்.

கரைநீளம் குடி வந்தால் மீண்டும் அலை முகங்காட்டி வரவேற்கும். காற்றாக வருவோர்க்கு கையசைத்து மகிழும்.

அவள் தாய். ஆதி. எல்லாவற்றிற்கும் அப்பாலானவள்.

எழுத்துருவாக்கம்: கருணாகரன்.
நன்றி : விடுதலைப்புலிகள் இதழ் (மார்கழி 2004, தை, 2005).


With Best Wishes From
KENNEDY LAW OFFICE
உங்களது அனைத்து சட்டத் தேவைகளுக்கும்.....
கெனடி சட்ட அலுவலகம்
REAL ESTATE LAW காணி, வீடுகள் - வாங்கல், விற்றல், அடமானம்
BUSINESS LAW வணிகச் சட்டம்
CRIMINAL LAW குற்றவியல் சட்டம்
FAMILY LAW குடும்பச் சட்டம்
IMMIGRATION LAW குடிவரவுச் சட்டம்
ODSP APPEALS
SMALL CLAIMS
WILLS, POWER OF ATTORNEY & AFFIDAVITS
NOTARIZING & COMMISSIONING
W.KENNEDY BERNADIUS, LL.B
BARRISTER, SOLICITOR & NOTARY PUBLIC
Tel: 416 613 4900
Fax: 416 613 4904
E: williamkennedylaw@gmail.com
2390 Eglinton Ave., East, Suite# 250, Scarborough, ON M1K 2P5 (Kenndy & Eglinton)


WEXFORD
WELLNESS CARE INC.
We treat all car accident injuries!
Massage Therapy
Physiotherapy
Orthopaedic
Acupuncture
Chiropractic
Orthotic
We deal directly with Insurance Companies, Extended health Care Corporate Insurance, ODSP WSIB, Motor Vihicle Accident (MVA)
Tel: 647-349-5120
Fax: 647-349-5121
Serve Two Location
Unit 301-240 Alton Towers Cir, Scarborough ON M1V 3Z3
2900 Markham Rd Unit F11, Scarborough ON M1X 1E6
(Majestic City, Colombo Rd)


சங்கத்தமிழ்
ஒவ்வொரு தனி நபரினதும் வளர்ச்சியில் தான்
ஒரு நாட்டின் வளர்சி தங்கி நிற்கின்றது...!
உங்கள் அறிவித்தல்கள் - விளம்பரங்கள்
சங்கத்தமிழ் மின் இதழில் வெளியிட வேண்டுமா?
விளம்பரம் இன்றி வியாபரம் இல்லை
உங்கள்
விளம்பரங்கள்
அறிவித்தல்கள்
துயர்பகிர்வுகள்
விற்பனை
வாடகை
மற்றும்
வரி விளம்பரங்களுக்கும்
437.345.4203


NAM THAYAKAM
நம் தாயகம்
வாங்குவீர்... வாழ்வு தருவீர்!
பெண் தலைமைத்துவ குடும்பங்களினதும்
போரில் அவயங்களை இழந்தோருக்கான
தற்சார்புப் பொருளாதார மேம்பாடு எமது நோக்கம்
முன்னாள் போராளிகளினதும் துணையிழந்த பெண்களினதும்
தயாரிப்புகள் கலப்படங்கள் அற்ற பாரம்பரிய முறைத் தயாரிப்புகள்,
உடல் நலம் காப்பவை.
நம் தாயகப் பொருட்களைப் கொள்வனவு செய்து தாயக மக்களின்
பொருளாதார முன்னேற்றத்துக்கு பங்களிக்கும் உள்ளங்களுக்கு நன்றி
முள்ளிவாய்க்காலில் இருந்து...
"உணர்வினில்
தாய் மண்
வாசமும்
உணர்வோடு
தாய் மண்
நேசமுமாய்"
Tel: 416-558-2111
nam.thayagam@gmail.com
3031 Markham Road, Unit 35, Scarborough. M1X 1L9 (Markham & Passmore)




# தமிழின அழிப்பு நினைவுப் பகிர்வு

# மிருசுவில் படுகொலை 01.12.1984

யாழ். மாவட்டத்தின் தென்மராட்சிப் பிரதேசத்தில் "படித்த மகளிர் குடியேற்றத்திட்டம்" என்று சொல்லப்படுகின்ற மிருசுவில் கிராமம் அமைந்துள்ளது. முகமாலைப் பகுதியிலிருந்து யாழ். நகர்நோக்கி மேற்குப் புறமாக மூன்று கி.மீ. துரத்தில் மிருசுவில் கிராமம் அமைந் துளள்து.





2000 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் தென் மராட்சியின் பல பாகங்களிலும் கடுமையாக நடந்த சண்டைகளால் தென்மராட்சிப் பகுதி மக்களிற் பெரும்பாலானோர் வடமராட்சியின் பல இடங்களுக்கு இடம்பெயர்ந்திருந்தனர். இதில் ஒரு பகுதியினர் மிருசுவில் வடக்கு படித்த மகளில் குடியேற்றத்திட்டத்திலிருந்து இடம்பெயர்ந்து வடமராட்சி கரவெட்டியில் அமைந்துள்ள நாவலர் மடப் பகுதியில் தஞ்சமடைந்திருந்தனர்.

19.12.2000 அன்று மிருசு விலிருந்து இடம் பெயர்ந்து வடமராட்சழ கரவெட்டியில் தங்கியிருந்த ஒன்பது பேர் தமது வாழ் விடங்களைப் பார்வையிடச் சென்றனர். அங்கிருந்த தமது வாழ்வியலுக்குத் தேவையான பொருட்களை எடுத்துக் கொண்டிருந்தவேளை ஒன்பது பேரையும் கைது செய்த சிங்கள ஆக்கிரமிப்பு இராணுவத்தினர் கண்களை கட்டி சித்திர வதை செய்தனர். ஒன்பது பேரில் ஒருவர் தப்பி மந்திகைப் பகுதிக்கு வந்து ஏனையவர்களின் உறவினரிடம் எட்டுப்பேரின் நிலைமையினையும் தெரிவித்தார்.

காணாமற்போனர்களின் உறவினர்களின் முறைப்பாட்டைத் தொடர்ந்து அச்சம்பவத்திற் தப்பிவந்த பொன்னையா மகேஸ்வரன், மற்றும் அப்பகுதியில் கடமையில் ஈடுபட்ட சிங்கள இராணுவ வீரர் லான்ஸ் கோட்ரல் ஆர். எம். எஸ். ரத்னநாயக்கவும் கொடுத்த தகவின் பேரில் அப்போதைய யாழ். காவற்றுறை அத்தியட்சகர் உபாலி குணசேகர, உதவிக் காவற்றுறை அத்தியட்சகர் நிமல் ஸ்ரீநாத், சாவகச்சேரி நீதவான் அன்னலிங்கம் பிரேம் சங்கர், பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி கதிரவேற்பிள்ளை ஆகியோர் முன்னிலையில் அடையாளம் காட்டப்பட்ட மனிதப் புதைகுழி 25.11.2000 அன்று மாலை 3:30 மணியளவில் தோண்டப்பட்டது. புதைகுழி தோண்டும் போது இரண்டு அடி ஆழத்தில் சடலங்கள் ன்பட்டன. அப்பகுதியிற் காணாமற்போன எட்டுப் பேரது உடல்களும் பெட்டப் பட்டு, கைகள் கட்டப்பட்ட நிலையில் காணப் பட்டன.




மிருசுவில் சம்பவம் தொடர்பாக மரண விசாரணை நடத்திய பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி கீழ் வருமாறு (29.12. 2000 வீரகேசரி) தகவல் கொடுத்தார்.

"தப்பி வந்த பொன்னையா மகேஸ்வரனும், லான்ஸ் கோப்ரல் ஆர்.எம். எஸ் ரட்ணாயக்காவும் அடையாளம் காட்டிய எழுதுமட்டுவாள் பகுதியிலிருந்த மனிதப் புதைகுழியைத் தோண்டியபோது இரண்டடி ஆழத்தில் மனிதனின் முழங்கை ஒன்று தென்பட்டது. அதைச்சுற்றி மண்ணை அவதானமாக அப்புறப்படுத்தி வேளை மரக்கட்டை காணப்பட்டது. மனித சடலத்தின் தலை ஒன்றும் காணப்பட்டது. அதை அவதானமாக எடுத்த போது இருபத்தொரு வயது மதிக்கத்தக்க ஆணின் சடலம் காணப்பட்டது. இச்சடலம் சிவப்பு வெள்ளை நிறச்சாறியினால் சுற்றப்பட்டிருந்தது. இரண்டாவதாகச் சிறுவனின் சடலம் எடுக்கப்பட்டது. இதைத்தொடர்ந்து மேலும் சடலங்கள் எடுக்கப்பட்டன. சிறுவனின் சடலம் மேற்றோல் உரிந்து றோஸ் நிறமாகக் காணப்பட்டது. கூரிய ஆயுதத்தால் குரல் வளைகள் வெட்டப்பட்ட நிலையில், கால், தலை துண்டிக்கப்பட்ட நிலையிலும் சடலங்கள் காணப்பட்டன." எனத் தெரிவித்தார்.

**19.12.2000 அன்று மிருசுவிற் படு கொலை யில் கொல்லப்பட்டோர் விபரம்**

1. சின்னையா வில்வராசா (41)
2. செல்லத்துரை தெய்வகுலசிங்கம் (31)
3. வில்வராசா பிரசாத் (05)
4. வில்வராசா பிரதீபன் (15)
5. பாஸ்கர் ஞானபாஸ்கரன் (19)
6. ஜெயச்சந்திரன் நடேசு (21)
7. ஞானச்சந்திரன் கதிரன் (35)
8. ஞானச்சந்திரன் சாந்தன் (-)

# மன்னார், பேசாலைப் படுகொலை 23, 12. 2005

மன்னார் மாவட்டத்தில் சிங்கள அரசபடைகளின் மீது மேற்கொள்ளப்பட்ட கிளைமோர்த்தாக்குதலை அடுத்து சிங்கள படையினர் தமது கொலை வெறியாட்டத்தைப் பொதுமக்கள் மீது கட்டவிழ்த்துவிட்டனர். தம்மைத் தாக்குவோரை அடையாளம் காண முடியாத படையினர், வன்முறைகளை பொதுமக்கள் மீது திணிப்பது இதுதான் முதற்தடவையல்ல. காலங்காலமாக தமக்கேற்படும் இழப்புக்களுக்காக பொதுமக்களையே இவர்கள் பழிதீர்த்து வருகின்றனர்.

அவ்வாறே 13.12.2005 அன்றைய மன்னார்ச் சம்பவமும் அமைந்துள்ளது. அன்றையதினம் படையினர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலையடுத்து படையினரால் சுற்றிவளைப்பு தேடுதல் ஒன்று நடத்தப்பட்டது. அப்போது இரு குடும்பங்களைச் சோந்த நான்கு வயதுக் குழந்தை உட்பட் ஐந்து பேரை இராணுவத்தினர் கடத்திச் சென்றனர். இவ்வாறு கடத்திச் செல்லப்பட்ட ஐந்துபேரும் 100 வீட்டுத்திட்டப் பகுதியில் உள்ள வீடொன்றினுள் எரியூட்டப்பட்ட சடலங்களாகக் கண்டு பிடிக்கப்பட்டனர்.

**23.12.2005 அன்று மன்னார், பேசாலைப் படு கொலையில் கொல்லப்பட்டோர் விபரம்**

1. திரேசா குருஸ் (40)
2. இம்மானுவேல் குருஸ் (43)
3. குருஸ் அந்தோனியம்மா (38)
4. குருஸ் டிலக்சன் (04)

# தென் தமிழீழப் படுகொலைகள் அகஸ்ட் தொடக்கம் டிசம்பர் 2006

தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலிருந்த திருகோணமலைப் பகுதிகளும் அதன் அருகாக இருந்த மட்டக்களப்பு பகுதிகளும் ஆறுமாத காலத்துக்கு மேலாக சிறீலங்கா சிங்கள இராணுத்தின் பெருமெடுப்பிலான தாக்குதலுக்குள்ளானது. அதன்போது பொதுமக்கள் கூட விட்டுவைக்கப்படவில்லை.



இந்தக்காலத்தில் இப்பகுதி துண்டிக்கப்பட்டிருந்தால் இதன்போது ஏற்பட்ட 210 பொதுமக்களின் இழப்புக்கள் இதுவரை சரியாக பதிவுக்குட்படுத்தப்படவில்லை.

இந்த 6 மாதகாலத்து நிகழ்வுள் தொடர்பான ஒரு சுருக்கமான விபரமே இதுவாகும். இந்தத் தாக்குதல்களில் கொல்லப்பட்டவர்களின் விபரம் முழுமையாக இல்லாவிட்டாலும் குடும்ப அங்கத்தவர்களின் இழப்புக்கள் தொடர்பாக குடும்பங்கள் மேற்கொண்ட பதிவுகளின் அடிப்படையில் உதவி அரச அதிபர் அலுவல்களிலிருந்து பெறப்பட்ட தரவுகள் சரியான பார்வையைத் தருகிறது.

மாவிலாற்றிலிருந்து நீர் திறந்துவிடப்படும் வான் கதவை கட்டுப்பாட்டில் கொண்டுவருவதென்ற சாட்டில் இத்தாக்குதல் ஆரம்பமானது. திருகோணமலையின் மூதூர் தமிழ் மக்கள் அந்தப் பகுதியில் அமைந்திருக்கும் இந்தக் குளத்திலிருந்து தங்களுக்கும் நீர் வசதிசெய்து தரப்படாததற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் பல ஏக்கர் நெல் வயல்களுக்கு நீரை வழங்கும் இந்த வான் கதவைப் பூட்டியிருந்தனர். இலங்கை கண்காணிப்புக் குழுவின் தலையீட்டினால் இப்பிரச்சனை தீர்க்கப்பட்ட பொழுதும் சிங்கள அரசாங்கம் தாக்குதலை முன்னெடுத்துச் சென்றது.

முதலாவதாக ஆகஸ்ட் 06 ஆம் நாள் மாவிலாறு பிரச்சனையை வைத்து ஆகாய, தரைப்படைத் தாக்குதல் நடாத்தப்பட்டது. இந்த நாட்களில் இடம்பெற்ற தாக்குதலில் பாதிக்கப்பட்ட கிராமங்களுள் ஈச்சிலப்பத்தை, நல்லூர், மற்றும் உப்பாறு உள்ளடங்கும். சம்பூருக்கு அண்மியதாக முன்பு நடாத்தப்பட்ட தாக்குதலால் இடம்பெயர்ந்த மக்கள் இக்கிராமங்களுக்கு ஏற்கனவே இடம்பெயர்ந்திருந்தனர்.

மட்டக்களப்பு திருகோணமலை மாவட்டங்களை இணைக்கின்ற ஒரு ஒடுங்கிய கரையோரப் பகுதியான வாகரைக்கு திருகோணமலையின் மூதூர் கிழக்கிலிருந்து மக்கள் தொடர்ச்சியான தாக்குதல் காரணமாக இடம்பெயர்ந்து செல்ல வேண்டியதாயிற்று. ஆகஸ்ட் 19 ஆம் நாள் இரண்டாவது மிகப்பாரிய தாக்குதல் வாகரையை இலக்குவைத்து நடாத்தப்பட்டது. பொதுமக்கள் மீது மீண்டும் நடாத்தப்பட்ட ஆகாயம், தரைத்தாக்குதலால் 100 இற்கும் மேற்பட்டோர் இறந்தனர். அவ்வாறு இறந்தவர்களுக்கு முறைமையான இறுதி நிகழ்வுகளை நடாத்தக்கூட குடும்பத்தவர்களுக்கு வசதி கிடைக்கவில்லை.

இந்த நிகழ்வின் பின்பும் வாகரைக்கு வடக்கே மூதூர் கிழக்கில் தங்கியிருந்தவர்களை தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர்களின் குடும்பங்களெனக்கருதி ஆகஸ்ட் 28ஆம் நாள் இவர்கள் மீது கொடூரமான தாக்குதலை சிறீலங்கா சிங்கள இராணுவம் நடாத்தியது. சிறீலங்கா சிங்கள இராணுவத்தால் தாக்குதல் ஆரம்பிக்கப்பட்டதும் இலங்கைத்துறை முகத்துவாரம் பாலமூடாக வெளியேறுவதற்கு மக்கள் முயற்சித்தனர். மக்கள் தப்பிச் செல்வதை தடுக்கும் நோக்கமாக பாலம் சிறீலங்கா இராணுவத்தால் தகர்க்கப்பட்டது. இதன்போது இடம்பெற்ற தாக்குதலில் குறைந்தது 25 பொது மக்கள் கொல்லப்பட்டனர்.

மூதூர் கிழக்கில் இவ்வாறு தாக்குதலை நடத்தி மக்களை வெளியேற்றிய சிறீலங்கா சிங்கள இராணுவம் இடம்பெயர்ந்த மக்கள் நெருக்கமாக வாழ்ந்த வாகரைப் பகுதி மீது தாக்குதலை ஆரம்பித்தனர். இந்தப் பிரதேசத்தில் நவம்பர், டிசம்பர் மாதங்களில் பெரும் தாக்குதல்கள் இடம்பெற்றன. இதன்போது நூற்றுக்கணக்கானோர் கொல்லப்பட்டனர்.

இந்நிகழ்வு இடம்பெற்ற ஆறு மாத காலத்துக்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் உட்பட மனிதாபிமான நிறுவனங்கள் மற்றும் இலங்கை கண்காணிப்புக்குழு ஆகியன வாகரைக்குச் செல்வதை தடுத்தது. இறுதியில் குண்டு மற்றும் செல் தாக்குதலிலிருந்து தங்களை பாதுகாக்க மாறு இலங்கை கண்ணகாணிப்புக் குழுவிடம் மக்கள் மன்றாடினார்கள். ஆறு மாதகாலத்துக்கு உணவு தொடரணி கூட வாகரைக்கு செல்வதை சிறீலங்கா சிங்கள அரசாங்கம் அனுமதிக்கவில்லை. சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் உணவுத் தொடரணியை எடுத்துச்செல்ல இரு தடவைகளும் மேலாக முயற்சித்ததையும் சிறீலங்கா சிங்கள அரசாங்கம் முறியடித்தது.

இறுதியில் தமிழீழ விடுதலைப் புலிகள் அப்பகுதியிலிருந்து வெளியேற்றுவதற்கு ஒரு வழியாக எல்லா மக்களையும் வாகரையிலிருந்து வெளியேற்றுவதில் சிறீலங்கா சிங்கள அரசாங்கம் வெற்றிகண்டது. தப்பியோடும் பொதுமக்களைத் தடுத்ததற்காகவும் வாகரையை விட்டு நேரகாலத்தோடு மக்கள் வெளியேறுவதை அனுமதிக்காததற்காகவும் சர்வதேச ரீதியில் தமிழீழ விடுதலைப்புலிகளும் கண்டிக்கப்பட்டார்கள். பசியிலிருந்தும் தாக்குதலிலிருந்தும் தப்புவதாக சில பொதுமக்கள் நடையாகவே காடுகளை கடந்தார்கள். வள்ளத்தில் சென்று ஐந்து பொதுமக்கள் வள்ளம் அமிழ்ந்ததில் நீரில் மூழ்கினர். மறுவளத்தில் மனிதாபிமான உதவிகள் கிடைக்காமையைச் செய்தமை பொதுமக்கள் மீதான பாரபட்சமான தாக்குதல் என்பவற்றை சர்வதேச சமூகம் கண்டிக்காமையையிட்டு தமிழ் மக்கள் குறைபட்டுக் கொண்டார்கள்.

**உயிரிழந்தவர்களின் பெயர் விபரங்கள் வருமாறு**

1. அ. அரசரட்ணா (42)
2. கோ. கணேசராஜா (46)
3. ஞா. சறோஜா (10)
4. ஞா. றகுமார் (06)
5. ஞா. சீவிதா (10)
6. ஞா. மஞ்சுளாதேவி (23)
7. இ. பவானி (24)
8. க. நற்குணம் (36)
9. மு. தங்கவேல் (22)
10. சீ. மகாலிங்கம் (32)
11. செ. சந்திரகலா (18)
12. சி. திரவியமலர் (55)
13. சி. முத்துலிங்கம் (45)
14. சி. ரஸ்யப்பிரியன் (01)
15. சி. சிவகுமார் (25)
16. சா. தவன்ஜா (21)
17. சு. யோகேஸ்வரன் (29)
18. சு. கணபதிப்பிள்ளை (62)
19. த. புமணி (45)
20. வே. தர்மலிங்கம் (50)
21. ந. டேவிட் (25)
22. ந. குணராசா (22)
23. ந. பாக்கியராசா (40)
24. ந. விமலேந்திரன் (35)
25. நா. யோகேஸ்வரன் (28)
26. நகுலேஸ்வரன் (32)
27. நா. திரவியமலர் (65)
28. ந. தனுசகீன் (04)
29. ந. நிசாந்தன் (20)
30. பா. நாகேந்திரன் (20)
31. பா. தயாநந்தினி (22)
32. ப. கோணேஸ்வரன் (31)
33. பி. தவனேசன் (36)
34. ற. றாமச்சத்திரன் (32)
35. இ. பிரபு (17)
36. ற. சதுர்சன் (-)
37. ற. விஜயா (30)
38. ந. தியாகராசா (48)
39. அ. செல்வறட்ணம் (-)
40. ற. கோபிநாத் (22)
41. க. பத்மா (-)
42. கு. தெய்வகரன் (-)
43. மா. நாகேஸ்வரன் (-)
44. மா. சுந்தரராஜா (-)
45. நா. இந்தரன் (46)
46. நா. பிறேமலதா (35)
47. சி. சிவசோதி (-)
48. வ. சுமநாதன் (-)
49. வெ. கோணேஸ்வரன்(-)
50. வி. றதிகலா (-)
51. யோ. சிதம்பரம் (45)
52. அ. அரசறட்ணம் (33)
53. ச. சண்முகநாதன் (29)
54. ச. சந்திரசேகரன் (22)
55. ச. கோஸ்பிரியன் (-)
56. சி. பவானி (22)
57. செ. தர்மலிங்கம் (31)
58. வ. திவ்வியா (14)
59. ஜீ. சித்திரவேல் (-)
60. கா. றாஜேஸ்வரன் (-)
61. றா. தேவராச் (25)
62. சி. சிவசங்கர் (27)
63. வெ. ஆறுமுகம் (28)
64. க. புஸ்பன் (25)
65. க. றதி (31)
66. க. றஜீன்திரன் (27)
67. க. சங்கர் (23)
68. க. சாந்தகனகம் (20)
69. கோ. நாகேந்திரன் (70)
70. கோ. தனபாக்கியம் (28)
71. கோ. தவராசா (32)
72. லோ. சசிகரன் (26)
73. ம. வரதன் (24)
74. மா. கள்ளிப்பிள்ளை (52)
75. மு. சிவமணி (58)
76. மு. பாஸ்கரன் (29)
77. ம. குணராசா (31)
78. அ. யோகநாதன் (12)
79. ஆறுமுகம் (34)
80. சு. நந்தினி (-)
81. அ. யோகநாதன் (26)
82. பா. தவமணி (27)
83. செ. ஜெயகாந்தன் (24)
84. டி. பட்மசிறி (27)
85. க. சசிக்குமார் (17)
86. T. புமணி (-)
87. T. மஞ்சுளாதேவி (-)
88. சு. கோமளாதேவி (32)
89. ச. கிளிராசா (50)
90. கு. காந்தன் (22)
91. வே. றாஜன் (35)
92. T. குமார் (07)
93. T. டயானா (15)
94. A வேல்முருகா (47)
95. ச. கிளியரசன் (50)
96. கு. சுத்தியராசா (17)
97. கலாபவனம் (45)
98. சேரன் (-)
99. சி. குணமணி (25)
100. ஞா. கோபால் (19)
101. இ. தர்சினி (07)
102. ஜெ. மாணிக்கப்போடி (19)
103. ஜெ. சகுலேஸ்வரன் (21)
104. க. அஜந்தன் (15)
105. ளு. ஜெயகாந்தன் (21)
106. ளு. முகிருபறச் (30)
107. ளு. சிவனேசன் (25)
108. ளு. தயாகரன் (29)
109. ச. மாணிக்கப்போடி (27)
110. செ.ஸ்ரீகாந்தராசா (17)
111. சி. நிறஞ்சன் (20)
112. சி. நித்தியானந்தம் (22)
113. வி. விஸ்வலிங்கம் (19)
114. விக்னேஸ்வரன் (-)
115. த. நிமலநாதன் (34)
116. வி. துரைசாமி (-)
117. த. விவேகானந்தன் (36)
118. வே. கதிர்காமத்தம்பி (55)
119. வி. யாழினி (13)
120. A. றகுவரன் (17)
121. I. பவானி (23)
122. I டெனிஸ்சிவானந்தன் (27)
123. K. ஜெயானந்தி (16)
124. K. கிருபேஸ்வரன் (-)
125. K. நற்குணம் (33)
126. K. சரத்பாபு (18)
127. M . கழிப்பிள்ளை (52)
128. M தவராசா (34)
129. N. யோகஸ்வரன் (-)
130. N. ரவீந்திரராசா (-)
131. P. கமல் (17)
132. P. கிருஸ்ணபிள்ளை (56)
133. S. ஜீவாநந்தன் (31)
134. S. நந்தினி (13)
135. S. றஸ்யப்பிரியன் (-)
136. S. சந்திரிக்கா (17)
137. S. தவப்பிரியா (20)
138. T. தவராசா (-)
139. V. பாலகுமாரன் (19)
140. V. கதிர்காமத்தம்பி (51)
141. V. றணீஸ்வரன் (17)
142. அ. சுதர்சினி (17)
143. கா. சரஸ்வதி (17)
144. நா. றவீந்திரராசா (41)
145. றா. சாளினி (04)
146. ர. றாமச்சந்திரன் (30)
147. சு. மகேந்திரராசா (43)
148. சு. றாஜேஸ்வரன் (26)
149. தி. றேகன் (21)
150. A. பிரியா (-)
151. A. தமயந்தி (-)
152. V. தர்மலிங்கம் (-)
153. சேரன் (-)
154. சி. குணரட்ணம் (60)
155. சி. குணமணி (60)
156. வி. சுசிகரன் (10)
157. க. கோமளாதேவி (32)
158. A. வனிதா (-)
159. வே. றாஜன் (-)
160. ஆ. மேனா (10)
161. V. தர்மலிங்கம் (-)
162. சி. சந்திரன் (39)
163. சி. சந்திரமூர்த்தி (23)
164. சி. பாக்கியராஜா (30)
165. சி. இந்திரன் (46)
166. சி. விஜயா (34)
167. சு. கோணேஸ்வரன் (28)
168. சு. யுவந்தன் (10)
169. த. விறதறாஜ் (22)
170. த. பிள்ளையான் (51)
171. த. றஞ்சன் (24)
172. த. யோகேஸ்வரன் (27)
173. த. சுமதி (42)
174. த. சந்திரன் (20)
175. தி. தர்சிகா (11)
176. தி. தஸ்காந்தி (16)
177. வ. குணவதி (58)
178. வே. மனோகுமார் (28)
179. S. திலசிகா (09)
180. S. கோகுலவாணி (-)
181. S. சோதி (-)
182. S. கேமலதன் (09)
183. P. மயில்வாகனம் (-)
184. N. தீபன் (17)
185. M. நாகேஸ்வரன் (38)
186. கு. சத்தியராசா (17)
187. ஆனந்தஜோதி (24)
188. கலாபவனம் (450
189. T. சர்மிளா (-)
190. K. நிறுசாந்தினி (12)
191. கு. காந்தன் (22)
192. ஆனந்தஜோதி (24)
193. குணரட்ணம் (60)
194. வி. வசீகரன் (10)

குறிப்பு :- இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடியவில்லை.



# டிசம்பர் 28, 1999 அன்று மிக கொடூரமான ஒரு துன்புறுத்தல் ஈழத்து பெண் சாரதாம்பாள் சரவணபவானந்தக் குருக்கள் என்ற பெண்ணுக்கு நிகழ்ந்தது

இந்த பெண் பலரால் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டு கொடூரமாக கொல்லப்பட்ட தமிழ்ப் பெண் ஆவார். இவரை பாலியல் வன்புணர்வு செய்தவர்கள் சிறீலங்கா கடற்படையினர் இந்த கொடுமையை செய்தார்கள் என இந்த பகுதி மக்கள் உறுதியாக கூறுகின்றனர்.

யாழ்ப்பாண மாவட்டம், புங்குடுதீவில் சரவணபவானந்தக் குருக்கள் என்பவரது மனைவியும் இரண்டு பிள்ளைகளின் தாயுமான 29 வயது சாரதாம்பாளின் இறந்த உடல் சருகுகளுக்கும் இலைகளுக்கும் கீழ் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்ட நிலையில் கிடந்ததை ஊர்மக்கள் கண்டு பிடித்தனர்.

இந்நிகழ்வு பலரையும் அதிர்ச்சி கொள்ள வைத்த பொழுதும் இன்றளவும் இதற்கு நீதி வழங்கப் படவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

ஆசிய மனித உரிமைகள் ஆணையத்தின் (AHRC) அறிக்கையின் படி, உள்ளூர் இந்துக் கோயில் குரக் களின் மகளான 29 வயது சாரதாம்பாள் சரவணபவானந்தக் குருக்கள் சிறீலங்கா கடற்படையினர் எனச் சந்தேகிக்கப் படுவோரால் யாழ்ப்பாணக் குடாநாட்டில் புங்குடுதீவு என்ற இடத்தில் அவரது வீட்டில் இருந்து பலவந்தமாக இழுத்துச் செல்லப் பட்டு சிதைக்கப்பட்டார் என கூறப்படுகின்றது.

பன்னாட்டு மன்னிப்பு அவையின் அறிக்கையின் படி, சாரதாம்பாளின் வீடு கடற்படைத் தளத்தில் இருந்து 500 மீ தூரத்தில் அமைந்திருந்தது. அவரது தந்தையும், சகோதரரும் கறுப்பு உடையில் வந்திருந்த பாதுகாப்பு அதிகாரிகளால் வீட்டினுள் வைத்து கட்டப்பட்டது.

சாரதாம்பாளின் இறந்த உடல் வீட்டில் இருந்து 100 மீட்டர் தூரத்தில் உள்ள தரிசு நிலமொன்றில் அடுத்த நாள் கிடக்கக் கண்டுபிடிக்கப்பட்டது.

புங்குடுதீவிலும், யாழ்ப்பாணத்திலும் இடம்பெற்ற பொது மக்களின் ஆர்ப்பாட்டங்களை அடுத்து சாரதாம்பாளின் உடல் மருத்துவ ஆய்வுக்காக கொண்டு செல்லப்பட்டது.

உடலைப் பரிசோதித்த அரசு மருத்துவ அதிகாரி, பெண்ணின் உள்ளாடை அவரது வாயினுள் அடைக்கப்பட்டதில் மூச்சுத் திணறி இறப்பு ஏற்பட்டதாகத் தெரிவித்தார்.

இறப்புக்கு முன்னர் அவர் பலவந்தமாக பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டதாகவும் அவரது அறிக்கை தெரிவித்தது.

சாரதாம்பாளின் இறுதி நிகழ்வுக்கு இலங்கையின் பல பாகங்களிலும் இருந்து மனித உரிமை ஆர்வலர்கள் பலர் சென்று உரை நிகழ்த்தினர்.

அன்று அரசுத்தலைவராக இருந்த சந்திரிக்கா குமாரதுங்க 2000 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் விசாரணை ஒன்றுக்கு உத்தரவிட்டார்.

பெண்களுக்கு எதிரான வன்முறைகளைக் கவனிக்கும் ஐநா சிறப்புப் பிரதிநிதி ராதிகா குமாரசாமி சிறீலங்கா இராணுவத்தினருக்கு எதிரான பாலியல் குற்றச்சாட்டுகளை விசாரிப்பதற்கு சிறீலங்கா அரசிடம் இருந்து பெருமளவு ஒத்துழைப்புக் கிடைக்கவில்லை எனத் தெரிவித்தார்.

டிசம்பர் 1999 பாலியல் வன்முறைக் குற்றச்சாட்டுகளை விசாரிப்பதற்கு சிறிதளவு முயற்சியே மேற்கொள்ளப்பட்டதாக அவர் தெரிவித்திருந்தார்.

தமது வீட்டுக்கு வந்திருந்த கடற்படையினரின் ஆளடையாளத்தை வெளியிடக் கூடாதென சாரதாம்பாளின் தந்தையும் சகோதரரும் எச்சரிக்கப்பட்டதாக பன்னாட்டு மன்னிப்பு அவை தெரிவித்துள்ளது.

சிறீலங்கா காவல்துறையின் புலன்விசாரணைத் திணைக்களத்தின் தலைவர் வெளியிட்ட அறிக்கையில்,

"சகோதரர் தமது வீட்டுக்கு வந்திருந்த நால்வரின் ஆளடையாளத்தை நிரூபிக்கத் தவறி விட்டார்". எனக் கூறினார்.

குற்றம் சுமத்தப்பட்ட கடற்படை அதிகாரிகள் வேறு இடங்களுக்குப் பணி மாற்றம் செய்யப்பட்டதாக பன்னாட்டு மன்னிப்பு அவை தனது அறிக்கையில் தெரிவித்தது.

சாரதாம்பாளின் பாலியல் வன்புணர்வு மற்றும் படுகொலை வழக்கில் சாட்சியங்கள் எவையும் சமர்ப்பிக்கப் படாததமையால், வழக்கைத் தொடர முடியாது என சட்டமா அதிபர் திணைக்களம் மே 2001 இல் விசாரணைக் குழுவுக்குத் தெரிவித்தது.

இதே போல் கிருஷாந்தி குமாரசுவாமி, இளையதம்பி தர்சினி, கோணேஸ்வரி முருகேசபிள்ளை என பல தமிழ் பெண்களின் கொடூரமான படுகொலைகள் விசாரிக்கப் பட்டோ நீதி வேண்டியோ உண்மைகளை உலகுக்கு எடுத்து சொல்லாமலே மண்ணுக்குள் கொடும் துயரத்தை புதைத்து ஊமையாய் இருக்கின்றது...

28.12.1999




## சாரதாம்பாள் பாலியல் வன்முறையும் படுகொலையும்

சாரதாம்பாள் மீது படையினரின் பாலியல் வன்முறையும் படுகொலையும் யாழ் புங்குடுதீவில் சரவணபவானந்தக் குருக்கள் என்பவரது மனைவியும் இரண்டு பிள்ளைகளின் தாயுமான 29 வயதுடைய சாரதாம்பாள் சிறிலங்கா கடற்படையினரால் தனது வீட்டில் இருந்து பலவந்தமாக இழுத்துச் செல்லப்பட்டு பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டார் சாரதாம்பாளின் வீடு கடற்படைத் தளத்தில் இருந்து 500 மீ தூரத்தில் அமைந்திருந்தது. அவரது தந்தையும், சகோதரரும் கறுப்பு உடையில் வந்திருந்த பாதுகாப்பு அதிகாரிகளால் வீட்டினுள் வைத்து கட்டப்பட்டுள்ளனர். சாரதாம்பாளின் இறந்த உடல் கடற்படையின் முகாமின் அருகில் சருகுகளுக்கும் இலைகளுக்கும் கீழிருந்து ஊர்மக்களால் கண்டறியப்பட்டது. உடலைப் பரிசோதித்த அரசு மருத்துவ அதிகாரி, பெண்ணின் உள்ளாடை அவரது வாயினுள் திணிக்கப்பட்டதில் மூச்சுத் திணறி இறப்பு ஏற்பட்டதாகத் தெரிவித்தார். இறப்புக்கு முன்னர் அவர் பலவந்தமாக பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டதாகவும் தனது அறிக்கையில் தெரிவித்தார். பெண்களுக்கு எதிரான வன்முறைகளைக் கவனிக்கும் ஐநாவின் சிறப்புப் பிரதிநிதியான ராதிகா குமாரசாமி இலங்கை இராணுவத்தினருக்கு எதிரான பாலியல் குற்றச்சாட்டுகளை விசாரிப்பதற்கு இலங்கை அரசிடம் இருந்து பெருமளவு ஒத்துழைப்புக் கிடைக்கவில்லை எனத் தெரிவித்தார். சிங்கள அரசு விசாரணைக்குழுவை அமைத்தது. சாரதாம்பாள் மீதான பாலியல் வன்புணர்வு மற்றும் படுகொலை வழக்கில் சாட்சியங்கள் எவையும் சமர்ப்பிக்கப்படாதமையால், வழக்கைத் தொடர முடியாது என சிறிலற்கா சட்டமா அதிபர் திணைக்களம் வழமைபோல் மே 2001 இல் விசாரணைக் குழுவுக்குத் தெரிவித்தது.



# எமது சுண்டிக்குளத்துக்கு எம்மால் செல்ல முடியாதுள்ளதே!



மீரா ஸ்ரீநிவாசன் -01.12.2021

வனவிலங்கு பூங்காவிற்கான பரப்பளவை வனவிலங்கு பாதுகாப்புத் திணைக்களம் தன்னிச்சையாகவிரிவாக்கியதன் மூலம் வடபகுதி கிராமமான சுண்டிக்குளத்தில் வசிப்பவர்கள் பாரம்பரிய விவசாய நிலங்களை இழந்துள்ளனர்.

யாழ் குடாநாட்டின் கிழக்கு முனையில் அமைந்துள்ள சுண்டிக்குளம் கிராமத்தின் விவசாயிகள் அசாதாரணமான சவாலை எதிர்கொண்டுள்ளனர். சமீபகாலமாக காய்கறிகளைபயிரிட்ட அவர்களது நிலங்களுக்கு செல்ல முடியாமல் தவிக்கின்றனர். "வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் எல்லைக்கற்கள் எங்களின் காணிகளில் முளைத்துள்ளன," என்று அங்கு வசிக்கும் எஸ். அருந்தவராஜா என்பவர் , 'டி டபிள் யூ சி ' என்ற எழுத்துகள் வரையப்பட்டபழுப்பான சாம்பல் நிறக் கல்லைச் சுட்டிக்காட்டினார். "எங்கள் நிலங்களில் இதுபோன்ற ஒரு கல் போடப்பட்டால், அது அரசாங்கத்தின் வளப் பாதுகாப்பு முயற்சியின் ஒரு பகுதியாக இருப்பதால், அந்தப் பகுதிக்குள் நுழைய வேண்டாம் என்றுஎங்களுக்கு கூறப்பட்டுள்ளது ," என்று அவர் தெரிவித்தார் .




இலங்கையில் தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் வடக்கு மற்றும் கிழக்கில்காணப்படும் ஒரு பரவலான கவலையின் மற்றொரு பிரதிபலிப்பே அவரது பிரச்சினையாகும். ஒருபுறம், இலங்கையின் போருக்குப் பின்னரான தசாப்தத்தில் ஆட்சியில் இருந்த அரசாங்கங்கள் இராணுவத்தின் வசம் இருந்தபொது மக்களின் காணிகளை மீள வழங்கியதற்கான பதிவுகளைக் காட்டுகின்றன. மறுபுறம், பல ஆண்டுகளாக போர்க்கால இடப்பெயர்வைத் தொடர்ந்து தங்கள் கிராமங்களுக்குத் திரும்பிய ஏராளமான குடும்பங்கள், அரசாங்கத்தின் தொல்லியல் மற்றும் வனவளத்திணைக்களத்திடமிருந்து தங்கள் நிலம் தொடர்பாக எதிர்கொள்ளும், மிக சமீபத்திய "அச்சுறுத்தல்களை" எடுத்துக்காட்டுகின்றன. கடந்த ஆண்டு, கிழக்கு மாகாணத்தில் விவசாயிகள் ஒருமுறை பயிரிட்ட அல்லது தங்கள் கால்நடைகளுக்கு மேய்ச்சல் திட்டுகளாகப் பயன்படுத்திய தங்கள் நிலங்களை மீட்டெடுக்க அதிகாரிகளுக்கு சவால் விடுத்து குறைந்தது ஒரு டஜன் வழக்குகளைத் தாக்கல் செய்திருந்தனர் .

ஒதுக்கீடுசெய்யப்பட்ட பகுதிகள் "யாழ்ப்பாண நகரத்திலிருந்து ஒரு மணித்தியாலப் பயணத்தூரத்திலுள்ளது சுண்டிக்குளம் கிராமம் . கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களின் எல்லையில் உள்ள கிராமத்திலும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் சுமார் 250 குடும்பங்கள்வசிக்கின்றன .அவர்கள் பெரும்பாலும் விவசாயம் மற்றும் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வாழ்கின்றனர். உள்நாட்டுப் போரின் போது, அவர்கள் முல்லைத்தீவுக்கு இடம்பெயர்ந்தனர் - சில குடியிருப்பாளர்கள் அயல் மாவட்டத்திற்கு நடந்து சென்றதை நினைவு கூர்ந்தனர் - மேலும் 2009 மற்றும் 2011 இல் தங்கள் கிராமத்திற்கு படிப்படியாகத் திரும்பினர். நாங்கள் திரும்பி வந்தபோது, இங்கு எதுவும் இல்லை - எங்கள் வீடுகள் அழிக்கப்பட்டிருந்தன. இப்போது, அரசாங்கம் எங்களின் பூர்விக நிலங்களை 'வனவிலங்கு பாது காப்புப் பகுதிகள்' என்று பிரகடனப்படுத்தியுள்ளது" என்று சமூகத் தலைவர் நடேசா யோகராஜா கூறினார்.

"எங்கள் கிராமத்திலும் அதிக இராணுவ பிரசன்னம் உள்ளது, நீங்கள் பார்த்திருப்பீர்கள். ஊடகங்களிடம் பேசினால் கூட சிஐடி எங்களை விசாரிக்கும் சாத்தியம் உள்ளது," என்று அவர் கூறினார். வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பிரதேசத்தில் பல இராணுவ சோதனைச் சாவடிகள் உள்ளதாக பிரதேசவாசிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். போதைப்பொருள் வர்த்தகத்தைத் தடுப்பதற்காகத்தான் என்று சொல்கிறார்கள். ஒவ்வொரு நாளும், நாட்டின் பல் வேறு பகுதிகளில் கைப்பற்றப்படும் பெருமளவானவற்றைப் பற்றி நாம் படிக்கிறோம். அதற்கு என்ன அர்த்தம் ? இவ்வளவு கண்காணிப்பு இருந்தும் போதைப்பொருள் எப்படி நம் நாட்டிற்குள் நுழைகிறது?" என்று வடக்கின் பல கரையோரப் பகுதிகளில் இராணுவப் பிரசன்னம் நிலைத் திருப்பதற்கான அரசாங்கத்தின் நியாயபாட்டை குறிப் பிட்டு அவர் கேட்டார்.

வடமாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் சந்திரலிங்கம் சுகிர்தன் கூறுகையில் கையில், பல குடும்பங்கள் தனியார் காணிக்கான உரிமைப் பத்திரம் வைத்திருந்ததாகவும், மேலும் சிலர் பல தசாப்தங்களாக அரச காணியில் விவசாயம் செய்து வருவதாகவும் தெரிவித்தார். "யுத்தம் முடிவடைந்தவுடன், அரசாங்கம் இந்த நிலங்களை பாதுகாப்பிற்காக ஒதுக்கப்பட்ட பகுதிகளாக வர்த்தமானியில் வெளியிடத் தொடங்கியது," என்று அவர் கூறினார். இந்த பிரச்சனை, பல ஆண்டுகளாக, அரசாங்கங்கள் முழுவதும் நீடிக்கிறது. "அதிகாரிகள் அந்தப் பகுதிகளை நேரில் ஆய்வு செய்யவில்லை, அல்லது வனவிலங்கு காப்பகப் பகுதிகளாக அறிவிப்பதற்கு முன் பல தலைமுறைகளாக இங்கு வசிக்கும் மக்களுடன் ஆலொசனை நடத்தவில்லை. வடக்கு, கிழக்கெங்கும் இதே கதைதான்என்று அவர் குறிப்பிட்டார்.

வனத்திணைக்களம் நூற்றுக்கணக்கான ஏக்கர் தனியார் காணிகளை அல்லது மக்களின் அனுமதிப்பத்திர காணிகளை பாதுகாப்பு பிரதேசங்களாக அறிவித்து வருகின்றது என்று. அண்மையில் பாராளுமன்றத்தில் உரையாற்றிய யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கஜேன் பொன்னம்பலம்தெரிவித்திருந்தார். "அரச காணிகள் மீள் ஒதுக்கீடு செய்யப்படுமாயின், வடக்கு மற்றும் கிழக்கின் குடிப்பரம்பலை மாற்றியமைப்பதற்காக, அது பெரும்பாலும் பிற மாவட்டங்களைச் சேர்ந்தவர்களுக்கு வழங்கப்படுகிறது. இந்த உண்மைகளை நாம் கூறும்போது, நாங்கள் இனவாதிகள், அல்லது அல்லது சிங்களவர்களுக்கு எதிரானவர்கள் என்று அவர்கள் கூறுகிறார்கள். ஆனால் வடக்கு மற்றும் கிழக்கு மக்களை வெளியில் உள்ள மக்களின் நன்மைக்காக ஏழைகளாக்க முடியாது" என அவர் சபையில் தெரிவித்திருந்தார்

**சர்ச்சைக்குரிய பகுதிகள்**

இலங்கையின் வனவிலங்கு பாதுகாப்பு திணைக்களத்தின் 2018 செயற்பாட்டு அறிக்கையின்படி, முன்னர் பறவைகள் சரணாலயமாக இருந்த சுண்டிக்குளத்தில் சுமார் 50,000 ஏக்கர் நிலம் 2015 இல் தேசிய பூங்காவாக "தரம் உயர்த்தப்பட்டது". குடியிருப்பாளர்கள் முன்னைய சிறிசேன -விக்கிரமசிங்க நிர்வாகத்திடம் இந்த விட யம் தொடர்பாக கவனத்திற்கு கொண்டுசென்றிருந்தனர் . ஆனால் பயனில்லை, இது தொடர்பாக திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் சந்தன சூரியபண்டாரவை தொடர்பு கொண்டு கேட்ட போது, சுண்டிக்குளம் மக்களின் கவலைகள் குறித்து தனது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டதாக அவர் தெரிவித்தார். இப்பகுதி தேசிய பூங்காவாக தரம் உயர்த்தப்பட்டபோது, ஆட்கள் வசிக்கும் இடங்கள் பல விலக்கப்பட்டதாக அவர் கூறினார். "ஆனால் சில சர்ச்சைக்குரிய பகுதிகள் உள்ளன. எங்கள் பாதுகாப்புத் திட்டத்தை மறுபரிசீலனை செய்வதற்காக நாங்கள் கள ஆய்வை மேற்கொள்ளத் திட்டமிட்டிருந்தோம், ஆனால் தொற்றுநோய் காரணமாக நாங்கள் அதை ஒத்திவைக்க வேண்டியிருந்தது," என்று அவர் இந்துவிடம் கூறினார். விரைவில் உள்ளூர் மக்களிடம் கலந்து பேசி பிரச்னைக்கு தீர்வு காண்போம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். பி.யோகலட்சுமி, 62 வயது போன்ற குடியிருப்பாளர்களுக்கு, அவரின் தந்தையும் தாத்தாவும் விவசாயம் செய்து கொண்டிருந்ததை பார்த்து வளர்ந்தநிலம், திடீரென்று அவருடைய குடும்பத்திற்கு இல்லாமல் போனது என்பது குழப்பமாக இருக்கிறது. "பாருங்கள் , எங்களிடம் எல்லா ஆவணங்களும் உள்ளன," என்று அவர் தனது வெளிர்-மஞ்சள்நிற காணி உரிமைப் பத்திரத்துடன் ஒரு கோப்பைத் திறந்தார் .

நடேசா யோகராஜாவின் கூற்றுப்படி, சமீபத்திய நகர்வுகள் கிராமத்தின் உணவு உற்பத்திக்கும் அச்சுறுத்தலாகவுள்ளன . "எங்கள் நிலங்களில் விவசாயம் செய்ய அனுமதித்தால், ஒட்டுமொத்த கிராமமும் தன்னிறைவு பெறும். சட்டவிரோதமாக வேட்டையாடினால் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கட்டும். இத்தனை வருடங்களில் இந்த வாழ்விடத்தில் உள்ள பறவைகள் மற்றும் விலங்குகளை எம் மக்கள் ஒருபோதும் துன்புறுத்தியதில்லை. நாங்கள் ஒன்றாக வாழ்ந்தோம்." என்று அவர் கூறியுள்ளார் .

கிராம மக்கள் கொழும்பில் அரசாங்கத்திற்கு எதிராகவோ அல்லது இனப்பிரச்சினைகளை முன்னிறுத்தி சில ஆர்ப்பாட்டங்களின் ஓரங்கமாகவோ இருக்கவில்லை என அவர் குறிப்பிட்டார். "நாங்கள் இங்கே எங்கள் வாழ்வாதாரத்திற்காக போராடுகிறோம்," என்று அவர் தனது இரு சக்கர வாகனத்தை செயற்கை காலால் உந்தி - இயக்கினார் . மாகாணத்தில் உள்ள பலரைப் போலவே, அவர் போர்க்கால ஷெல் தாக்குதலில் கடுமையாக காயமடைந்திருந்தார்.

[redacted]

# மெல்ல மெல்ல ஆக்கிரமிப்பாளர்களால் விழுங்கப்படுகிறது மணலாறு சூரியனாறு பகுதியை மகாவலி அபகரிக்க முயற்சிக்கின்றது என்கிறார் – ரவிகரன்

02.12.2021




தமிழர்களின் பூர்வீக பகுதியான மணலாறு மெல்ல மெல்ல ஆக்கிரமிப்பாளர்களினால் விழுங்கப்படுவதாக முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

அந்தவகையில் மணலாறு - சூரியனாறு பகுதியிலுள்ள தமிழர்களின் பூர்வீக காணிகளை மகாவலி அபிவிருத்தி அதிகாரசபை ஆக்கிரமித்து அப்பகுதிக்கு கலம்பவெவ எனப் பெயரிட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். இந் நிலையில் தற்போது சூரிய னாறு பகுதியிலுள்ள தமிழ் மக்களின் ஏனைய காணிகளையும் அபகரிப்பதற்கு மகாவலி அபிவிருத்தி அதிகாரசபை முனைப்புக் காட்டி வருவதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், எமது தமிழர்களின் வரலாற்றுப் பூமியான மணலாறு மெல்ல மெல்ல ஆக்கிரமிப்பாளர்களால் விழுங்கப்படுகின்றது.

மணலாற்றில் ஏற்கனவே வெலி ஓயா என்ற பிரிவு உருவாக்கப்பட்டு முல்லைத்தீவு மாவட்டத்தோடு இணைக்கப்பட்டது அனைவரும் அறிந்தவிடயம்.

குறிப்பாக அனுராதபுர மாவட்டத்தின் ஒரு பகுதியையும்,திருகோணமலை மாவட்டத்தின் ஒரு பகுதியையும், வவுனியா வடக்கின் ஒரு பகுதியையும், முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேசத்தின் வளமான பூர்வீக மணலாற்றுப் பூமிகளையும் உள்ளடக்கி வெலிஓயா உருவாக்கப்பட்டது.

இவ்வாறாக உருவாக்கப்பட்ட வெலிஓயாவின் மொத்த நிலப்பரப்பு இருபத்தெட்டாயிரத்துத் தொள்ளாயிரம் (28,900)ஏக்கர் என அறியக்கூடியதாக இருக்கின்றது.

ஒன்பது கிராம அலுவலர் பிரிவுடன் இந்த வெலி ஓயா பிரதேசம் உருவாக்கப்பட்டிருப்பதோடு மாத்திரமின்றி, முல்லைத்தீவு மாவட்டத்துடன் இந்த வெலிஓயா பகுதி இணைக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் கலம்பவெவ எனப் பெயரிட்டு சூரியனாற்றுப் பகுதியிலுள்ள தமிழர்களின் பூர்வீக காணிகளை மகாவலி அபிவிருத்தி அதிகாரசபை அபகரித்திருந்தது.

அவ்வாறு அபகரிக்கப்பட்ட காணிகளுக்கு மேலதிகமாக, சூரியனாற்றுப் பகுதியிலுள்ள தமிழர்களின் காணிகளை அபகரிப்பதற்கு மகாவலி அபிவிருத்தி அதிகாரசபை முயற்சி எடுப்பதாக தெரிகின்றது.

குறிப்பாக ஏற்கனவே கடந்த 1970ஆம் ஆண்டில் 190 பயனாளிகளுக்கு 10ஏக்கர்வீதம் வழங்கப்பட்டிருந்த காணிகளையே தற்போது வெலிஓயா பகுதியுடன் இணைக்கும் நோக்குடன் மகாவலி அபிவிருத்தி அதிகாரசபை முனைப்புக்காட்டிவருவதை அவதானிக்கக் கூடியதாகவிருக்கின்றது.

இதனால் எங்களுடைய தமிழ்ப் பிரதேசங்கள் ஏற்கனவே அபகரிக்கப்பட்டிருப்பதைவிட, மெல்லமெல்ல மேலதிகமாக தமிழர்பகுதிகள் தொடர்ந்தும் அபகரிக்க முயற்சிகள் மேற்கொண்டுவருகின்றனர்.

அத்தோடு தென்னமரவடி, அக்கரைவெளி, பெரியவெளி, எரிச்சகாடு, அம்பட்டன்வாய்க்கால்,கோட்டைக்கேணி, கொக்குத்தொடுவாய் நோக்கி சுமார் 16 கிலோமீற்றர் பாதையை மறுசீரமைப்புச்செய்யவேண்டும் என்ற கோரிக்கையினை தென்னமரவடிமக்களும், கொக்குத்தொடுவாய்பகுதி விவசாயிகளும் முன்வைத்திருந்தனர்.குறிப்பாக முதலாவது வடமாகாணசபை இயங்கிய காலத்தில்கூட இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்து.



அதன் தொடர்ச்சியாக வயல் நிலங்களில் பயிர்ச்செய்கைகளை மேற்கொள்வதற்கு ஏதுவாக குறித்த வீதியை மறுசீரமைப்பு செய்துதருமாறு அங்குள்ள கமக்கார அமைப்புக்களாலும் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டிருந்தன.

அந்தவகையில் பறையனாறு 150 மீற்றர் தூரமுள்ள இடமும், விளாத்தியடி இறக்கம் 40 மீற்றர் தூரமுள்ள இடமும், சூரியனாறு 70 மீற்றருக்கும் மேற்பட்ட தூரமுள்ள இடமும், சலப்பையாறு 200 மீற்றருக்கு மேற்பட்ட இடமும் அங்கு காணப்படுவதாகச் சுட்டிக்காட்டி சீரமைப்புச் செய்து தருமாறு கோரியிருந்தனர்.

இந்நிலையில் அந்தவீதிக்கான நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டதுடன், அண்மையில் அந்த வீதிக்குரிய மறுசீரமைப்புவேலைகளும் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

இவ்வாறிருக்கும்போது தற்போது அந்தப் பகுதியிலுள்ள தமிழ் மக்களுக்குரிய நிலங்கள் அபகரிக்க முயற்சிகள் மேற்கொள்ளபபடுகின்றன. எனவே அங்குள்ள எமது தமிழ் மக்களுக்குரிய காணிகள் அனைத்தையும் சிங்கள மக்களுக்கு வழங்கும் நோக்குடன் அல்லது, அப்பகுதியிலுள்ள தமிழர் நிலங்களை வெலிஓயாவுடன் இணைத்து அபகரிக்கும் நோக்குடன்தான் அங்கு மறுசீரமைப்பு பணிகளையும் தற்போது முன்னெடுத்திருக்கின்றனர் என்றே எம்மால் உணரக்கூடியதாகவிருக்கின்றது.

இவ்வாறாக எங்களுடைய தமிழ் மக்களின் பூர்வீக நிலப்பரப்புக்களை மெல்லமெல்ல விழுங்கிக்கொண்டிருக்கின்றனர்.

கடந்த 1970ஆம் ஆண்டு காலப் பகுதியில் எமது தமிழ் மக்களுக்கு வளங்கப்பட்ட காணிகளை பறிக்கும் நோக்குடனும், அக்காணிகளில் சிங்கள மக்களை குடியேற்றும் நோக்குடனும், ஏற்கனவே அபகரிக்கப்பட்டு சிங்களமக்களை குடியேற்றியுள்ள வெலிஓயா பகுதியுடன் சூரியானற்றையும் இணைக்கின்ற வகையிலும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன.

அந்தவகையிவ் சூரியனாற்று பகுதியிலுள்ள காணிகளை பெற்றுக் கொள்வதுதொடர்பில் மகாவலி அபிவிருத்தி அதிகாரசபையினர் முல்லைத்தீவு மாவட்செயலரிடம் கடிதம் மூலம் கோரியுள்ளதாக அண்மையில் ஊடகங்களின்ஊடாக அறியக் கூடியதாகவிருந்தது.

இவ்வாறான அபகரிப்புச் செயற்பாட்டின் மூலம் முல்லைத்தீவு மாவட்டத்திலிள்ள தமிழ் மக்களின் இருப்பை அழிக்கப்போகின்றார்களா? - என்றார்

# மாந்தை கிழக்கு, துணுக்காய் பிரதேசங்களில் புதிதாக 23,803ஏக்கர் காணிகளை வனவளத் திணைக்களம் அபகரிக்க முயற்சி

டிசம்பர் 06, 2021

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஏற்கனவே 32,110 ஏக்கர் காணிகளை வனவளத்திணைக்களம் அபகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படும் நிலையில், முல்லைத்தீவு மாவட்ட வனவளத்திணைக்கள அதிகாரி எஸ்.ஜி.சுனில் ரஞ்சித், காடு பேணல் சட்டத்தின்கீழ் முல்லைத்தீவு மாவட்டத்தில் துணக்காய் மற்றும், மாந்தை கிழக்கு பிரதேசங்களில் தம்மால் புதிதாக ஒதுக்கக் காடுகளாக 23,803 ஏக்கர் காணிகள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும், எனவே அவ்வாறு ஒதுக்கக் காடுகளாக அடையாளம் கணப்பட்டுள்ள குறித்த காணிகளை தமக்கு விடுவித்துத் தரவேண்டுமென, முல்லைத்தீவு மாவட்டசெயலர் கதிர்காமுத்தம்பி விமலநாதனை எழுத்துமூலம் கோரியுள்ளதாகவும் தெரிய வருவதாக முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

எனவே வனவளத் திணைக்களத்தின் தொடர்ச்சியான இந்த அபகரிப்பு முயற்சிக்கு அவர் தனது வன்மையான கண்டனங்களைத் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், யுத்தம் மௌனிக்கப்பட்டதன் பின்னர், முல்லைத்தீவு மாவட்டத்தில் பல திணைக்களங்களின் மூலமாக தமிழ் மக்களுடைய நிலப்பரப்புகள் அபகரிக்கப்படுகின்றன.

இந் நிலையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் மேலும் 23 ஆயிரத்து 803ஏக்கர் காணிகளை வனவளத் திணைக்களம் அபகரிக்க முயற்சி மேற்கொண்டுள்ளது.

குறிப்பாக மாந்தை கிழக்கு பிரதேச செயலகப் பிரிவில், சிராட்டி குளம் பகுதியில் 15 ஆயிரத்து, 688 ஏக்கர் காணியும், நட்டாங்கண்டல் பகுதியில் 678 ஏக்கர் காணிகளையும் வனவளத் திணைக்களம் அபகரிக்க முயற்சிகளை மேற்கொள்வதாகத் தெரிகின்றது.

அதேவேளை துணுக்காய் பிரதேசசெயலகப்பிரிவிற்குட்பட்ட அமைதிபுரம் என்னும் பகுதியில் 2431 ஏக்கர் காணியும், துணக்காய் பிரதேசசெயலகப்பிரிலுள்ள ஏனைய பகுதிகளிலிருந்து 5006 ஏக்கர் காணியும் வனவளத்திணைக்களம் அபகரிக்கவுள்ளதாக தெரிகின்றது.

இவ்வாறாக முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து மேலும் 23,803 ஏக்கர் காணிகளை வனவளத் திணைக்களத்தினர் அபகரிக்கும் நோக்குடன் தமது செயற்பாடுகளை முன்னெடுத்துவருகின்றனர்.

குறிப்பாக யுத்தம் மௌனிக்கப்பட்ட பின்னர் முல்லைத்தீவு மாவட்டத்திலே வனவளத்திணைக்களம், வனஜீவராசிகள் திணைக்களம், மகாவலி (எல்), தொல்லியல் திணைக்களம், படையினர், இல்மனைற் தொழிற்சாலை அமைப்பதற்காக கொக்கிளாயில் அபகரிக்கப்பட்டுள்ள காணிகள், கொக்கிளாய் முகத்துவாரம் பகுதியில் எமது தமிழ் மக்களின் காணிகளை பெரும்பான்மை இனத்தவர்கள் அபகரித்துள்ளமை, பௌத்தபிக்குகள் தொல்லியல் திணைக்களத்தோடு இணைந்து அபகரித்துள்ள காணிகள், வெலி ஓயா என்னும பிரதேசசெயலகப்பிரிவு உருவாக்கப்பட்டு அதனூடாக அபகரிக்கப்பட்டுள்ள காணிகள் என, முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒரு இலட்சம் ஏக்கருக்கு மேல் அபகரிக்கப்பட்டுள்ளன.

இந் நிலையில் புதிதாக 23,803 ஏக்கர் காணிகளை வனவளத திணைக்களத்தினர் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவருவதற்கு முனைப்புக்காட்டிவருகின்றனர்.

இந்தக் காணிகள் யாவும் ஏற்கனவே எமது தமிழ் மக்களுடைய குடியிருப்புக் காணிகளாகவும், எமது மக்களுக்கு வழங்கப்பட்ட விவசாயக்காணிகளாகவும் தான் இருந்தன.

அதேவேளை முதலாவது வடமாகாணசபை இருந்தகாலத்தில், நான் வடமாகாணசபையினுடைய உறுப்பினராக இருந்தபோது, முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற, மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் ஒன்றில் வனவளத் திணைக்களத்தினர் கருத்துத் தெரிவிக்கும்போது, யுத்தம் மௌனிக்கப்பட்ட பின்னர் தாம் முல்லைத்தீவு மாவட்டத்திற்கு வந்தவுடன் 2010ஆம் ஆண்டு காலப்பகுதியிலே 15,000ஏக்கருக்கும்மேல் தமது எல்லைக்கல் நாட்டப்பட்டுள்ளதாகத் தெரிவித்தனர்.

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள எமது தமிழ்மக்கள் கடந்த கால யுத்தம் காரணமாக பல்வேறு இன்னல்களுக்கு மத்தியில் தமது இடங்களிலிருந்து, இடம்பெயர்ந்தனர். முல்லைத்தீவு மாவட்டத்தின் பல பகுதிகளைச் சேர்ந்த மக்கள் சிறீலங்காப் படையினரால் வலுக்கட்டாயமாக அவர்களுடைய பூர்வீக இருப்பிடங்களிலிருந்து வெளியேற்றப்பட்டுமிருந்தனர்.

இவ்வாறாக தமது வாழிடங்களிலிருந்து இடம்பெயர்ந்த மற்றும், படையினரால் வெளியேற்றப்பட்ட எமது தமிழ் மக்கள் பல வருடங்களின் பின்னரே அவர்களது சொந்த இடங்களில் மீள்குடியமர்த்தப்பட்டனர்.

இப்படியாக இருக்கும்போது, எமது தமிழ் மக்கள் தமது வாழிடங்களிலிருந்து இடம்பெயர்வதற்கு முன்னர் பயன்படுத்திய காணிகள் தற்போது சிறிய பற்றைகள், புதர்கள் வளர்ந்த இடங்களாக காட்சி தருகின்றன. அவ்வாறான இடங்களைக் கூட விட்டுவைக்காது வனவளத்திணைக்களத்தினர் அபகரிப்புச் செய்கின்றனர்.

இவர்களின் இந்தப் போக்கு மாற வேண்டும். நிச்சயமாக எமது முல்லைத்தீவு மாவட்டத்திலே வனவளத் திணைக்களம் யுத்தகாலத்திற்கு பின்பு ஏற்கனவே 32ஆயிரத்து 110 காணிகளை அபகரித்துள்ளதாகவும் அறியமுடிகின்றது.

மேலும் இந்த 23,803ஏக்கர் காணிகளை இவ்வாறு அபகரிப்பதற்கு முனைந்தால், எமது தமிழ் மக்கள் தமது வாழ்வாதாரத்திற்கு எங்குசெல்வது? எமது தமிழ் மக்கள் குடியிருப்புக் காணிகள்கூட இல்லாமல் அவதிப்படுவதை யாரிடம் சொல்வது? இப்படியானதொரு கொடூரமான செயற்பாட்டினை இந்த அரசாங்கம் திணைக்களங்கள் ஊடாக முன்னெடுத்துள்ளனர். எனவே இந்த அபகரிப்புச் செயற்பாட்டிற்கு எனது வன்மையான கண்டனங்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்- என்றார்.

16.12.2005 படுகொலை



## பாலியல் வன்கொடுமை

இளையதம்பி தர்சினி – படையினர் பாலியல் வன்கொடுமைக்கு உட்படுத்திப் படுகொலை இளையதம்பி தர்சினியை 2005, டிசம்பர் 16 ஆம் நாள் இலங்கை இராணுவம் பாலியல் வன்கொடுமைக்கு உட்படுத்திப் படுகொலை செய்தது. புங்குடுதீவில் நிலைகொண்டிருந்த கடற்படையினர் 16.12.2005 அன்று தர்சினியை கடத்திச் சென்று பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தினர். பின்னர் அவரைக் கொலை செய்து முகாமுக்கு அருகிலிருந்த பாழடைந்த கிணறொன்றினுள் வீசினர். கொல்லப்படுவதன் முன், அவர் பலரால் பாலியல் பலாத்காரத்திற்கு உட்படுத்தப்பட்டு இருப்பதற்கான தடயங்களையும், உடலின் பல இடங்களில் நகக்கீறல்கள், பற்கடிகளும் காணப்பட்டிருந்ததுடன், அவரது ஒரு மார்பு மிக மோசமாகச் சிதைக்கப்பட்டிருந்ததாகவும் வைத்தியசாலைச் சான்றிதழ் உறுதிப்படுத்தியது. ஆயினும் வழமைபோல் படையினர் எவரும் தண்டனை பெறவில்லை.



இளையதம்பி தர்சினி
(1985 - 16.12.2005)
புங்குடுதீவு)



கடன் அட்டைத் தொல்லைகளிலிருந்து விடுதலை

NEW LIFE FRESH START

வங்கிக் கடன்களில் 80% வரையிலான கழிவு

Reduce your debts upto 80%

கடன் அட்டை, வங்கிக் கடன்களுக்கு விதிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுத்தப்படும்
Stop all interest on your debts

கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைபேசி அழைப்புகள், சம்பளப் பறிமுதல் போன்ற சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
Stop collection calls, Court action & Wage garnishments

உங்கள் சொத்துகள், முதலீடுகள் பாதுகாக்கப்படும்
Proted all your assets (House, Car, RRSP, RESP, TFSA, GIC)

மாதாந்த ரீதியில் ஒயே கட்டுப்பணத்தில் எல்லாக் கடனையும் தீர்க்க வசதி செய்தல்
Make one monthly payment to all of your creditors

வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வுகாண ஏற்பாடு செய்யப்படும்
Give you solutions with out Bankruptcy



Suren Sornalingam
Certified Insolvency Counsellor

DSC DEBT SOLUTION CANADA
55 Town Centre Court, Suite 700,
Scarborough, ON. M1P 4X4

Tel: 647-274-2832
Fax: 647-797-1991
www.debtsolutioncanada.ca

# தமிழீழத் தேசியக் கொடி





தலைவர் மேதகு வே. பிரபாகரன் மற்றும் ஓவியாருமான திரு. நடராஜன் அவர்களும்

***தேசிய சுதந்திரத்தை வேண்டிநிற்கும் ஒரு மக்கள் சமுதாயத்திற்கு ஒரு தேசியக்கொடி இன்றியமையாதது. தேசிய தனித்துவத்தையும், ஒருமைப்பாட்டையும், இறைமையையும் ஒரு தேசியக்கொடி சித்தரித்துக்காட்டுகிறது. தேசாபிமானத்தின் சின்னமாகவும் அது திகழ்கிறது. அரசியல் சுதந்திரத்தின் ஆணிவேரான குறியீடாகவும் தேசியக்கொடி அமைகிறது.***

***தேசிய விடுதலையை இலட்சியமாகக்கொண்டு போராடி வரும் தமிழீழ மக்களுக்கு ஒரு தேசியக்கொடி உண்டு. இரண்டாவது மாவீரர் நாளன்று (27.11.1990) புலிக்கொடி தமிழீழத்தின் தேசியக்கொடியாகப் பிரகடனப்படுத்தப்படிருக்கிறது.***

***எமது தேசியக் கொடியை சித்தரித்துநிற்கும் புலிச்சின்னம் எப்படித் தோற்றம் கொண்டது? யாரால் தோற்றுவிக்கப் பட்டது? இந்த குறியீட்டின் அர்த்த பரிமாணங்கள் என்ன? என்பதை பிரகடனப்படுத்துகின்றோம்.***



சரியாகப் 49 ஆண்டுகளுக்கு முன்னர், 1972ம் ஆண்டு எமது தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் தமிழீழ சுதந்திர இயக்கத்திற்கு அத்திவாரமிட்டார். அன்று அவர் ஆரம்பித்த ஆயுத எதிர்ப்பு இயக்கத்திற்கு ***தமிழ்ப் புதிய புலிகள்*** எனப் பெயரிட்டார். பின்னா 1976ம் ஆண்டில் தமிழ்ப்புதிய புலிகள் என்ற எமது அமைப்பு ***தமிழீழ விடுதலைப் புலிகள்*** எனத் தலைவரால் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. அன்றிலிருந்து தமிழீழ தேசத்தின் தனித்துவத்தையும், தமிழீழ விடுதலை இலட்சியத்தையும் சித்தரிக்கும் சின்னமாக புலிச்சின்னம் விளங்கியது.

புலிச் சின்னத்தை தமிழீழத்தின் தேசிய சின்னமாக மேதகு வே. பிரபாகரன் அவர்கள் தேர்ந்தெடுத்ததற்கு காரணமுண்டு. புலிச் சின்னம் தமிழ் நாகரீகத்தில் வேரூன்றி நிற்கும் ஒரு படிமம். தமிழரின் வீர வரலாற்றையும் சித்தரித்துக்காட்டும் குறியீடு. வலிமையையும், வீரத்தையும், தன்னம்பிக்கையையும் குறித்துக்காட்டும் சின்னம். அன்று வீரவரலாறு படைத்த சோழ மன்னர்களும் புலிக்கொடியின் கீழ் தமிழனை எழுச்சிகொள்ளச் செய்தனர். தமிழுணர்வை, இன உணர்வை, தேசியப்பற்றுணர்வை, பகைவனுக்கு அஞ்சாத வீரவுணர்வை, பிரதிபலிக்கும் ஆழமான, அற்புதமான குறியீடாகத்திகழ்கிறது புலிச் சின்னம்.

ஐந்நூறு ஆண்டகாலத்திற்கு மேலாக அந்நியர்களாலும், அயல் நாட்டுச் சிங்களவர்களாலும் அடிமைப்பட்டுக் கிடந்த ஈழத் தமிழினத்தை ஆயுதப் போராட்டப் பாதையில் வழி நடாத்த முன்வந்து எமது தலைவன் அன்று புலியை தேசிய விடுதலை இயக்கச் சின்னமாகத் தேர்ந்தெடுத்தது மிகவும் மதிநுட்பம் வாய்ந்த ஒரு முடிவு. வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிகழ்வு.

புலிச்சின்னம் தேசிய சின்னமாக மக்களின் உணர்வுகளில் ஆழமாகப் பதிந்தது. செத்துப் போய்க் கிடந்த தமிழ்த் தேசிய ஆன்மா புத்துயிர் பெற்றது. இன்று எமது தேசியக் கொடியாகிய புலிக்கொடியின் கீழ் தமிழீழ தேசிய இனம் ஒன்று பட்டு நிற்கிறது. எழுச்சி கொண்டு நிற்கிறது.

எமது தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் தாம் உருவாக்கிய விடுதலை இயக்கத்திற்கு புலிகள் என்ற பெயரை தேர்ந்தெடுத்ததற்கு இன்னுமொரு காரணம் உண்டு.

நீண்ட கால அடிமைத் தனத்தில் ஊறிப்போன ஒரு சிறிய தேசிய இனம் ஒரு பெரிய தேசிய இனத்தின் நவீனமான, பலம் மிக்க ஆயுதப் படைகளை எதிர்த்துப் போராடுவது எப்படி? இராணுவ பலம் மிக்க ஒரு அரசுக்கு எதிராக ஆயுதப்போராட்டத்தை வெற் றிப்பாதையில் முன்னெடுத்துச் செல்வதாயின் சிறப்பான, விசேட மான போர்க் குணங்களைக் கொண்ட ஒரு விடுதலைப் படை உருவாக்கப்பட வேண்டும். அபாரமான துணிவும், சாவுக்கும் அஞ்சாத வீரமும், விடுதலை வேட்கையும் கொண்ட வீரர்களை உருவாக்க வெண்டும். புலிபோல வேகந்துடனும், மூர்க்கத் துடனும் போராடும் தலைசிறந்த வீரர்களை உருவாக்க வேண் டும். இந்த நோக்கில் தான் புலிப்படையை கட்டி எழுப்பினர் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள். தலைவர் பிரபா கரனின் புலிப்படை இன்று உலகின் தலைசிறந்த விடுதலை இராணுவமாக போற்றப்படுகிறது.

இன்று எமது தேசியக் கொடியில் பொறிக்கப்பட்டிருக்கும் புலிச் சின்னத்தின் உருவப் படம் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களின் கருத்திற்கு அமையவே வரையப்பட்டது. தலைவர் பிரபாகரனின் நண்பரும் மதுரையைச் சேர்ந்த பிரபல ஓவியருமான நடராஜன் என்பவர் 1977ம் ஆண்டு பலிச் சின்னத்தின் உருவப்படத்தை வரைந்தார். தலைவர் பிரபாகரன் அவர்களின் யோசனைக்கு அமைய பல தடவைகள் வரைந்து, இறுதியில் எமது தலைவரின் எண்ணப்படம் புலிச்சின்னமாக உருவகம் பெற்றது. இந்தப் புலிச்சின்னம் இன்று எமது தேசியக் கொடியை அலங்கரிக்கிறது. சுதந்திரத் தமிழீழத்தின் தேசியக் கொடியாகவும் ஒரு நாள் உயர்த்தப்பட்ட விருக்கும் இக்கொடியில் சித்தரிக்கப்பட்டுள்ள குறியீடுகளின் அர்த்தங்களை இனிப்பார்ப் போம்.

எமது தேசியக் கொடியை நான்கு நிறங்கள் அலங்கரிக்கின்றன. மஞ்சள், சிவப்பு, கறுப்பு, வெள்ளை ஆகிய நிறங்கள்.

தமிழீழ மக்களுக்கு ஒரு தாயகம் உண்டு. அந்தத் தாயகம் அவர்களது சொத்துரிமை, தமிழீழ மக்கள் ஒரு தனித்துவமான தேசிய இனம் என்பதால் அவர்களுக்கு தன்னாட்சி (சுய நிர்ணய) உரிமை உண்டு. இந்த தன்னாட்சி உரிமை அவர்களது அடிப் படை அரசியல் உரிமை, தமது தயாகத்தை மீட்டெடுத்து, தன் னாட்சி உரிமையை நிலை நாட்டுவதற்காக தமிழீழ மக்கள் மேற்கொண்டுள்ள தேசிய விடுதலைப் போராட்டம் அறத்தின் பாற்பட்டது, மனித தர்மத்தை அடிப்டிடையாகக் கொண்டது என்பதை மஞ்சள் நிறம் சுட்டி நிற்கிறது.

தேசிய சுதந்திரம் பெற்று தமிழீழ தனியரசை அமைத்து விட்டாற் போல நாம் முழுமையாக விடுதலைபெற்றதாகக் கொள்ள முடியாது. தமிழீழ சமுதாயத்திலுள்ள ஏற்றத் தாழ்வுகள் ஒழிக்கப்பட வேண்டும். வர்க்க, சாதிய முரண்பாடுகள் அகற்றப்பட வேண்டும். பெண் அடிமைத்தனம் நீக்கப்பட வேண்டும். இதற்கு சமுதாய அமைப்பில் புரட்சிகரமான மாற்றங்களை கொண்டு வரவேண்டும். சமத்துவமும், சம தர்மமும், சமூக நீதியும் நிலை நாட்டப்படவேண்டும். இப்படியான புரட்சிகரமான சமுதாய மாற்றத்தை வேண்டி எமது அரசியல் இலட்சியத்தை சிவப்பு நிறம் குறியீடு செய்கிறது.

விடுதலைப்பாதை கரடுமுரடானது, சாவும் அழிவும், தாங்கொணாத் துன்பங்களும் நிறைந்தது. இத்தனையையும் தாங்கிக் கொள்ள இரும்பு போனற் இதயம் வேண்டும், அசைக்க முடியாத நம்பிக்கை வேண்டும். என்றும் தளராத உறுதி வேண்டும். கறுப்பு நிறம் மக்களின் மன உறுதியை குறித்துக் காட்டுகிறது.

தமிழீழத் தேசியக்கொடி பயன்பாட்டுக்கோவையில் குறிப்பிட்டவாறு விடுதலை அமைப்பும் மக்களும் தலைவர்களும் தூய்மையையும் நேர்மையையும் கடைப்பிடிக்க வேண்டுமென்பதை வெள்ளை நிறம் குறித்து நிற்கின்றது.

தேசியக் கொடியின் மையத்தில் புலிச் சின்னம் அமையப் பெற்றிருக்கிறது. ஆவேசத்துடன் பாயும் புலியை குறிப்பதாக புலியின் தலையும், முன்னங்கால்களும் சித்தரிக்கப்பட்டுள்ளது. புலிச் சின்னத்தின் அர்த்தம் பற்றி மேலே விளக்கியிருந்தோம். தமிழீத் தேசாபிமான எழுச்சியை மட்டுமன்றி வலிமையையும், வீராவேசத்தையும் புலிச் சின்னம் குறித்து நிற்கிறது. பாயும் புலியை ஒத்த எமது வீரவிடுதலைப்போரையும் அது சித்தரிக்கிறது. புலித்தலையை சுற்றி வட்டமாக ரவைகளும், இரு புறத்திலும் சுத்திமுனையுடைய துப்பாக்கிகளும் எமது ஆயுதம் தரித்த விடுதலைப் போராட்டத்தை குறியீடு செய்கின்றன.

ஒட்டு மொத்தத்தில், எமது தேசியக் கொடி, சுதந்திரத்தையும் சம தர்மத்தையும் வேண்டி நாம் நடாத்தும் வீரவிடுதலைப் போரை அற்புதமாகச் சித்தரிக்கிறது. தமிழரின் வீர மரபில் வேரூன்றி நின்று பிறப்பிக்கப்போகும் தமிழீழத் தனியரசின் குறியீட்டு வடிவமாகவும் எமது தேசியக்கொடி திகழ்கிறது.

மாசி — பங்குனி 1991, விடுதலைப்புலிகள்

# புலிக்கொடி வரைந்த தமிழ்நாட்டு ஓவியர் நடராஜன் தமிழீழ விடுதலைப் புலிகளின் கொடி உருவான வரலாற்றில் தமிழ்நாட்டு ஓவியருக்கும் முக்கியப் பங்கு இருக்கிறது.



புலிக்கொடி வரைந்த தமிழ்நாட்டு ஓவியர் நடராஜன் தமிழீழ விடுதலைப் புலிகளின் கொடி உருவான வரலாற்றில் தமிழ்நாட்டு ஓவியருக்கும் முக்கியப் பங்கு இருக்கிறது.

சிவகாசியில் ஓவியராக ஆக இருந்தவர் திரு. நடராஜன். அவருக்குச் சொந்த ஊர் விருதுநகர் அருகே மல்லாங்கிணறு. 1977-ல் எல்டிடி, தலைவர் வே. பிரபாகரன் திறமையான சைத்ரிகர் நடராஜனைச் சிவகாசியில் சந்தித்து புலிக்கொடி உருவாக்க எண்ணக்கருவைக் கலந்துபேசி உருவானதுதான் புலிக் கொடி. பின்னாளில் பார்மசிஸ்ட் ஆக மதுரை அரசாங்க மருத்துவமனையில் வேலைபார்த்தார் என்று பழ. நெடுமாறன் கூறியுள்ளார்.

சிந்து சமவெளி நாகரிகம் திராவிடர்கள் தலைமை யேற்ற நாகரிகம் என்ப. அதில் கொற்றவையின் சின்ன மாகப்புலி இருக்கிறது. சிங்கம் சிந்து சமவெளியின் கலைகளில் 10,000 சதுர மைல் பரப்பில் கலைப் படைப்புகளில் கிடையாது. அண்டை நாடுகளில் (பாக்ட்ரியா, மெசொபொடோமியா) சிங்கம் கலையில் உன்னத இடம் பெற்றதால் சிந்து சமவெளியில் பாரதத்தின் சிறப்பு விலங்கான புலி தெரிவு செய்து சிங்கம் விலக்கப்பட்டிருக்கிறது [1]. தமிழ் இலக்கியத்தை எடுப்போம். சிலப்பதிகாரத்தில் இமய மலையில் கரிகால் சோழன் புலிக்கொடியை நாட்டினான் என்ற குறிப்பு இருக்கிறது. இராஜராஜன், இராஜேந்திர சோழன் ஆட்சிக்காலத்தில் புலிக்கொடி இலங்கையில் பறந்திருக் கிறது. இதனால் சிங்களர் தமிழரைக் 'கொட்டியா' (புலி) என்று அழைக்கும் வழக்கம் உண்டு.

1972-ம் ஆண்டு தமிழரசுக்கட்சியாளர் இராஜரத்தினம் பிரபாகரனுக்கு தமிழ் வரலாற்றில் சோழர்களின் புலியின் முக்கியத்துவத்தைப் போதித்தார். “இதே வேளை தமிழ் நாட்டில் தங்கியிருந்த தமிழரசுக்கட்சியைச் சார்ந்த இராஜரட்ணம் என்பவரின் தொடர்பு பிரபாகரனுக்கு ஏற்படுகிறது. குடியரசு தின எதிர்ப்புப் போராட்டங்களின் போதான வன்முறை நிகழ்வுகளில் தேடப்பட்டவர்களுள் இராஜரட்ணமும் ஒருவர். அவர் தான் பிரபாகரனுக்கு கரிகால் சோழன், புலிக் கொடி போன்ற சரித்திர நிகழ்வுகளைப் போதிக்கிறார். அவர் தான் இந்த அடிப்படைகளிலிருந்து தமிழ் புதிய புலிகள் என்ற பெயரை முன் வைத்து அமைப்பொன்றை உரு வாக்க வேண்டும் என்றும் ஆலோசனை வழங்குகிறார். பிரபாகரன் இந்த ஆலோசனைகளால் ஆட்கொள்ளப்படுகிறார்.” (ஐயர்). 1976-ல் பிரபாகரன் தமிழ்ப் புதிய புலிகள் என்ற பெயரைத் தமிழீழ விடுதலைப் புலிகள் என்று மாற்றுகிறார்.

ஓவியர் நடராஜன் சி. என். இராமகிருஷ்ணனுக்கு அளித்த பேட்டி, நக்கீரன், 2009: “எனக்குத் தெரிந்த மாறன் என்ற இலங்கை மாணவர் இரண்டு யாழ்ப்பாண இளைஞர்களை அழைத்து வந்தார். அவர்களின் பெயர்கூட எனக்குத் தெரியாது. பேச்சுவாக்கில் மாறன் ஒருவரை “தம்பி” என்றும், மற்றொருவரை “பேபி” என்றும் அழைத்தார். ஆனால் பேபியோ, தம்பியை மணி என்றே கூப்பிட்டார்.




இவர்கள் யாராக இருந்தால் என்ன? இவர்களின் உண்மையான பெயர் என்னவாக இருக்கும் என்பதிலெல்லாம் நான் ஆர்வம் காட்டவில்லை. ஆனாலும் இலங்கைத் தமிழர்கள் மீதான பற்றால், “உங்களுக்கு நான் என்ன செய்ய வேண்டும்” என்று கேட்டேன். அதற்கு அந்தத் தம்பி



“நாங்கள் ஒரு இயக்கம் ஆரம்பித்திருக்கிறோம். அதற்கு “தமிழீழ விடுதலைப் புலிகள்” என்று பெயர்கூட வைத்து விட்டோம். இந்த இயக்கமானது சிங்கள இனவெறி அரசுக்கும், அதன் அடக்குமுறைக்கும் எதிரானது. பண்டைய காலத்தில் தமிழன்தான் இலங்கையை ஆண்டான் என்பதற்குச் சான்றுகள் இருக்கிறது. அந்த சோழமன்னன் புலிக்கொடி பறக்க இலங்கையில் ஆட்சி நடத்தியிருக்கிறான். அதனால் எங்கள் இயக்கத்தின் சின்னத்திலும் புலி இடம்பெற வேண்டும் என்று விரும்புகிறோம். சிவகாசி பட்டாசு லேபிள்களில் வரையப்பட்டிருந்த புலிப்படங்கள் சிலவற்றைப் பார்த்தோம். எங்களுக்குப் பிடிக்கவில்லை. புலி என்றால் சீறவேண்டும். புலியின் முகத்தில் சீற்றம் பூரணமாக வெளிப்பட வேண்டும். இப்படி ஒரு படத்துக்காக பல இடங்களில் பல நாட்கள் அலைந்துவிட்டோம். எதுவும் மனநிறைவாக இல்லை. பிறகுதான் உங்களைப் பற்றி கேள்விப்பட்டு இங்கு வந்திருக்கிறோம”என்றார்.

அவர்களின் எண்ணத்துக்கேற்ப நான் வரைந்து கொடுத்த படத்தில் சீற்றம் கொண்ட புலியின் முகம் எதிர்பார்த்தபடியே அமைந்துவிட்டது. அவர்களுக்கும் திருப்தியாக இருந்தது. அப்போது நான், “வளையத்தைத் தாண்டி வெளியே வருவதுபோல் புலிகளின் நகங்கள் விரிந்த கால்கள் இருந்தால் நன்றாக இருக்குமே” என்று எனது அபிப்பிராயத்தைச் சொன்னேன். உடனே தம்பி “அப்படியே வரையுங்கள் அண்ணா” என்றார் ஆர்வத்தோடு. பிறகுதான் வளைவை மூன்றாகப் பிரித்து ஒவ்வொன்றிலும் 11 தோட்டாக்கள் என 33 தோட்டாக்களை வரைந்தேன். அவர்களின் விருப்பப்படியே நுனியில் குத்துக்கத்தி உள்ள இரண்டு துப்பாக்கிகள் ஒன்றுக் கொன்று குறுக்காக வளைவின் பின்புறம் இருக்கும்படி வரைந்தேன். இப்படித் தான் அந்த இயக்கத்துக்குப் புலிச்சின்னம் உருவாயிற்று.

இந்தச் சின்னத்துக்கு பிளாக் எடுத்துத்தரும்படி என்னிடம் கேட்டார் தம்பி. நானும் செய்து கொடுத்தேன். அந்த மூலப் படம் மற்றும் ஃபிலிம் நெகட்டிவ்கள் இப் போதும் என்னிடம் இருக்கின்றன. பிறகு புலிச்சின்னம் பொறித்த லெட்டர்பேட், அடையாள அட்டைகள் அச்சடித்துத் தரவேண்டுமென்றார். அதையும் நிறைவேற்றிக் கொடுத்தேன்.” விடுதலைப் புலிகளின் கொடி சின்னத்தில் புலி தலையை சுற்றி 33 குண்டு வைத்ததன் மூலம் 33 ஆண்டுகளில் ஈழம் மலர்ந்து விடும் என்பதாக நம்பிக்கை. நக்கீரன் பத்திரிகை வெளியிட்டுள்ள புத்தகம் கிடைத்தால் படித்துப் பாருங்கள்: ஓவியர் நடராசா, தம்பி, முதற்பதிப்பு: 2009.

# ஆழிப்பேரலை பேரனர்த்தம் ஏற்பட்டு இன்றுடன் 17 ஆண்டுகள் நிறைவடைகின்றன.

2004 டிசெம்பர் 26 ஆம் திகதி சுமத்ராதீவின் அருகே கடலில் ஏற்பட்ட 9.2 ரிக்டர் அளவிலான நில நடுக்கத்தால் ஆழிப்பேரலை உருவானது. இந்தப் பேரலை இலங்கை, இந்தியா, இந்தோனேஷியா, தாய்லாந்து, மியான்மர் என 14 நாடுகளின் கரையோரப் பகுதிகளை தாக்கியது.

தமிழீழத்தில் தமிழர் தாயகமான யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்கள் உட்பட இலங்கைத்தீவின் காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை மாவட்டங்கள் பேரலையால் தாக்கப்பட்டன. இதனால், 35 ஆயிரத்து 322 மக்கள் கொல்லப்பட்டனர். 5 இலட்சம் பேர் இடம்பெயர்ந்தனர். 90 ஆயிரம் பேர் வீடுகள், சொத்துக்களை இழந்தனர்.

பேரலை தாக்கிய நாடுகள் முழுவதிலுமாக 2 இலட்சத்து 29 ஆயிரத்து 866 பேர் உயிரிழந்தனர். ஒரு இலட்சத்து 25 ஆயிரம் பேர் காயமடைந்தனர். 43 ஆயிரத்து 786 பேர் காணாமல் போயினர்.





# சிறுவர் இல்லங்கள், ஒரு சில முதியோர் இல்லங்கள் Children's homes, a few nursing homes

இலங்கையில் யுத்தம் ஓய்ந்து ஒரு சாகாப்தகாலம் கடந்து விட்டது. ஆனாலும் வடக்கு, கிழக்கில் பல பராமரிப்பு இல்லங்கள் இன்னமும் இயங்கிவருகின்றன. இவை சிறுவர், மூத்தோர், சிறப்புத் தேவையுள்ளோர் இல்லங்கள் என வகைப்படும். இவை அனைத்தும் பொது மக்களின், பொது அமைப்புக்களின் நன்கொடைகளிலேயே தங்கியுள்ளன. தற்போதைய கோவிட்19 காலத்தில் நன்கொடைகள் குறைந்துள்ள இவ்வேளையில் எம்மாலான சிறு உதவிகளையேனும் இவ்வில்லங்களுக்கு வழங்கி இந்த இக்கட்டான காலத்தை கடக்க அனைவரும் உதவவேண்டுகின்றோம்

COVID 19 நோய்கள் பெரும் பரவல் காலம், உங்களை விட்டால் யாரும் இல்லை இவர்களுக்கு...!

“இந்தக் குழந்தைகள் யாருமற்றவர்களல்லர். தமிழன்னையின் புதல்வர்கள். வரலாற்றுப் பெருமை மிக்க சுதந்திரப் பெருமைமிக்க சுதந்திரப் போராட்ட சூழலில் இந்த இளம் விதைகளைப் பயிரிடுகின்றோம். இவை வேர்விட்டு வளர்ந்து விழுதுகள் பரப்பி விருட்சங்களாக மாறி ஒருகாலம் தமிழீழ தேசத்தின் சிந்தனைச் சோலையாகச் சிறப்புற வேண்டும் என்பதே எனது ஆவல்.“



**Amman Women & Child Development Center**
Sagamam Rd, Kolavil 01, Akkaraipattu - Amparai — 4 67 490 4955

**Hermans Girls Home**
Main St., Periyaneelavanai, Kalmurani - Amparai — 97 76 058 5344

**Jesus Lives Girls Home**
Main St., Kalmuanai - Amparai — 01 94 67 492 1161

**Methodist Girls Home**
Wesly School Rd, Kalmuanai - Amparai — 94 67 222 9182

**RKM Sharatha Girls Home**
Girls Vidyalaya Rd, Karaithivu Amparai — 05 94 67 222 3600

**Seephe Divi Child Delelopment Centre**
Kovil Rd, Veeramunai 01, Sammanthurai - Amparai — 94 67 226 1144

**Sri Indasara Child Development Centre**
DK/65, Aralaganvila Rd, Dehiattakandiya - Amparai — 94 27 562 2919

**St. Maryís Boys Home**
Yard Rd, Kalmunai - Amparai — 01 94 71 354 5782

**Swami Vipulanantha Boys Children Development Centre**
Kurukkal Rd, Akkaraipattu 7/2 - Amparai — 94 67 227 7514

**Canaan Harvest Childrenís Home**
No 320/8, Passara Rd, 3rd Lane - Badulla — 94 77 229 2022

**Up Country Children Home**
19/6, Badulupitiya Rd - Badulla — 94 55 222 3335

**Arutpani Girls Home**
Beach Rd, Navakkuda - Batticaloa — 94 77 6849

**Assisi Boys Home**
Main Rd, Kurukulmadam - Batticaloa — 94 65 225 0313

**Benthel Boys Children Home**
Zoneal Education Office Rd, Valaichenai - Batticaloa — 94 77 632 8577

**Benthel Girlís Children Home**
Zoneal Education Office Rd, Valaichenai - Batticaloa — 94 77 632 8577

**Bethel Girls Children Home**
Vipulanada Rd, Valichenai - Batticaloa — 94 77 515 3078

**Eravur Children Care Home**
Meerakerny Rd, Eravur - Batticaloa — 94 77 996 6345

**Good Shepherd Children Home**
Post Office Rd, Valaichenai - Batticaloa — 94 65 225 7400

**Hari Boys Home**
New Kalmuani Rd - Batticaloa — 94 65 222 3653

**Jeevananthan Girls Home**
Main Rd, Pudukuduirippu - Batticaloa — 94 65 365 0438

**Kattankudy Boys Home**
Kattankudy 01 - Batticaloa — 94 65 224 5308

**London Sivan Kovil Girls Home**
Main Rd, Settipalayam - Batticaloa — 94 65 205 6336

**Managayarkarasi Girls Home**
Maruthadi Rd - Batticaloa — 94 65 205 7310

**Manikkavasagar Boys Home**
Palaiyadithona, Santhiveli, Kiran - Batticaloa — 94 77 191 3037

**Methodist Girls Home**
Bar Rd, Kotamunai - Batticaloa — 94 65 222 5402

**Miyani Boys Home**
Miyani nagar, Thannamunai - Batticaloa — 94 77 459 0298

**Miyani Girls Home**
Miyani nagar, Thannamunai - Batticaloa — 94 77 792 6410

**Pariyowan Boys Home**
Trinco Rd, Santhurukondan - Batticaloa — 94 05 222 2524

**Ramakrishana Boys Home**
New Kalmunai Rd, Kalladi - Batticaloa — 94 65 222 2752

**Ramakrirushana Girls Home**
New Kalmunai Rd, Kalladi - Batticaloa — 94 65 222 2752

**Sakthi Girls Home**
Shakthi Home Rd, Kaluwanchikudy - Batticaloa — 94 65 225 0745

**Shakthi Girls Home**
Arasadi Thervu, Kokaticholai - Batticaloa — 94 65 364 2290

**Shanthi Bawan Girls Home**
Ghanasooriyam Sq., Cross Rd - Batticaloa — 94 65 222 2524

**Spaks Girls Home**
Main Rd, Periya Kallaru - Batticaloa — 94 67 222 1875

**Thilahawathiyar Girls.Children Home**
Main St., Kathiraveli, Vaharai - Batticaloa — 94 77 629 8461

**Thilahawathiyar Girls Home**
Batticaloa - Hospital Rd, Palukamam - Batticaloa — 94 65 225 1166

**Thiruniyanasampathar Gurukulam**
Main Rd, Kaluthavalai - Batticaloa — 94 65 225 0277

**Trust Village Womens Development Center**
Savukady Rd, Mayilampavelhi - Batticaloa — 94 76 789 7573

**Vidhyajothi Boys Home**
Central Rd - Batticaloa — 94 77 481 6576

**Vipulanantha Children Home**

Main Rd, Palukamam - Batticaloa 94 65 225 1101
**Vivehanada Children Home**
Rattnam Rd, Valaichenai - Batticaloa 94 65 205 1442
**Yoga Suwami Saiva Girls Children Home**
Main Rd, Siththandi - Batticaloa 94 65 205 0420
**St.Joseph Elders Home**
Trinco Rd- Batticaloa 94 71 851 1951
**Swami Vipulananthar Elder Home**
Government Quaters Rd, Kallady - Batticaloa 94 65 222 6202
**Ozanam Centre**
Sathurukondan - Batticaloa 94 65 365 8636
**Uthayam Association of Visually Handicapped**
Saratha St., Nochchimunai - Batticaloa 94 65 205 0707

**Elim Boys Child Development Center**
Memorial Lane, Manipay - Jaffna 94 77 742 3824
**Elim Girls Child Development Center**
Memorial Lane, Manipay - Jaffna 94 77 406 9962
**Forth Sq Girls Child Development Center**
No 35, Sellar Rd, Nallur - Jaffna 94 77 064 1109
**Hindu Board Boys Child Development Center**
Kalasalai Rd, Thirunelveli - Jaffna 94 77 990 5304
**Hindu Board Girls Child Development Center**
Kalasalai Rd, Thirunelveli - Jaffna 94 77 699 2082
**Holy Family Girls Child Development Center**
Mirusuvil South, Mirusuvil - Jaffna 94 77 908 1270
**Karunai Girls Child Development Center**
Palaly Rd, Urumpirai, East - Jaffna 94 77 255 4334
**Karunalayam Annai Krishnabai Girls C. D. C.**
No 131, Palaly Rd, Thirunelveli - Jaffna 94 77 905 4873
**Karunalayam Boys Children Development Center**
Karanthan, Neerveli - Jaffna 94 77 416 1002
**Salvation Army Girls Child Development Center**
Kandy Rd, Kaithady - Jaffna 94 77 976 5696
**SOS Village Child Development Center**
No 219, Nayanmarkaddu, Nallur - Jaffna 94 77 373 3711
**Sri Pramanatha Girls Child Development Center**
Vathiri, Karaveddy, Jaffna - Jaffna 94 76 578 3004
**Thurkkapuram Girl Child Development Center**
Thurkkapuram, Tellippalai - Jaffna 94 21 224 9894
**Valluvar Girlsí Child Development Center**
Vaddukoddai East, Vaddukoddai - Jaffna 94 77 525 9513
**Mother Teresa Elder Home Amithi Illam**
Kondavil - Jaffna 94 21 223 0302
**Sivapoomi Elders Home**
Tholpuram. Chulipuram - Jaffna 94 21 225 0085, 94 21 321 4230
**Sivapoomi School ForChildren with Special Needs**
Intellectuals Disability - Jaffna Kondavil - Jaffna 94 21 224 9894
**Vaalvagham-Home for the Vissually Handicapped**
Sabapathipillai Rd, Chunnakam-Jaffna 94 21 224 0146 , 94 76 828 6331

**Aruvucholai Boys Child Development Center**
Thiruvaiaru West, Thiruvaiaru - Kilinochchi 94 21 228 3313
**Aropanam Boys Child Development Center**
Uruththirapuram - Kilinochchi 94 21 228 5088
**Gandhi Nilaya Chidren Home & Training Centre** - Kilinochchi
D-8,Uruthirapuram 94 21 228 4310, 94 77 208 1947, 94 77 720 1461
**Holy Family Girls Child Development Center**
D-8,Uruthirapuram - Kilinochchi 94 76 685 3115
**Karuna Nilayam Girls Child Development Center**
A9 Rd, Kandy Rd - Kilinochchi 94 21 228 5836
**Mahadeva Saiva Boy Child Development Center**
Puthumurippu - Kilinochchi 94 21 492 3121
**Mahadeva Saiva Girls Child Development Center** (11-18 Yrs)
Jeyanthinagar - Kilinochchi 94 21 492 3119
**Mahadeva Saiva Girls Child Development Center (6-10 Yrs)**
Jeyanthinagar - Kilinochchi 94 21 492 3118
**Sencholai Boysí Child Development Center**
Thiruvaiaru, Kilinochchi 94 76 536 8308
**Sencholai Girlí Child Development Center**
Thiruvaiaru - Kilinochchi 94 71 535 4504
**Thangamma Elders Home** -Kilinochchi
Puthukkulam, Kanagarayankulam 024 4931455, 077 449 9619
**Trist Children Home**
Ramanathapuram - Kilinochchi 94 21 206 0694
**Yogar Swamigal Thiruvadi Nilaiyam Home**
Vannerikulam - Kilinochchi 94 76 709 9162
**Association. to Empowerthe Special Needs Children**
Emersion Rd , Karadipokku 94 77 509 4390, 94 77 375 3776
**Killinochchi Special Needs Newtwork**
Malayapuram, Karachi - Kilinochchi 94 77 831 7536

**Annai Girlsí Child Development Center**
Uppukulam - Mannar 94 23 222 2483
**Anpu Sakotharar Boys Child Development Center**
Keeri - Mannar 94 77 534 4427
**Sepamalai Mariyannai Irakathin Girlsí Child Development Center**
Pesalai - Mannar 94 23 205 0095
**Sivanarul Boys Child Development Center**
Thiruketheeswaram - Mannar 94 23 205 0805, 94 77 581 5998
**Sivanarul Girls Children Development Center**
Thiruketheeswaram - Mannar 94 23 2050 804
**Vetijin Nalnampikai Illam Good Faith Home of Victory**
No 43, Convent Rd, Pattah - Mannar 94 23 2222 545

**Saradha Mission Child Development Center**
Kirigalpotta - Matale 94 66 205 1721
**St. Francis Child Development Center**
Vihaara Rd - Matale 94 77 438 4851

**Anpu Boysí Child Development Center**
Muthu Vinayagar Puram, Oddusuddan 94 71 535 4502
**Barathy GirlChild Development Center**
Putharikuda, Mulliyavalai - Mullaitivu 94 77 201 5234
**Ladani Girls Child Development Center**
Silawaththai - Mullaitivu 94 77 422 8853
**Nallayan Girls Child Development Center**
Jaffna Rd, Mankulam - Mullaitivu 94 21 206 1034
**Pari Girlsí Child Development Center**
Mulliyavalai - Mullaitivu 94 21 206 1034
**Iniya Vazhvu Illam**
A Division , Thevipuram - Mullaitivu 94 21 206 1949

**Happy Home Child Development Center**
Wanigasekarapura, Kotagala - Nuwara Eliya 94 51 224 4174
**Maranatha Child Development Center**
Hatton - Nuwara Eliya 94 51 222 2489
**Rainbow Child Development Center**
Drayton Estate, Kotagala - Nuwara Eliya 94 77 532 1680
**Shalom Child Development Center**
Lackam Estate, Maskeliya - Nuwara Eliya 94 52 227 7222

**Annai Saratha Children Home**
Mallihaitheevu, Muthur - Trincomalee 94 26 205 4506
**Anpu Illam**
167, Central Rd - Trincomalee 94 26 222 1214
**Four Square**
707 Anpuvalipuram - Trincomalee 94 26 222 7170
**Grace Girls**
3rd Mile Post, Cholaiyadi, Uppuveli - Trincomalee 94 26 722 3644
**Hasanath Boys**
Kurinchakerny, Kinniya - Trincomalee 94 26 223 6135
**Hasanath Girls**
Kurinchakerny, Kinniya - Trincomalee 94 26 223 6135
**My Fatherís House Boys Children Homes**
46, Kandasamy Rd - Trincomalee 94 26 222 6861
**Rawlathul Athfal**
PMB Rice Mill, Muthur - Trincomalee 94 77 934 7438
**Rewathe Child Development Center**
5th Post, Kandy Rd - Trincomalee 94 26 224 2328
**Sivayogasamayam Swami Gangadaranatha Children Home**
64 Main St. - Trincomalee 94 26 222 2049
**Sri Sanmuga Boys** 294 inner Harbor Rd - Trincomalee 94 26 567 0234
**Sri Sanmuga Girls** 57, Viddyalaya Rd - Trincomalee 94 26 222 2521
**Thapovanam Boys**
Thirukadaloor - Trincomalee 94 26 222 1469
**Thapovanam Girls** Thirukadaloor - Trincomalee 94 26 222 1469
**Deva Anpu Children Home**
Thiththikulam, Murunkanoor - Vavuniya 94 24 4921 859
**Hindu Anpakam Children Home**
Mannar Rd, Veppankulam - Vavuniya 94 24 222 3683
**Salvatorian Girls Home**
Iluppaikulam, Neriyakulam, Cheddikulam - Vavuniya 94 24 324 4577
**Sri Ahilandeswary Children Home** Kovilkulam - Vavuniya 94 24 222 1685
**Mother Teresa Elder Home** Pampaimadu -Vavuniya 94 24 205 4494
**Sivan Elders Home**
Ellappar Marutham Kulam - Vavuniya 94 24 222 1685, 94 77 656 7827
**Thanagamma Eleders**
No. 1 Puthukulam Rd, Puthukula - Vavuniya 94 76 248 2766

# ஆழிப் பேரழிவின் பதிவுகள்

ஊருக்குள் கடல்புகும்... அதுவும் ஆழிப் பேரலையாக நுழைந்து உயிர்க்கொலைகள் புரியும் என்று எவரும் கற்பனை செய்திருக்க வில்லை. ஐம்பெரும் பூதங்களென நிலத்தை – நீரை – நெருப்பை – காற்றை – ஆகாயத்தை எம் முன்னோர்கள் உருவகப்படுத்தியதை நேற்று வரை நாங்கள் பெரிதுபடுத்தவில்லை. பூதம் என்று நாம் இதுவரை கருதியது இனவாதப் பூதத்தையும் தான்.

ஆனால் தனது அழிவுச்சக்தியை இயற்கை எம்மீது காட்டிவிட்டதே! 1, 500 கிலோ மீற்றர் தூரத்திற்கு அப்பால் நிலம் என்ற பூதம் நெளிந்து – அசைந்து – கரையில் சிறகுமுளைத்து – வாய் பிளந்து – எம்மக்களை விழுங்கிவிட்டதே.

சில நிமிட கடல் சீற்றம் தமிழீழத்தின் இருபதினாயிரம் வரையான மக்களை அழித்து விட்டது. எத்தனையோ குடும்பங்கள் முற்றாக அழிந்துவிட்டன. தாய் – தந்தையை இழந்த பிஞ்சுகள் ஏராளம். இன்னும் பல ஆண்டுகளுக்கு நிலைத்து நீடிக்கப்போகும் அந்தச் சோக நினைவுகளைச் சுமந்துநிற்கும் சில விபரங்களை இங்கே காணலாம்.

## இறப்புக்கள்

வடக்கு-கிழக்கு 17,024

தெற்கு-மேற்கு 10,403




## காயங்கள்

வடக்கு-கிழக்கு 7,198

தெற்கு-மேற்கு 7,794




## இடம்பெயர்ந்தவர்கள்

வடக்கு-கிழக்கு 344,803

தெற்கு-மேற்கு 219,662




## சேதமான பாடசாலைகள்

வடக்கு-கிழக்கு 128

தெற்கு-மேற்கு 48




## சேதமான வீடுகள்

வடக்கு-கிழக்கு 85279

தெற்கு-மேற்கு 35,757







### யாழ் மாவட்டம்

| | |
|---|---|
| இறப்புக்கள் | 1256 |
| காயங்கள் | 1647 |
| இடம்பெயர்ந்தவர்கள் | 41013 |
| சேதமான பாடசாலைகள் | 11 |
| சேதமான வீடுகள் | 7198 |
| சேதமான வைத்தியசாலைகள் | 03 |

### முல்லைத்தீவு மாவட்டம்

| | |
|---|---|
| இறப்புக்கள் | 2771 |
| காயங்கள் | 2590 |
| இடம்பெயர்ந்தவர்கள் | 21178 |
| சேதமான பாடசாலைகள் | 12 |
| சேதமான வீடுகள் | 4000 |
| சேதமான வைத்தியசாலைகள் | 02 |

### கிளிநொச்சி மாவட்டம்

| | |
|---|---|
| இறப்புக்கள் | 30 |
| காயங்கள் | 670 |
| இடம்பெயர்ந்தவர்கள் | 1603 |
| சேதமான பாடசாலைகள் | – |
| சேதமான வீடுகள் | 7500 |
| சேதமான வைத்தியசாலைகள் | 01 |

### திருமலை மாவட்டம்

| | |
|---|---|
| இறப்புக்கள் | 1076 |
| காயங்கள் | – |
| இடம்பெயர்ந்தவர்கள் | 69212 |
| சேதமான பாடசாலைகள் | 23 |
| சேதமான வீடுகள் | 16378 |
| சேதமான வைத்தியசாலைகள் | 09 |

### மட்டக்களப்பு மாவட்டம்

| | |
|---|---|
| இறப்புக்கள் | 2840 |
| காயங்கள் | 1575 |
| இடம்பெயர்ந்தவர்கள் | 61912 |
| சேதமான பாடசாலைகள் | 36 |
| சேதமான வீடுகள் | 21126 |
| சேதமான வைத்தியசாலைகள் | 08 |

### அம்பாறை மாவட்டம்

| | |
|---|---|
| இறப்புக்கள் | 9051 |
| காயங்கள் | 6771 |
| இடம்பெயர்ந்தவர்கள் | 137960 |
| சேதமான பாடசாலைகள் | 40 |
| சேதமான வீடுகள் | 29077 |
| சேதமான வைத்தியசாலைகள் | 29 |

### சுருக்கக் குறியீடுகள்

- இறப்புக்கள்
- காயங்கள்
- இடம்பெயர்ந்தவர்கள்
- சேதமான பாடசாலைகள்
- சேதமான வீடுகள்
- சேதமான வைத்தியசாலைகள்

25.12.2005 நினைவுநாள்



## மாமனிதர் ஜேசப் பரராசசிங்கம்

மாமனிதர் ஜேசப் பரராசசிங்கம் இலங்கை, மட்டக்களப்பு பகுதியை சார்ந்த தமிழ் தலைவர்களில் ஒருவரான இவர் டிசம்பர் 25 2005 அன்று படுகொலை செய்யப்பட்டார். மட்டக்களப்பு தேவாலயத்தில் நடந்த நத்தார் நள்ளிரவு திருப்பலிப் பூசையின் போது அரச ஆதரவுபெற்ற துப்பாக்கிதாரிகளால் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் பரராஜசிங்கம் சுட்டுக்கொல்லப்பட்டார். மட்டக்களப்பு மாவட்டத்தில் பத்திரிகையாளர் அமைப்பு ஒன்றை ஏற்படுத்துவதில் முன்னின்றுழைத்தவர் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் உருவாக்கத்திற்கு முன்னின்று உழைத்த தலைவர்களுள் ஒருவர். தமிழ்த் தேசிய விடுதலைக்காக அறவழியில் போராடிய அன்னாருக்கு தமிழீழத் தேசியத் தலைவரால் மாமனிதர் விருது வழங்கப்பட்டது.

















# ஆறு வழிகளில் உலகை மாற்ற முயற்சிக்கும் சிறு செயற்கைக்கோள்: அறிவியல் அற்புதம் – க்யூப்சாட்

24 நவம்பர் 2021



***அளவில் சிறிய, ஆனால், அதேசமயம் தொழில்நுட்ப ரீதியில் பலம் பொருந்தியவை க்யூப்சாட் (CubeSat). மிகச்சிறிய காலணி பெட்டி அளவிலான இத்தகைய க்யூப்சாட் வகை செயற்கைக்கோள்கள், மாணவர்களின் கல்வி சார்ந்த பயன்பாட்டுக்காக, பேராசிரியர் பாப் ட்விக்ஸ் என்பவரால் 1999 ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்டது.***

"இந்த வகை செயற்கைக்கோள்களின் உள்ளே அதிக பொருட்களை பொருத்த முடியாது என்பதுதான் மிகப்பெரிய சவால். இதனால், அதன் வடிவமைப்பில், பொருட்களை சேர்ப்பதை தவிர்க்கும் கட்டாயம் ஏற்பட்டது" எனக்கூறும் பாப் சிரிக்கிறார்.

வழக்கமான செயற்கைக்கோள்களைவிட இத்தகைய செயற்கைக்கோள்களை உருவாக்குதல் மற்றும் ஏவுதல் வேகமானது மற்றும் மலிவானது. தற்போது பல்கலைக்கழகங்கள், ஸ்டார்ட்-அப் நிறுவனங்கள், அரசுகள் உருவாக்கிய நூற்றுக்கணக்கிலான க்யூப்சாட்கள் பூமியைவலம் வந்துகொண்டிருக்கின்றன.

அப்படி, உலகை மாற்ற முயற்சிக்கும் ஆறு விதமான ஆச்சர்ய க்யூப்சாட் திட்டங்கள் குறித்துப் பார்ப்போம்.

**1. காடழிப்பைத் தடுக்க உதவும் க்யூப்சாட்**



**அமேசான்**

உலகளவில் காடழிப்பைத் தடுக்க, "பிளானட்" என்ற செயற்கைக்கோள் நிறுவனத்துடன் நார்வே அரசாங்கம் கூட்டு சேர்ந்துள்ளது.

அந்நிறுவனம் விண்ணில் ஏவியுள்ள 180 க்யூப்சாட்கள், பூமியை தொடர்ந்து புகைப்படமெடுக்கின்றன. அதில் பொருத்தப்பட்டுள்ள கேமராக்கள் ஒரு பிக்சலுக்கு 3எம் திறன் கொண்டவை. மேலும், அவை விண்ணிலிருந்து எடுக்கப்பட்ட புகைப்படங்கள் என்பதற்கான ஆதாரங்களையும் காண முடியும்.

"64 வெப்பமண்டல நாடுகளில் காடழிப்பைக் கண்காணிப்பதற்கான தரவுகளுக்காக நார்வே அரசாங்கம் பணம் செலுத்தியுள்ளது" என்கிறார், "பிளானட்" நிறுவனத்தின் தலைமைச் செயல் இயக்குநர் வில் மார்ஷல்.

"நாங்கள் அந்த நாடுகளின் வனத்துறை அமைச்சகங்களிடம், எந்தெந்த பகுதிகளில் காடழிப்பு நடைபெறுகிறது என்பதை தெரியப்படுத்துவோம். காடழிப்பை நிறுத்துவதற்கான ஒப்பந்தத்தை அந்நாடுகள் ஆதரிக்கிறதா என்பதைப் பொறுத்து, நார்வே அரசாங்கம், அந்நாடுகளுக்கு நிதி வழங்குவது குறித்து முடிவு செய்யும்".

2. **அழிந்து வரும் வனவிலங்குகளை கண்காணித்தல்**

யானை

கென்யா தேசிய பூங்காவில் பறவைகள்



மற்றும் பாலூட்டிகளை கண்காணிப்பதற்காக, இந்தாண்டின் தொடக்கத்தில் இத்தாலி மற்றும் கென்யாவைச் சேர்ந்த மாணவர்கள் குழு, "வைல்ட் டிராக் க்யூப் - சிம்பா" எனப்படும் க்யூப்சாட்டை ஏவியது.

"மனித - விலங்கு மோதல்கள் தொடர்ந்து நிகழ்கின்றன. உதாரணமாக, யானைகள் விவசாய நிலங்களில் நுழைந்து பயிர்களை சேதப்படுத்துகின்றன, சில சமயங்களில் மனிதர்களையும் கொன்று விடுகின்றன" என்கிறார், நைரோபியை சேர்ந்த மாணவ பொறியாளர் டானியல் கியாரி.

"எனவே, அவர்களுக்கு விலங்குகளின் நடமாட்டம் குறித்து முன்கூட்டியே தகவல் அளித்து உதவ நாங்கள் விரும்பினோம். இதன் மூலம், அந்த விலங்குகள் கிராமங்களில் நுழைவதற்கு முன்பே அவர்களால் தடுக்க முடியும்."

மேலும், அவர்கள் விலங்குகளுக்கு ரேடியோ டேக் பொருத்தவும் திட்டமிட்டுள்ளனர். இதன் மூலம், அவற்றின் இருப்பிடத்தையும் கடந்து, விலங்குகளின் நடமாட்டத்தைக் கண்டறிய முடியும் என அவர்கள் நம்புகின்றனர்.

"யானைகளை அவற்றின் தந்தங்களுக்காகவும், காண்டாமிருகங்களை அதன் கொம்புகளுக்காகவும் கென்யாவில் வேட்டையாடுவது பொதுவான பிரச்சனையாக உள்ளது," என்கிறார் டேனியல்.

"இந்த ரேடியோ டேக் மூலம் விலங்குகளின் இதயதுடிப்பை உணர்ந்து, ஒரு விலங்கு கொல்லப்பட்டதா என்பதையும் கண்டறிய முடியும் என கருதுகிறோம்."

க்யூப்சாட்கள் பொதுவாக, சுற்றுப்பாதையில் எவ்வளவு உயரத்தில் செலுத்தப்படுகின்றன என்பதைப் பொறுத்து, இரண்டு முதல் ஐந்து ஆண்டுகள் வரை இயங்கும், அதன்பின், வளிமண்டலத்தில் அவை எரிந்துவிடும்.

3. **நவீன அடிமைத்தனத்தை அம்பலப்படுத்தும்** க்யூப்சாட்



நாட்டிங்ஹாம் பல்கலைக்கழகத்தில் உள்ள "தி ரைட்ஸ்" ஆய்வகம், அடிமைத்தொழில்களின் ரகசிய உலகை ஆராய்வதற்கு செயற்கைக்கோள் படங்களைப் பயன்படுத்துகிறது.

கிரீஸ் நாட்டில், வங்கதேசத்தைச் சேர்ந்தவர்கள் பழங்களை பறிக்கும் அடிமைத்தொழில் செய்பவர்களாக உள்ளனர். அவர்களின் தற்காலிக முகாம்களை வரைபடத்தில் குறிக்க, இந்த ஆய்வகம் சமீபத்தில் க்யூப்சாட் படங்களைப் பயன்படுத்தியது.

"இந்த முறைசாரா குடியேற்றங்கள் காலப்போக்கில் எவ்வாறு மாறுகின்றன என்பதை நாம் பார்க்கலாம்" என்கிறார், இந்த ஆய்வை வழிநடத்தும் பேராசிரியர் டொரீன் பாய்ட்.

"இதன்மூலம், ஏற்கெனவே உள்ள குடியேற்றங்களை காலி செய்யும்போது, புதிதாக குடியேற்றம் எங்கு நிகழ்கிறது என்பதை கண்டறிய முடியும்."

இப்படி கண்டறியப்படும் முகாம்களை நேரடியாக பார்வையிட இந்த குழு, உள்ளூர் அரசு சாரா நிறுவனத்துடன் இணைந்து பணி புரிகிறது.

"முகாம்களில் உள்ள புலம்பெயர்ந்தோரிடம் அவர்கள் பேசுவார்கள். இதன்மூலம், அங்கு வாழ்வதற்கான சூழல் எப்படி உள்ளது என்பது குறித்த மேலதிக தகவல்களை அவர்களால் பெற முடியும்..." இந்தப் பகுதியில் எங்களுக்கு 50 முறைசாரா குடியேற்றங்கள் கிடைத்துள்ளன, எங்கள் உடனடி நடவடிக்கைக்கு நாங்கள் எப்படி முன்னுரிமை கொடுப்பது? "என அவர்களால் கூற முடிகிறது."

4. **விண்வெளி கழிவுகளை அகற்றுதல் எஸ்லா – டி செயற்கைக்கோள்**

எஸ்லா-டி செயற்கைக்கோள்



ரஷ்யா சமீபத்தில் தனது பழைய உளவு செயற்கைக்கோள் ஒன்றின் மீது ஏவுகணை சோதனை நடத்தியது சர்வதேச அரங்கில் பெரும் சீற்றத்தைக் கிளப்பியது. இதனால் தாழ் புவி வட்டப்பாதையில் ஆயிரக்கணக்கான விண்வெளி குப்பைகள் சுற்றி வருகின்றன.

செயலிழந்த செயற்கைக்கோள்கள் முதல் ராக்கெட்டுகள் வரை, பூமியை சுற்றிவரும்போது உருவான, கிட்டத்தட்ட 30,000 துண்டுகள் அடங்கிய விண்வெளி கழிவுகள் கண்காணிக்கப்படுகின்றன. எனினும், கண்காணிக்கப்பட முடியாத அளவுக்கு மிகச்சிறிய அளவிலான விண்வெளி கழிவுகள் உள்ளன. அவை அளவில் சிறிதாக இருந்தாலும், விண்கலத்தில் உள்ள செயற்கைக்கோள்கள் அல்லது விண்வெளி வீரர்களின் பாதுகாப்பை அச்சுறுத்தும் அளவுக்குப் பெரியவை.

விண்வெளியில் உள்ள குப்பைகளை அகற்றுவதில் நிறைய சிக்கல்கள் உள்ளன. குறிப்பாக, அவை எந்த நாடுகளைச் சேர்ந்தவை என்பதில் குழப்பம் நிலவுகிறது.

கியூப்சாட் மூலம் விண்வெளியில் வேகமாகச் செல்லும் ஒரு பொருளை எப்படிப் பிடிப்பது என்ற நடைமுறைச் சிக்கலைத் தீர்ப்பதில் விஞ்ஞானிகள் ஒரு படி நெருக்கமாக உள்ளனர். இதற்கான சோதனைகளில், விண்வெளி கழிவுகளை நகலெடுக்க க்யூப்சாட்களை விஞ்ஞானிகள் பயன்படுத்துகின்றனர்.

2018 ஆம் ஆண்டில், கழிவுகளை அகற்றும் ஐரோப்பிய "ரிமூவ் டெப்ரிஸ்" (Remove DEBRIS) எனும் செயற்கைக்கோள், தூண்டில் மற்றும் வலையைப் பயன்படுத்தி, இரண்டு கியூப்சாட்களை பிடிக்க முடிந்தது.

இந்தாண்டு ஆஸ்ட்ரோஸ்கேல் எனப்படும் ஜப்பானிய நிறுவனம், எல்சா-டி (ELSA-d) எனப்படும் விண்கலத்தை உருவாக்கியது. இது, காந்த அமைப்பைப் பயன்படுத்தி வெற்றிகரமாக க்யூப்சாட்டை கைப்பற்றியது. எதிர்காலச் சோதனைகளில், க்யூப்சாட்டை கைப்பற்றும் முயற்சிக்கு முன், அவற்றை வழக்கமான விண்வெளிக் கழிவுகளை போன்று தடுமாறச் செய்யும் வகையில் சோதனைகள் நடைபெறும்.

5. **காற்றாலைகளை சரிசெய்தல் காற்றாலை**

குறைந்த விலையில் பலவாறாக இயங்குவதற்கு, பல கியூப்சாட்கள் நம் தலைக்கு மேலே ஒன்றாகச் செயல்படுகின்றன. இந்த வலைப்பின்னல், உலகெங்கிலும் தொலைதூர இடங்களில் உள்ள சென்சார்கள் மூலம் குறிக்கப்பட்ட பொருட்களுடன் மக்களை இணைக்கிறது.

சில விவசாயிகள் தொலைதூரத்தில் உள்ள விலங்குகளின் நீர்த்தொட்டிகள் அல்லது சேமிப்புத் தொட்டிகளில் உள்ள நீரின் அளவைக் கண்காணிக்க சென்சார்களைப் பயன்படுத்துகின்றனர்.

புதுப்பிக்கத்தக்க ஆற்றலை மிகவும் திறம்பட கையாள்வதற்குக் கூட அவை பயன்படுத்தப்படலாம். காற்றாலைகள் பராமரிப்புக்காக, ஆண்டுக்கு இருமுறை நேரடியாக சென்று கண்காணிக்கப்படுகிறது. எனவே ஒரு றெக்கை சேதமடைந்தால், அது கண்டுபிடிக்கப்பட்டு சரிசெய்யப்படுவதற்கு சில மாதங்கள் ஆகும்.

"பிங் சர்வீசஸ்" எனப்படும் நிறுவனம், காற்றாலைகள் சுழலும் போது ஏற்படும் ஒலியைக் கண்காணிக்கும் சென்சார் ஒன்றை உருவாக்கியுள்ளது. இதன்மூலம், அதன் ஒலியில் ஏற்படும் மாற்றத்தைப் பொறுத்து சேதமடைந்த பிளேடை கண்டறியலாம். மேலும், இதை ஒரு கியூப்சாட் நெட்வொர்க் வழியாக காற்றாலையை இயக்குபவருக்குத் தெரியப்படுத்தலாம். இதன்மூலம், சேதமடைந்த றெக்கையை விரைவாகவும், அதிக திறனுடையதாகவும் சரிசெய்ய முடியும்.

6. **தொலைதூரவிண்வெளியை ஆராய்தல்**

ஏவத் தயாராகும் க்யூப்சாட்

பெரும்பாலான கியூப்சாட்கள் பூமியை நோக்கி



செலுத்தப்படுகின்றன. ஒரு சில க்யூப்சாட்கள் நட்சத்திரங்களை நோக்கி செலுத்தப்படுகின்றன.

2018 ஆம் ஆண்டில், ஆழமாக விண்வெளியில் ஏவப்படும் முதல் க்யூப்சாட்டை நாசா முதல்முறையாக செலுத்தியது. மார்கோ-ஏ மற்றும் பி இன்சைட் லேண்டரில் இருந்து செவ்வாய் கிரகத்தில் முக்கிய தகவல்களை அந்த க்யூப்சாட் அனுப்பியது.

அடுத்த ஆண்டு, நாசா தனது ஆர்ட்டெமிஸ் 1 ராக்கெட்டில் 10 க்யூப்சாட்களை அனுப்பத் திட்டமிட்டுள்ளது. ஒரு உயிரினத்தின் மீது ஆழமான விண்வெளி கதிர்வீச்சின் விளைவுகளை சோதிப்பது மற்றும் நிலவின் தென் துருவத்தில் நீர் படிவுகளை ஆய்வு செய்வது ஆகியவை இந்த ஆய்வுகளில் அடங்கும்.

இவை அனைத்தும் ஒரு நாள் மனிதர்களை மீண்டும் நிலவில் தரையிறக்கும் ஒரு திட்டத்தின் பகுதியாகும்.

**முக்கிய அறிவித்தல்**

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின்
நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள்,
தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு
அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள்
அறிவித்தல்களையும்,
மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து
ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது.
தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம்,
இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று.
எமது மின்னஞ்சல் முகவரிக்கு
தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு
வேண்டுகிறோம்.
sangathamilcanada@gmail.com

விளம்பரம் என்பது
உங்கள் வணிகத்தின்
ஒரு முதலீடு
தொடர்புகளுக்கு

437.345.4203









புதிய இடத்தில் புதிய பொலிவுடன்
GRAND
AUTOMOTIVE INC.
www.grandautomotive.ca

ALL REPAIRS & MANINTENACE ALL KIND OF CARS

உங்கள் வாகனங்களின் சகலவிதமான
திருத்த வேலைகளையும் தரமான முறையில்
திருத்திக்கொள்ள நாங்குகள்

Free Estimates, All Mechanical & Electrical Repairs
Muffler Work, Body Work & Painting
Friendly Services, Quality Workmanship & Guaranteed

We also install car Audio Systems,
Alarm Systems, Auto Glass & Seat Covers
If You are looking for a used Car, let us know
We can find you the best car in Town
Rust Proofing & Undercoating (Save you Body)

GOOD NEWS

Touch-up & Body Work on lease return cars

*All kind of Mechanical Work, Call Us*



Call: Louis
Tel: 416.757.7891 Dir: 647.831.2709
Email: itouchcarwash43@gmail.com
435A Midwest Road, Unit 5A, Scarborough ON M1P 3A6

HEADED LIGHT RESTORATION
We use only natural quality high-end
products on all our vehicles



BEST QUALITY WORK FOR REASONABLE PRICES!
OUR AIM IS TO SATISFY THE CUSTOMERS

# நிலநடுக்கம் – ஆழிப்பேரலை

- மறவன் புலவு க. சச்சிதானந்தன் -

ஆழிப் பேரலைகள் தமிழகத்தையும் தமிழீழத்தையும் தாக்குவது இதுதான் முதலாவது முறை அல்ல வரலாற்றில் முறையாகப் பதிவு செய்த ஆழிப்பேரலைகள், கி.பி 1912 (1881)இலும், கி.பி 1972 (1941)இலும் தமிழகத்தைத் தழுவியுள. அதற்கு முன்னரும் தமிழகக் கரைகளை ஆழிப்பேரலைகள் பலமுறை தழுவியிருக்கலாம்.

மாமல்லபுரக் கோயில்கள் கடலுக்குள் சென்றுவிட்டன. பூம்புகாரை 1,800 ஆண்டுகளுக்கு முன்பாக ஆழிப் பேரலை விழுங்கிய செய்தியை,

அணிநகர் தன்னை அலைகடல் கொள்க, என
இட்டனள் சாபம், பட்டது இதுவால்,
கடவுள் மாநகர் கடல்கொளப் பெயர்ந்த
வடிவேல் தடக்கை வானவன் போல,
விரிதிரை வந்து வியநகர் விழுங்க
ஒருதனி போயினன் உலக மன்னவன்.

வரி 199-204, ஆபுத்திரனோடு மணிபல்லவம் அடைந்த காதை மணிமேகலைக் காப்பியத்தில் காணலாம்.

கடல், தரையில் நிகழும் நிலநடுக்கங்களும் எரிமலைகளும் ஆழிப் பேரலைகளை எழுப்புகின்றன.

புவியின் அமைப்பே நிலநடுக்கத்துக்கும் எரிமலைகளுக்கும் காரணம். உருண்டையான புவியின் நடுவே கூழாகத் திரண்ட எரிதழல் குழம்பு உள்ளது. இந்த வெப்பக் குழம்பை மூடி, 100 கிமீ அளவிலான தடித்த கோது உள்ளது.

16 பெரிய தகடுகள் இணைந்ததே இந்தக் கோது. இப்பெரிய கண்டத் தகடுகளை ஒட்டிச் சிறு சிறு தகடுகளும் உள்ளன.

தன்னைத் தானே சுற்றுவதுடன், சூரியனையும் சுற்றி வருவது பூமி, பெரிய இந்த அசைவுகளால் தகடுகள் ஒன்றை ஒன்று சந்திக்கும் எல்லைகளில், உராய்வுகள் எப்பொழுதும் தொடர்ந்து கொண்டே இருக்கும். இந்த உராய்வுகளால் சில இடங்கள் பிளவுறும், சில இடங்கள் குவியும். இதனால் கண்டங்கள் நகர்ந்துகொண்டே இருக்கின்றன.

இந்த உராய்வுகளே நிலநடுக்கங்களின் அடிப்படைக் காரணி.

இந்தியத் துணைக்கண்டமும் சுற்றியுள்ள கடலும் இத்தகைய ஒரு கண்டத் தகட்டின் மேல் உள்ள பகுதியே. இந்தத் தகட்டின் பெயர் இந்தியத் தகடு.

இந்தியத் தகட்டுக்குக் கிழக்கே சுந்தரத் தகடு உள்ளது. இவ்விரண்டுக்கும் இடையே சிறிய தகடு ஒன்று உண்டு. பர்மாக் குறுந்தகடு எனப்பெயர் கொண்ட அத் தட்டின் மேல் அந்தமான் நக்காவரத் தீவுக் கூட்டமும் சுற்றியுள்ள கடலும் உள்ளன.

இந்த பர்மாக் குறுந்தகட்டின் ஓரங்களும் தகடுகளின் ஓரங்களைப் போல எப்பொழுதும் உராய்ந்து கொண்டும் குவிந்துகொண்டும் இருக்கின்றன. இதனால் நிலம் எப்பொழுதும் நடுங்கிக் கொண்டே இருக்கிறது.

பல நடுக்கங்கள் நம் புலனுக்குத் தெரிவதில்லை. ஆனாலும் கருவிகள் அவற்றைப் பதிவு செய்து கொண்டிருக்கின்றன. உலக நாடுகள் பலவற்றில் இத்தகைய பதிவு கருவிகள் உள. இந்தியாவில் வானிலை ஆய்வுத் துறையினர் 58 மையங்களில் இக்கருவிகளைப் பொருத்தி உள்ளனர். இவை தவிர இந்திய புவியியல் கழகத்தினரும் இத்தகைய பதிவு மையங்களை வைத்திருக்கின்றனர்.

உலகில் எங்கு நிலநடுக்கம் ஏற்படினும் எந்தக் கருவியிலும் அது பதிவாகும். பூமியில் எந்தப் பகுதியில் எந்த அளவில் நிலநடுக்கம் வந்துள்ளது என்பதும் பதிவாகும்.

26.12.2004 ஞாயிறு காலை, ஆழிப் பேரலையைத் தட்டி எழுப்பிய நிலநடுக்கமும் இந்தியக் கருவிகளில் பதிவாயின. உலக நாடுகளில் உள்ள ஏனைய பல கருவிகளிலும் பதிவாகின. இந்திய எல்லைக்கு அப்பால் இந்த நிலநடுக்க மையம் இருந்ததால், இந்தியப் பதிவாளர் அதை அரசின் கவனத்துக்குக் கொண்டுவரவில்லை.

கண்டத் தகடு ஒன்று மற்றதுடன் உராய்ந்து, சிறிய தகடு பெரிய தகட்டிற்குக் கீழாகச் சிறிதே நகர்ந்ததால், அதுவும் கடலுக்கடியில் இந்த நகர்வு நிகழ்ந்ததால், தகடுகளுக்கு மேலேயுள்ள நீர் திடீரெனத் தடுமாறியது. நிலை மாறியது.

குளத்துள் வீழ்ந்த பாறாங்கல் ஏற்படுத்தும் கலக்கம், பெரிய அளவில் கடலுள் ஏற்பட்டது. கண்டத் தகட்டின் சாய்வு ஏற்படுத்திய வெற்றிடம், நீர்த் தொகுப்பின் வழமையைக் குலைத்தது. ஆழிப் பேரலையைத் தோற்றுவித்தது.

சென்னையின் தென்கிழக்கே 2028 கிமீ. தொலைவில் தொடக்கம் 24.12.2004 வரை பதிவான நிலநடுக்கத் தொடர்கள் 26.12.2004 இன் நிலநடுக்கத்தைத் தூண்டின போலும்.

26.12 ஞாயிறு அன்றும் ஒரே ஒரு நிலநடுக்கம் மட்டும் நிகழவில்லை. காலை முதல் மாலை வரை அடுக்கடுக்காக நிலம் நடுங்கியது பர்மாக் குறுந்தகடு அசைந்து கொண்டே இருந்தது.

ஆனால் அந்த அசைவுகள் ஆழிப் பேரலையை எழுப்பவில்லை. கடலில் சிறிய தாக்கத்தை அவை ஏற்படுத்தி இருக்கும். நமக்கு புலனாகவில்லை. சிறிய கடலலை அசைவுகளையும் நுணுகிக் கண்டறியும் கருவிகள் உள.

ஆழிப்பேரலைகள் கடலில் தோன்றிப் பயணிக்கின்றனவா என்பதை முன்கூட்டியே கண்டறிய, அமெரிக்க மாநிலமான ஹவாய்த் தீவில் ஓர் ஆய்வு மையம் உள்ளது. பசிபிக் பெருங்கடலை ஒட்டிய 26 நாடுகளின் கூட்டமைப்பு இந்த ஆய்வு மையத்தை அமைத்துள்ளது. ஆழிப் பேரலை தோன்றிப் பயணிக்கும் போதே இந்த மையம் எச்சரிக்கை அறிவிப்பை இந்த 26 நாடுகளுக்கும் அனுப்புகிறது.




கடலின் தரையில் அமைந்துள்ள ஒரு கருவி நீரின் அழுத்த வேறுபாடுகளைக் கண்டறியும். ஆழிப்பேரலைக்குரிய குறி காணப்படின், கடற்பரப்பில் மிதக்கும் கருவிக்குச் செய்தி அனுப்பும், மிதவைக் கருவியில் இருந்து வானொலி அலைகள் செய்மதி மூலம் ஹவாய் மையத்துக்குச் செய்தியை அனுப்பும்.

உடனே பசிபிக் பெருங்கடலை ஒட்டிய நாடுகளுக்குச் செய்தி பரவும். தானாகவே எச்சரிக்கை மணியும் சங்கும் ஊதும் ஒலிபரப்பிகள் உள்ளிட்ட ஆபத்து எச்சரிக்கைகள் கரையோரமெங்கும் மக்களைத் தட்டியெழுப்புகின்றன. அந்த நாடுகளில் உயிர்ச் சேதம் முற்று முழுதாகத் தவிர்க்கப்படுகிறது. முக்கிய ஆவணங்கள், பொருள்கள், ஆபத்துத் தரும் இரசாயனப் பொருள்கள், அணுக்கதிர்க் கழிவுகள் யாவையும் உடன் அப்புறப்படுத்த இந்த எச்சரிக்கை மிகவும் பயன்படுகின்றன.

தாய்லாந்து நாட்டின் கிழக்குக் கரையில் பசிபிக் பெருங்கடலை ஒட்டி, இந்த எச்சரிக்கை வசதி உண்டு. ஆனால் இந்துப் பெருங்கடலை ஒட்டி இந்த எச்சரிக்கை அறிவிப்பு வசதிகள் இல்லை. எனவேதான் தாய்லாந்திடம் என்ன உதவி வேண்டும் என அமெரிக்கா கேட்டபோது, யாம் கேட்பவை பொன்னும் பொருளுமல்ல போகமுமல்ல - நின்பால், இரப்பது ஆழிப்பேரலை கண்டறியும் தொழில் நுட்ப அறிவும் கருவிகளுமே எனத் தாய்லாந்து பதில் கூறியுள்ளது.

இந்துப் பெருங்கடலை ஒட்டிய நாடுகளுக்கு இந்த எச்சரிக்கை அமைப்பின் தேவையை 26.12.2004 இன் ஆழிப் பேரலை எடுத்துக்கூறியுள்ளது. அந்தத் தேவையை உணர இந்த நாடுகள் கொடுத்த விலை 160,000 உயிர்கள், அவற்றுள், 50,000 உயிர்கள் தமிழருடையன.

[illegible] கவனத்தையும் இந்த ஆழிப்பேரலை நமக்குச் சொல்லாமல் சொல்லிச் சென்றுளதே!

நாள்
19.12.2004

நிகழ்வு

தென் அமெரிக்கா, வட அமெரிக்கா பிஜிப் பகுதி, பிலிப்பைன்ஸ் பகுதி, என பசிபிக் பெருங்கடல் கரையோர மெங்கும்.

நாள்
20.12.2004

நிகழ்வு

அட்லாண்டிக் பெருங்கடல், பசிபிக் பெருங்கடல் பகுதிகள்.

நாள்
21.12.2004

நிகழ்வு

பசிபிக் கடலைச்சுற்றிய பகுதிகள்

நாள்
22.12.2004

நிகழ்வு

கிழக்குப் பசிபிக் பெருங்கடல் பகுதிகள்

நாள்
23.12.2004

நிகழ்வு

வட பசிபிக் பெருங்கடல் பகுதிகள்

நாள்
24.12.2004

நிகழ்வு

இந்தோனீசியாவின் சாவகம், மேற்குப் பசிபிக் பெருங்கடல் பகுதிகள்

பட்டியல் 2

26.12.2004

நேரம் ரிக்டர் இடம்

06.28 8.9 சுமத்திரா அருகே

07.18 5.9 வட சுமத்திரா

07.45 5.8 அந்தமான் தீவுகள்

07.52 6.0 நக்காவரம் தீவுகள்

08.04 5.8 வட சுமத்திரா

08.06 5.8 அந்தமான் தீவுகள்

08.21 6.0 அந்தமான் தீவுகள்

08.29 5.9 வட சுமத்திரா

08.38 6.1 அந்தமான் தீவுகள்

09.51 7.3 நக்காவரம் தீவுகள்

11.52 5.7 அந்தமான் தீவுகள்

12.37 5.7 அந்தமான் தீவுகள்

13.08 5.8 அந்தமான் தீவுகள்

14.50 6.5 நக்காவரம் தீவுகள்

15.49 6.2 அந்தமான் தீவுகள்

16.35 6.3 அந்தமான் தீவுகள்

இப்பட்டியலில் உள்ள தகவல்கள் அமெரிக்க ஐக்கிய மாநிலங்களின் புவியியல் ஆய்வகம், அமெரிக்க ஐக்கிய மாநிலங்களின் தேசிய கடலியல் துறை ஆகியனவற்றின் மின்னம்பல தளங்களில் திரட்டியன.

நன்றி: தமிழர் கண்ணோட்டம் (பொங்கல் சிறப்பிதழ்)


GTA CHIROPRACTIC CENTRE
We are specialized in
• Motor Vehicle Accidents
• Slip & Fall
• WSIB
• Extended Health Care
• Sports Injuries
• Physiotherapy
• Chiropractic
• Orthotics Shoes
• Massage Therapy
• Acupuncture
Health is Wealth
Pathmaraj (Pat) Pathman
Tel: 416-321-0482 Cell: 416-528-5318
Fax: 416-321-0486
GTA Square Mall 5215 Finch Ave, E#206
Scarborough, ON, M1S 0C2
www.gtachiro.ca | Email: gtaphysio@gmail.com


R.S தங்கப் பட்டறை
நவீன டிசைன்களில் நகைகள் செய்துகொள்ளவும்
உங்கள் பழைய நகைகளை மெருகூட்டவும்
எல்லவிதமான திருத்த வேலைகளையும் லேசர் மூலம் செய்து கொள்ளவும்
குறித்த திகதியில் ஓடர்களை பெற்றுக்கொள்ளவும்
பிறந்த திகதி எண் ராசிக்கேற்ப பொருத்தமான மாணிக்க கற்களை அவற்றின் இயற்கைத் தன்மைக்கான சான்றிதழுடன் பெற்றுக்கொள்ளவும்
திருமணத்திற்கு பொன் உருக்குதல் காது குத்துதல்
பல விதமான டிசைன்களில் தாலி செய்து கொள்ளவும்
பழைய நகைகளை மாற்றி இன்றைய காலத்துக்கேற்ப புதிய வடிவங்களில் செய்துகொள்ளவும்
தொடர்புகளுக்கு: 416.292.9816 / 416.822.7171
S.மூர்த்தி
Majestic City (Markham & McNicoll)
2900 Markham Rd, Unit A16, Scarborough


FRONTLINE COMMUNITY CENTRE
FCC
குடிவரவாளர்களுக்கான சேவைகள்
பெண்கள் மற்றும் முதியோர் நலதிட்டங்கள் கனடிய மனநல அமைப்பு
வருமான வரி பத்திரம் நிரப்புதல் கனடிய வருமான வரித்துறை
பொதுவான திட்டங்கள்
மாற்றுத்திறனாளிகளுக்கான திட்டங்கள்
வேலைவாய்ப்பு சம்பந்தமான சேவைகள்
முதியவர்கள் சமூக நீரோட்டத்தில் பங்குபெறுவதற்கான திட்டங்கள்
தன்னார்வத் தொண்டாற்றல்
(416) 840-4425
3031 Markham Rd, Unit 26 & 27
Scarborough ON M1X 1L9
Frontline Community Centre
frontlinecommunitycentre
http://fcccanada.org/


Nickon
Photo & Video
Digital Album
நிக்கொன்
போட்டோ & வீடியோ
டிஜிட்டல் அல்பம்
உங்கள் குடும்ப மற்றும் சமூக நிகழ்வுகளை நினைவில் நிறுத்தி, நிழற்படமாக்கிட...
Call: Vijay
416.554.8899
Facebook ID:
Nickon Studio




# மீளுருவாக்கப்பட்ட ஆரியகுளம்

## தமிழ் மக்களுக்குப் பெருமைதரும் அரிய வரலாற்றுப்பாணி




இலங்கை சுதந்திரமடைந்த காலத்திலிருந்து வெளிவந்த தமிழ் ஊடகங்கள் தூரநோக்குடன் தமிழ் மக்களின் வரலாற்றையும், பண்பாட்டையும் அடையாளப்படுத்தும் மரபுரிமைச் சின்னங்களைக் கண்டறிந்து அவற்றைப் பாதுகாக்க மக்கள் அனைவரும் முன்வரவேண்டும் என்ற வேண்டுதலை முன்னெடுத்து வந்திருந்திருப்பதைக் காணமுடிகின்றது. அவ்வேண்டுதலில் ஒன்றை நிறைவு செய்திருக்கும் அரிய வரலாற்றுப் பணியாகவே இன்று யாழ்ப்பாண மாநகர சபையால் முன்னெடுத்துள்ள ஆரியகுளம் மீள்புனரமைப்புப் பணியைப் பார்க்கின்றோம். இது யாழ்ப்பாண நகரை அழகுபடுத்தும் இயற்கை சார்ந்த மரபுரிமைச் சின்னம் என்பதற்கு அப்பால் அது யாழ்ப்பாண அரசுகால வரலாற்றையும், பண்பாட்டையும் நினைவுபடுத்திக்காட்டும் மரபுரிமைச் சின்னம் என அதற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருப்பது அனைவருக்கும் மகிழ்ச்சி தருவதாக உள்ளது. ஆரியகுளத்தை யாழ்ப்பாண அரசுடனும், அதன் ஆட்சியாளருடனும் தொடர்புபடுத்திக் கூறும் போது ஆரியகுளம் என்ற பெயர் எவ்வாறு வந்தது? எப்போது வந்தது? எந்த மன்னன் காலத்திற்கு உரியது? இக்குளம் யாருக்குச் சொந்தமானது? என்பன தொடர்பாக வேறுபட்ட கருத்துக்களும், பல கேள்விகளும் மக்களிடமும், வரலாற்று ஆர்வலர்களிடமும் நீணடகாலமாக இருந்து வருவதை நாம் அறிவோம் அதுவும் இக்குளத்தின் மீளுருவாக்கப் பணி தொடங்கிய காலத்தில் இருந்து இவ்வாறான கேள்விகள் ஊடகங்கள் பலவற்றில் முன்னிலைப் படுத்தப்பட்டு வந்ததையும் காணமுடிகின்றது. இந்த வரலாற்று மயக்கத்திற்கு ஆரியகுளம் என்பதன் முன்னொட்டுச் சொல்லாக வரும் "ஆரிய(ர்)" என்ற சொல் பயன்பாட்டிலிருப்பதும் ஒரு காரணமாக இருக்கலாம். இதற்கு கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்கள் அண்மையில் பொருத்தமான பதிலையும், விளக்கத்தையும் வழங்கியிருந்ததுடன் இதையிட்டு வரலாற்று ஆசிரியர்கள் மௌனமாக இருக்கிறார்கள் என்ற தனது நியாயமான ஆதங்கத்தையும் வெளிப்படுத்தியிருந்தார். அவரின் கருத்திற்கு மேலும் நம்பகரமான சான்றுகளையும், விளங்கங்களையும் எடுத்துக் கூறுவதே இச்சிறுகட்டுரையின் நோக்கமாகும்.

### ஆரியச்சக்கரவர்த்திகளும் ஆரியகுளமும்

தமிழகத்தில் சோழரின் வீழ்ச்சியைத் தொடர்ந்து கி.பி. 12ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் எழுச்சியடைந்த இரண்டாம் பாண்டியப் பேரரசு அதன் சமகாலத்தில் தென்னிலங்கைமீதும், வடஇலங்கைமீதும் ஆறு தடவைகளுக்கு மேல் படையெடுத்தது பற்றி அவர்கள் வெளியிட்ட சாசனங்கள் கூறுகின்றன. இப்படையெடுப்புக்களின் தளபதிகளாக, இருந்தவர்களே ஆரியச்சக்கரவர்த்திகள், சக்கரவர்த்திகள் என்ற பட்டத்தையும் பெற்றிருந்தனர். இப்பட்டங்களை படைத்தளபதிகள் அல்லது சேனாதிபதிகள் மட்டுமன்றி அரச நிர்வாகத்தில் உயர்பதவிகளில் இருந்தவர்களும் பெற்றிருந்தனர் என்பதனைப் பாண்டியர்காலச் சாசனங்கள் உறுதிசெய்கின்றன. அவற்றுள் இலங்கைமீது படையெடுத்த ஆரியச்சக்கரவர்த்திகள் யார்? எந்த நாட்டவர்? எந்ந அரச வம்சத்திற்கு உரியவர்கள்? எந்த மொழிக்குரியவர்கள்? என்பன தொடர்பான கேள்விகளுக்கு விடைகூறுவதாகவே சிங்கள வரலாற்று இலக்கியங்களில் ஒன்றான சூளவம்சத்தில் வரும் பின்வரும் கூற்றுக்கள் காணப்படுகின்றன:

"முன்பு பஞ்சம் ஒன்று நிலவியகாலத்திலே பாண்டிய இராச்சியத்தில் ஆட்சிபுரிந்த சகோதரர்களான ஐந்து மன்னர்கள் ஆரியச்சக்கரவர்த்தி என்னும் பெயர் கொண்ட தமிழ்ச் சேனாதிபதியின் தலைமையில் படையொன்றை அனுப்பி வைத்தார்கள். அவன் ஆரியனல்லானாயினும் மிகுந்த செல்வாக்கும் அதிகாரமும் கொண்ட பிரதானியாக விளங்கினான். இராச்சியத்தின் எல்லாப் பக்கங்களையும் அழித்துவிட்டு அரண்கள் பொருந்திய சுபபட்டணத்தினுள் (யப்பகூவாவிற்குள்) அவன் புகுந்தான். அங்கிருந்த தந்ததாதுவையும், விலைமதிக்கமுடியாத செல்வங்களையும் கவர்ந்து கொண்டு ஆரியச்சக்கரவர்த்தி பாண்டிநாட்டுக்குச் சென்றான். அங்கு பாண்டிய மன்னர் குலமெனும் தாமரையை மலர்விக்கின்ற கதிரவனையொத்த குலசேகர மன்னனுக்கு அவற்றைக் கொடுத்தான்". மேற்கூறப்பட்ட கூற்றிலிருந்து ஆரியச்சக்கரவர்த்திகள் ஆரியர்கள் அல்லாத தமிழர் என்று கூறப்பட்டிருப்பது இங்கு சிறப்பாக நோக்கத்தக்கது. தமிழ்ப் பேரகராதியில் ஆரியன் என்ற சொல்லுக்கு தலைவன், பிராமணன் என்ற பொருள்களும் உள்ளன.

கி.பி.13 ஆம் நூற்றாண்டிள் நடுப்பகுதியில் வடஇலங்கைமீது மேற்கொள்ளப்பட்ட இன்னொரு படையெடுப்பு பற்றிய விரிவான செய்திகளை தமிழகத்தில் புதுக்கோட்டை மாவட்டத்தில் குடுமியாமலையிலுள்ள 1262 ஆண்டுக்குரிய பாண்டியரது கல்வெட்டு கூறுகின்றது. அக்கல்வெட்டில் தென்னிலங்கையிலும், வடஇலங்கையிலும் இரு அரசுகள் இருந்ததாகவும், சிங்கள அமைச்சன் ஒருவனது வேண்டுதலின் பேரில் பாண்டியர் வடஇலங்கைமீது படையெடுத்து ஆட்சியில் இருந்த சாவகனை அடிபணிந்து திறை செலுத்துமாறு கோரியபோது அதை அவன் ஏற்க மறுத்ததால் அவனைக் கொன்று அவனின் மைந்தனை ஆட்சியில் அமர்த்திவிட்டு இந்த வெற்றியின் நினைவாக தமது அரச இலட்சனையான இரட்டைக்கயல் (மீன்கள்) பொறித்த கொடிகளை கோணாமலையிலும், திரிகூடகிரியிலும் (திருகோணமலையில்) ஏற்றிவிட்டுத் திரும்பியதாகக் கூறுகின்றது. ஆயினும் இந்த வெற்றியைத் தொடர்ந்து தமிழகத்தில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களால் சாகவனின் மைந்தனை ஆட்சியில் அமர்த்திய பாண்டியப்படைகளே அவனை அகற்றிவிட்டு கி.பி.13 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் யாழ்ப்பாணத்தில் நல்லூரைத் தலைநகரகக் கொண்ட யாழ்ப்பாண அரசைத் தோற்றுவித்தனர். இதனால் இவ்வரசு பாளி, சிங்கள, தமிழ் இலக்கியங்களில் ஆரியச்சக்கரவர்த்திகள் அரசு என்றே அழைக்கப்படுகின்றன. இதனால் யாழ்ப்பாண அரசில் ஆட்சிபுரிந்த தொடக்ககால மன்னர்கள் ஆரியச்சக்கரவர்த்திகள் என்பதை ஒரு வம்சப் பெயராகக் கொண்டு தமது பெயருடன் ஆரியன் என்ற பெயரையும் இணைத்துக் கொண்டனர். இதற்கு யாழ்ப்பாணவைபவமாலையில் கூறப்பட்டுள்ள குலசேகர சிங்கையாரியன், விக்கிரம சிங்கையாரியன், வரோதய சிங்கையாரியன், மார்த்தாணட சிங்கையாரியன், குணபூக்ஷண சிங்கையாரியன், செயவீர சிங்கையாரியன், குணவீர சிங்கையாரியன், கனகசூரிய சிங்கையாரியன் முதலான எட்டு மன்னர்களின் பெயர்களைக் குறிப்பிடலாம் மேலும் ஆரியச்சக்கரவர்த்தி மன்னன் ஒருவன் கம்பளை அரசு மீது படையெடுத்தது பற்றிய தமிழ்க் கல்வெட்டொன்று தென்னிலங்கையில் கொணட்டகம என்ற இடத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அக்கல்வெட்டிலும் படையெடுத்த மன்னனை "பொங்கொலிநீர்ச் சிங்கையாரியன்" என்றே கூறப்பட்டுள்ளது. இது மேலும் யாழ்ப்பாணவைபவமாலையில சொல்லப்பட்ட செய்தியை உறுதிசெய்வதாக உள்ளது. இவ்வாதாரங்கள் யாழ்ப்பாண அரசுகால மன்னர்களின் பெயர்களுடன் ஆரியன் என்ற சொல்லும் .இணைந்துள்ளதைக் காட்டுகின்றது.

ஆரியச்சக்கரவர்த்திகளால் தோற்றுவிக்கப்பட்ட யாழ்ப்பாண அரசைக் காலப்போக்கில் சுதேச மன்னர்களும் ஆட்சி செய்தனர் இவ்வரசு போத்துக்கேயரால் வெற்றி கொள்ளப்படும் வரை (1619 இல்) ஏறத்தாழ 350 ஆண்டுகள் சுதந்திர தமிழரசாக ஆட்சியில் இருந்துள்ளது. இவ்வரசின் வரலாற்றை விரிவாக ஆராய்ந்த பேராசிரியர் சி.பத்மநாதன் இலங்கைத் தமிழர் பண்பாடு தனித்துவமாக வளர்வதற்கு யாழ்ப்பாண அரசு ஒரு முக்கிய காரணம் எனக் கூறியிருப்பதுடன் அவ்வரசு காலத்தில் தமிழ் மொழி, சைவசமயம், இலக்கியம், இசை, நடனம், நாடகம், சோதிடம், வைத்தியம், விவசாயம், வெளிநாட்டு வர்த்தகம், இராணுவக்கட்டமைப்பு என்பனவும் வளர்சியடைந்திருந்ததாகவும் குறிப்பிடுகின்றார். கி.பி. 14 ஆம் நூற்றாண்டில் எழுந்த ராஜாவலிய என்ற சிங்கள வரலாற்று இலக்கியம் சமகாலத்தில் ஆட்சியிலிருந்த றைகம, கம்பளை, யாழ்ப்பாண அரசுகள் பற்றிக்குறிப்பிட்டு அவற்றுள் யாழ்ப்பாண ஆரியச்சக்கரவர்த்திகளின் அரசே படைப்பலத்திலும், பொருளாதார வளத்திலும் மேலோங்கி இருந்ததாகவும் அவ்வரசு மலைநாடு தொட்டு தாழ்நிலப்பகுதிவரை ஒன்பது துறைமுகங்களில் இருந்து திறை பெற்றதாகவும் கூறுகின்றது.




பொதுவாக ஒரு நாட்டில் அல்லது ஒரு வட்டாரத்தில் ஆட்சிபுரிந்த அரச வம்சங்கள் மற்றும் ஆட்சியாளர்களின் பெயர்கள், வரலாற்று








முக்கியத்துவம் வாய்ந்த இடப்பெயர்களுடனும், அவர்களது வரலாற்றுப் பணிகளுடனும் இணைந்துப் பேசப்படுவதுண்டு. இவ்வாரலாற்று நினைவுகள் பிற்காலத்தில் தொடர்நத்தற்கும், காலப்போக்கில் மறைந்ததற்கும் பல ஆதாரங்கள் காணப்படுகின்றன. இங்கே யாழ்ப்பாண அரசைத் தோற்றுவித்த ஆரியச்சக்கரவர்த்திகள் தமிழகத்தில் இராம நாதபுரம் செவ்விருக்கை நாட்டு ஆரியச்சக்கரவர்த்தி நல்லூரை வாழ்விடமாகக் கொண்டவர்கள் எனப் பாண்டிய சாசனங்களும், பிற வரலாற்று மூலங்களும் உறுதிசெய்கின்றன. இவர்கள் இராமேஸ்வரம் சேதுதலத்துடன் நெருங்கிய தொடர்பைக் கொண்டிருந்தால் இவர்கள் சேதுகுலம் எனவும் அழைக்கப்பட்டனர். இச்சேதுகுலத்தையும், சேது தலத்தையும் நினைவுபடுத்தும் வகையில் யாழ்ப்பாண அரசில் ஆட்சிபுரிந்த ஆரியச்சக்கரவர்த்திகள் தாம் வெளியிட்ட நாணயங்களிலும், கல்வெட்டுக்களிலும், அரச கொடிகளிலும் சேதுவை ஒரு மங்கல மொழியாகப் பயன்படுத்தினர். இச்சொல் இன்றும் யாழ்ப்

குளம் என்ற அதே பெயர் தென்தமிழகத்தில் ஒரு உள்ளூராட்சி மன்றத்தின் பெயராக இருப்பது யாழ்ப்பாணத்தில் உள்ள ஆரியகுளம் ஆரியச்சக்கரவத்திகளின் ஆட்சியை நினைவுபடுத்த தோன்றியதை உறுதிப்படுத்துவதாக உள்ளது. இற்றைக்கு 100 ஆண்டுகளுக்கு முன்னர் (1913ஆம் ஆண்டு) "ஈழநாடும் தமிழ்ச் சங்கமும்" என்ற நூலில் அமரர் முத்துத்தம்பிப்பிள்ளை அவர்கள் குணபூஷணசிங் கையாரியனின் அமைச்சன் ஒருவன் ஆற்றிய பணிகள் பற்றி விரிவாகக் கூறும் போது குணபூஷணசிங்கையாரியனின் பெயரில் ஆரியகுளமும், அவனது மனையும் இருந்ததாகக் குறிப்பிடுகின்றார். மேலும் அவர் இம் மன்னன் காலத்திலேயே 63 நாயன்மார்களுக்கு நாயன்மார்க்கட்டில் ஆலயம் அமைக்கப்பட்டதாகவும் கூறியுள்ளார். அண்மையில் நாயன்மாரக்கட்டு ஆலயத்திருக்குளம் மீளுருவாக்கம் செய்யப்பட்டபோது ஒரு அரிய தமிழ்க் கல்வெட்டு கண்டுபிடிக்கப்பட்டு அது





பாண அரசில் ஆட்சிபுரிந்த ஆரியச்சக்கரவர்த்திகளின் முக்கிய வரலாற்று அடையாளமாகப் பார்க்கப்படுகின்றது. மேலும் ஆரியச்சக்கரவர்த்திகள் வாழ்ந்த தென்தமிழகத்தில் அதிலும் குறிப்பாக பாண்டியரின் ஆதிக்கம் நிலவிய இடங்களில் ஆரியகுளம், ஆரிய நல்லூர், ஆரியச்சக்கரவர்த்தி நல்லூர், ஆரிய கவுண்டனூர், ஆரியக்கவுண்டன் வளவு முதலான பெயர்கள் பரந்த பிரதேசத்திற்குரிய இடப்பெயர்களாக உள்ளன. வரலாற்றுப் பழமைவாய்ந்த இவ்விடப்பெயர்கள் தற்காலத் தமிழகத்தின் உள்ளூராட்சி மன்றங்களின் பெயர்களாகவும் இருந்துவருகின்றன.



இப்பெயர்கள் ஆரியச்சக்கரவர்த்திகளின் நிர்வாகத்திற்கு உட்பட்டிருந்ததன் காரணமாகத் தோன்றியவை எனக் கூறப்படுகின்றது. அதிலும் யாழ்ப்பாணத்தில் உள்ள ஆரிய

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்திரபாலா தொல்லியல் அருங்காட்சியகத்தில் காட்சிப்படுத் தப்பட்டுள்ளது. இக்கல்வெட்டு காலத்தால் சற் றுப் பிற்பட்டதாக இருப்பினும் அக்கல்வெட்டில் இவ்வாயைத் திருக்குளத்தை அமைத்தவன் சிங்கையாரியன் என்றே குறிப்பிடப்பட்டுள் ளது. இவ்வாதரங்களை வைத்துப் பார்க்கும் போது ஆரியகுளம் என்ற பெயர் யாழ்ப்பாண அரசைத் தோற்றுவித்த ஆரியச்சக்கரவரத் திகளின் ஆட்சியை நினைவுபடுத்திக் காட்டும் ஒரு மரபுரிமைச் சின்னம் என்பது உறுதி யாகத் தெரிகின்றது. இதை மறுதலித்துக் கூறுவதற்கு வேறு எந்த ஆதாரங்களும் காணப்படவில்லை.

மரபுரிமைச் சின்னம் என்பது அது சார்ந்த இனத்தின், பண்பாட்டின் அடையாளம், ஆணி வேர் எனப் பார்க்கப்படுகின்றது.. விலை மதிக்க முடியாத இம்மரபுரிமைச் சொத்துக் களைச் சிறிதும் பிசகாமல். எதிர்காலச் சந்ததியிடம் கையளிக்க வேண்டிய நம்பிக்கை நாற்றுக்களாவும் இவை காணப்படுகின்றன. தமிழ் மக்களின் மரபுரிமைச் சின்னங்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில் எமது மக்களிடமும், மக்கள் பிரதிநிதிகளிடமும் ஒரு மித்த கருத்துக்கள் இருப்பதையே காண முடிகின்றது. இது அவர்களுடன் எனக்குள்ள நீண்டகாலத் தொடர்பின் வெளிப்பாடு. இன்று நிறைவு பெற்றுள்ள ஆரியகுளமீளுருவாக்கம் என்பது எமது மரபுரிமைச் சின்னங்களை



நாமே பாதுகாக்கமுடியும் என்பதன் ஒரு அடையாளமாகவும், தொடக்கப்புள்ளியாகவும் பார்க்கப்படலாம். எதிர்காலத்தில் நாம் அனைவரும் ஒன்றிணைந்து எமது மரபுரிமைகளைப் பாதுகாப்பதற்கு ஆரியகுள மீளுருவாக்கப்பணி ஒரு முன்மாதிரியாக இருக்கவேண்டும் என்பதே அனைத்து தமிழ் மக்களின் எதிர்பார்ப்பாகும்.

2022ஆம் ஆண்டின்

# உலக வணிகம்

விளம்பரம் ஓர் அன்பளிப்போ அலலது
செலவோ அல்ல,அது ஓர் முதலீடு.

விளம்பரத்திற்கு நீங்கள் செலுத்தும் கட்டணம்
வீண் விரயமன்று அது உங்கள்
வணிகத்திற்கு நீங்கள் செய்யும் முதலீடு.

உங்கள் வணிகம் பெருகவும்
முன்னேற்றமடையவும் இன்றியமையாதது.

விளம்பரம் இன்றேல்
வியாபாரம் இல்லை



விளம்பரத் தொடர்புகளுக்கு

**437 345 4203**

www.ulagavanikam.com
thamilarvanikam@gmail.com

# பெண்களுக்கு எதிரான வன்முறையை ஒழிப்பதற்கான சர்வதேச நாள்

–ராஜி பாற்றர்சன்–



ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் மாதம் 25- ம் திகதி பெண்களுக்கு எதிரான வன்முறையை ஒழிப்பதற்கான சர்வதேச தினம் அனுஸ்டிக்கப்படுகின்றது. இதற்கான தீர்மானம் ஐக்கிய நாடுகள் சபை பொதுச் சபையால் 1999 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இந்த தீர்மானம் 54 / 134 என அழைக்கப்படுகின்றது. பெண் களுக்கு எதிரான வன்கொடுமைகள் குறித்து பொதுமக் களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் முகமாக இந்த தினம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. பெண்களுக்கு எதிரான வன்முறை கள் எனப்படும் பொழுது அது உடல் மற்றும் பாலியல் ரீதியான வன்முறைகள் மாத்திரமல்ல பாலின அடிப் படையிலான வன்முறையை விளைவிக்கக் கூடிய எந்த ஒரு செயலையும் அது குறிக்கின்றது. பெண்களுக்கு உடல், பாலியல் அல்லது உளவியல் பாதிப்பு அல்லது உளவியல் துன்பம் போன்ற செயல்களில் அச்சுறுத்தல்கள் வற்புறுத்தல் அல்லது தன்னிச்சையான சுதந்திரத்தைப் பறித்தல் போன்ற சம்பவங்கள் பொது அல்லது தனிப்பட்ட வாழ்க்கையில் நிகழ்ந்தாலும் அது பெண்களுக்கு எதிரான வன்முறையாக பார்க்கப்படுகின்றது.



**அன்றைய வரலாறு**



இந்த நாளின் பின்னணியை ஆராயும் போது டொமினிக் கன் குடியரசை சேர்ந்த மூன்று மிராபால் சகோதரிகள் மிக முக்கியத்துவம் பெறுகின்றார்கள். சரி யார் இந்த சகோதரி கள்? பாட்ரியா, மினெர்வா மற்றும் மரியா தெரேசா என அழைக்கப்படும் மூன்று சகோதரிகளும் என்ரிக் மிராபால் மற்றும் மரியா மெர்சிடிஸ் ரெய்ஸ் ஆகியோருக்கு முறையே 1924, 1927 மற்றும் 1935 இல் பிறந்தனர். மூவரும் நன்றாக கல்வி கற்றது மாத்திரமல்ல மினெர்வா மற்றும் மரியா தெரசா பல்கலைக்கழக பட்டங்களை பெற்றுக் கொள்ள கூடிய திறமையை உருவாக்கியிருந் தனர். இவர்களின் பெற்றோர் காபி ஆலை, பொது அங்காடி மற்றும் ஒரு பண்ணையை நடத்தி தங்கள் குடும்பத்தை சிறப்பாக நடாத்தி வந்தனர். இவர்கள் மூவரும் அந்த காலத்தில் 30 ஆண்டுகளுக்கு முன்னர் இராணுவப் புரட்சியின் மூலம் நாட்டின் அதிகாரத்தைக் கைப்பற்றிய கொடூர சர்வாதிகாரி ரஃபேல் ட்ருஜிலோவின் ஆட்சிக்கு எதிராக வளர்ந்து வரும் நிலத்தடி எதிர்ப்பின் தீவிர உறுப்பினர்களாக இருந்தனர்.

லா வேகா (La Vega) நகரில் உள்ள ஒரு கத்தோலிக்க உறைவிடப் பள்ளியான Colegio Inmaculada Concepción இல் கலந்துகொண்ட பிறகு, மினெர்வா சட்டப் படிப்புக்காக தலைநகரான சாண்டோ டொமிங்கோவில் உள்ள கல்லூரிக்குச் சென்றார். அந்த நேரத்தில், தான் ட்ருஜிலோ (Trujillo) காலத்தில் டொமினிகன் குடியரசில் இருந்த அநீதிகளைப் பற்றி அவள் அதிகமாக அறியக் கூடிய சந்தர்ப்பம் கிடைத்தது.




இந்த மூன்று சகோதரிகளும் தங்கள் கணவர்களுடன் இணைந்து வெகு தீவிரமாக ட்ருஜிலோ ஆட்சிக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். இதன் காரணமாக, சகோதரிகளும் அவர்களது குடும்பத்தினரும் அரசுக்கு எதிரான வெளிப்படையான மற்றும் இரகசிய நடவடிக்கை களுக்காக தொடர்ந்து துன்புறுத்தப்பட்டனர். அவர்களது அரசியல் நடவடிக்கையின் போது, பெண்களும் அவர் களது கணவர்களும் பல்வேறு கட்டங்களில் மீண்டும் மீண்டும் சிறையில் அடைக்கப்பட்டனர். மினர்வா மட்டும் நான்கு முறை சிறையில் அடைக்கப்பட்டார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

ட்ருஜிலோ வெளிப்படையாகவே இந்த சகோதரிகள் தனக்கு சவாலானவர்கள் எனக் குறிப்பிடும் அளவிற்கு அவர்களுடைய பணிகள் பேசப்பட்டன. நவம்பர் 25, 1960 அன்று சிறையில் அடைக்கப்பட்டிருந்த தமது கணவர் களை பார்க்க சென்றிருந்த போது அவர்கள் பயணித்த வாகனம் விபத்துக்குள்ளாகி, சம்பவ இடத்திலேயே பலியாகினர். நாட்டையே அதிர்ச்சிக்கு உள்ளாக்கிய அவர்களின் மரணங்கள் தற்செயலானவை அல்ல என்பது அனைவருக்கும் தெரியும்.

பெண்களுக்கு எதிரான வன்முறையை ஒழிப்பதற்கான சர்வதேச நாள் நடை முறை படுத்தபடுவதற்கு முன்னதாக, லத்தீன் அமெரிக்காவிலும், உலகெங்கிலும் உள்ள பிற நாடுகளிலும் நவம்பர் 25 "பெண்களுக்கு எதிரான வன்முறைக்கு எதிரான சர்வதேச தினம்" என்று அனுசரிக் கப்பட்டது. வன்முறைக்கு எதிரான மகளிர் நாள் அல்லது பெண்களுக்கு எதிரான வன்முறைகளுக்கு முடிவு கட்டும் நாள் என்கிற வகையில் ஒரு நிரந்தரமான தலைப்பு இன்றி இந்த நாள் அனுஸ்டிக்கப்பட்டது. கொலம்பியாவின் பொகோடாவில் லத்தீன் அமெரிக்கா மற்றும் கரீபியனுக் கான முதல் பெண்ணியவாதி என்குவென்ட்ரோவால் (Encuentro ) 1981-ல் இது முதலில் அறிவிக்கப்பட்டது.

முதல் பெண்ணியவாதி Encuentro அவர்களினால், கற் பழிப்பு மற்றும் பாலியல் துன்புறுத்தல், சித்திரவதை மற்றும் பெண் அரசியல் கைதிகளின் துஷ்பிரயோகம் உள்ளிட்ட அரச வன்முறைகள் தொடக்கம் பாலின வன்முறை வரை கடுமையாக கண்டித்ததோடு உயிழந்த மிராபால் சகோதரிகள் மூவருக்கும் அஞ்சலி செலுத்தும் நாளாக கடை பிடித்தது குறிப்பிடத்தக்கது.

அதன் பின்னர் 20 டிசம்பர் 1993 அன்று, ஐக்கிய நாடுகள் பொதுச் சபை 48/104 தீர்மானத்தின் மூலம் பெண்களுக்கு எதிரான வன்முறையை ஒழிப்பதற்கான பிரகடனத்தை ஏற்றுக்கொண்டது. இது உலகளவில் பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான வன்முறையை ஒழிப்பதற்கான பாதையை வகுத்தது.

அதன் பின்னர் 19 அக்டோபர் 1999 அன்று, பொதுச் சபையின் 54 வது அமர்வின் போது மூன்றாவது குழுவின் 17 வது கூட்டத்தில், டொமினிகன் குடியரசின் பிரதிநிதி மற்றும் 74 உறுப்பு நாடுகளின் சார்பாக ஒரு வரைவு தீர்மானத்தை அதாவது நவம்பர் 25 ஐ பெண்களுக்கு எதிரான வன்முறையை ஒழிப்பதற்கான சர்வதேச தினமாக அறிவிக்கப்பட வேண்டும் என்னும் ஆவணத் தை அறிமுகப்படுத்தினார் (ஆவணம் A/C.3/54/ L.14).

அதனை தொடர்ந்து நவம்பர் 3, 1999 அன்று நடந்த மூன்றாவது குழுவின் 30வது கூட்டத்தில், "பெண்களுக்கு எதிரான வன்கொடுமைகளை ஒழிப்பதற்கான சர்வதேச நாள்" என்ற தலைப்பில் ஒரு திருத்தப்பட்ட வரைவு தீர்மானத்தை 79 நாடுகளின் ஆதரவுடன் குழு முன் வைத்தபோது, இந்த விவகாரம் மீண்டும் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. (ஆவணம் A/C.3/54/L.14/Rev.1)

இந்த வரைவின் மூலம் சர்வதேச தினத்தின் உரை ஊடாக பொதுச் சபையானது பெண்களுக்கு எதிரான வன்முறைப் பிரச்சனையைப் பற்றி பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக அன்றைய நாள் உலகளாவிய ரீதியில் பல அமைப்புக்களை இந்த நடவடிக் கைகளுக்காக அழைக்கும் வாய்ப்பு உருவாகும்.

சமூகத்தில் பெண்களுக்கு எதிரான உள்ளூர் வன்முறை கள் சட்ட, சமூக, அரசியல் மற்றும் பொருளாதார சமத்து வத்தை பெண்கள் அடைவதற்கான வாய்ப்புகளைத் தடுக் கிறது என்கின்ற எச்சரிக்கையை வரைவு வெளிப்படுத் தியது.

"பெண்களுக்கு எதிரான வன்முறை" என்பது பொது அல்லது தனிப்பட்ட வாழ்க்கையில் உடல், பாலியல் அல்லது உளவியல் ரீதியான தீங்கு விளைவிக்கும் செயல்களைக் குறிக்கும் என்று சட்டமன்றம் வலியுறுத்தி நிற்கிறது.

மேற்கூறிய முக்கியமான காரணங்களால் மூன்றாவது குழு வாக்கெடுப்பு இல்லாமல் நவம்பர் 25 ஆம் தேதி பெண்களுக்கு எதிரான வன்முறையை ஒழிப்பதற்கான சர்வதேச நாளாக அறிவிக்க ஒப்புதல் அளித்தது.

இறுதியாக, 7 பிப்ரவரி 2000 அன்று, ஐக்கிய நாடுகள் பொதுச் சபை 54/134 தீர்மானத்தை ஏற்றுக்கொண்டது. அத்துடன் நவம்பர் 25 ஐ பெண்களுக்கு எதிரான வன்முறை ஒழிப்புக்கான சர்வதேச நாளாக அதிகாரப் பூர்வமாக நியமித்து, அரசாங்கங்கள், சர்வதேச நிறு வனங்கள் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களை ஒன்றிணைத்து ஒழுங்கமைக்க அழைப்பு விடுத்தது. ஒவ் வொரு ஆண்டும் நவம்பர் 25-ல் இப்பிரச்சினை குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த அனை வரும் இணைந்து செயலாற்ற வேண்டுகோள் விடுக்கப் பட்டுள்ளது. எனவே நாமனைவரும் இணைந்து பெண் களுக்கு எதிரான வன்முறைகளை முற்றாக ஒழிக்கப் பாடுபடுவதுடன் அவர்கள் வன்முறையற்ற வாழ்வு வாழ வழி சமைப்போமாக.




தமிழீழம்
நெய்தல் குடியில்
இடியாக வந்த
ஆழிப்பேரலை
நினைவுப்பகிர்வு
டிசம்பர் 26, 2021
ஆழிப்பேரலை போல் 100
மடங்கு அழிவை
தந்த ஆக்கிரமிப்பு
படை